D
211,3 N4
[illegible]37.3
144899

வெளியீடு ... 1991
18 குல 91
... பூர், சென்னை-600008

Issued 3-6-1991

1533

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, சனவரி 25, 1991 - தொகுதி 37 - எண். 3
Friday, the 25th January 1991-Volume 37-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரு. 3.00]
[Price: Rs. 3-00

உள்ளடக்கம்

*25—1—1991*


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 391—425

2. தகவல் கோரல்—

(அ) திருப்பூர், பல்லடம் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு .. 426, 451

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து .. 427–428

(இ) பேரவைத் தலைவர் தீர்ப்புப் பற்றி உள்நோக்கம் கற்பித்துச் சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து.. 428—431

3. உரிமைப் பிரச்சினை—

துக்ளக் இதழ் மீது—15—1—1991-ஆம் நாளைய இதழில் எம்.எல்.ஏ.க்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து. 431–432

4. கவன ஈர்ப்பு—

சென்னை பொது மருத்துவமனையில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காதிருப்பது குறித்து .. .. 432—436

5. அறிக்கை அளித்தல்—

மனுக்கள் குழு ... .. .. .. 436


டி. 2 53-363—1

பக்கங்கள்

6. தீர்மானங்கள்—

(அ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு .. .. .. .. 436

(ஆ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு .. .. 437

பேரவை மீண்டும் கூடும்நாள் குறித்து.. .. 524

7. அறிவிப்பு—

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.) .. ... 437

8. சட்டமுன்வடிவு—(அறிமுகம் செய்தல்)—

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1991 .. .. ... 437—438

9. சட்டமுன்வடிவு—(ஆய்வு செய்தல்)—

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991 ... 438

10. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம் விவாதம்-தொடர்ச்சி— 439—524

திரு. கோ. பூவராகன் .. .. .. 439—451
திரு. பி. எச். பாண்டியன் .. .. 451—469
திரு. கே. ரமணி .. ... .. 469—489
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ... 489—523

11 பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. .. 524—526


144899
D
V211,31'N91
N91.37.3

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 12, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991, சனவரி 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.''

தனக்கு முழுமையாகத் தெரியாத, அடிப்படை ஆதாரம் இல்லாததைச் சொல்லி அதன்வழியில் செயற்படவும் முனைந்தால், அவர்கள் பின்னாளில் உண்மையையே கூறினாலும் அவர் மீது ஐயம் வந்துவிடும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சிவில் சர்வீஸ் மற்றும் வேலைவாய்ப்புத் தேர்வுகளுக்குத் தனிப்பயிற்சி

*10732—திரு. கி. வேணு :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கல்லூரி மாணவர்களைத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து பட்டப்படிப்பு படிக்கும் காலத்திலேயே சிவில் சர்வீஸ் மற்றும் வேலைவாய்ப்புத் தேர்வுகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு தொடங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

(அ) சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது சென்னை மாநிலக் கல்லூரியில் மட்டும் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய கல்லூரிகளில் விரிவுபடுத்தும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. கி. வேணு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.-இல் தேர்ச்சி பெற்றவர்கள் இன்றைய தினம் குறைவாக இருக்கிறார்கள். வருகின்ற காலங்களில் மிகவும் குறைவாகவே அவர்கள் இருப்பார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, அவைகளுக்கான பயிற்சிகளை அனைத்துக் கல்லூரிகளிலும் வைத்து ஊக்கத் தொகை தந்து, அந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வு எழுத வேண்டுமென்ற நோக்கத்தோடு, தாங்கள் பெறுகிற கல்வியை ஆர்வத்தோடு, ஊக்கத்தோடு பெறுகிற ஒரு மனப்பான்மை, ஆர்வம் யாரிடத்திலே இருக்கிறதோ அவர்கள்தான் இந்தத் தேர்வு எழுத முனைவார்கள். இதற்கான பயிற்சி வகுப்பு சென்னை மாநிலக் கல்லூரியிலே ஏற்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டில் பல கல்லூரிகளிலேயுள்ள மாணவர்களுடைய விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, அவர்களில் அதிக தேர்ச்சி உடையவர்கள், இதில் ஈடுபடக்கூடியவர்கள் என்ற முறையில், போட்டியிட்ட 200 மாணவர்களில் 42 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இது எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா மாணவர்களுக்கும் என்ற பொதுவான நோக்கத்திலே கருதப்படக்கூடிய ஒன்றல்ல. மேலும் பல்கலைக் கழகங்கள் இதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கி. வேணு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலேயிருந்தாவது அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இப்படிப்பட்ட பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும். ஊக்கப்படுத்த முயற்சிக்கப்படும்.

திரு. [illegible] முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.ஏ., பி.எஸ்ஸி., பட்டம் பெற்றுவிட்டு அதனால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், படித்துவிட்டு பல்லாயிரக்கணக்கான பேர்கள் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்த நிலையைப் போக்க, படிப்படியாக பி.ஏ., பி.எஸ்ஸி., பட்டப் படிப்புப் படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : The question is irrelevant.

திரு. எம். இராமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளாக இருக்கிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகத் தேர்வு செய்யப்பட முடியவில்லை. அதற்கு, அளிக்கப்படும் பயிற்சி காரணமா அல்லது தகுதியின்மை காரணமா? அவைகளில் தேர்ச்சி பெறுவதற்கு வேண்டிய தகுதியைப் பெறுவதற்குப் பயிற்சியைக் கொடுத்து நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தேர்வு பெறுவதற்கு அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று பொதுவான கருத்து. தமிழ்நாட்டில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்பது. நம்முடைய மாணவர்கள் அதிக எண்ணிக்கையிலே தேர்விலே வெற்றி பெற்றாலும்கூட, ஒவ்வொரு மாநிலத்திலேயும் பிற மாநிலத்தவர்கள் பலபேர் இருக்கத்தான் செய்வார்கள். மற்றொன்று, நம்முடைய மாணவர்கள் அதிக எண்ணிக்கையிலே இந்தத் தேர்விலே கலந்து கொள்வார்களானால், அந்த அளவுக்கு விகிதாச்சாரத்திலே வெற்றிபெற முடியும். அதற்கு மாணவர்களிடத்திலே ஒரு ஊக்கம் ஏற்படுமானால், இந்தப் போட்டியிலே தாங்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்புவார்களானால், தொலைக்காட்சியிலே நடைபெறுகிற 'குவிஸ் போட்டி'-யைப்போல, 'வினாடி வினா' போட்டியைப் போல பல போட்டிகளிலே ஈடுபட்டு ஒரு பயிற்சி பெற ஆர்வம் வருமானால், அவர்கள் வெற்றி பெறமுடியும் என்பது என்னுடைய நம்பிக்கை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுதந்திரம் கிடைத்தவுடனே கிட்டத்தட்ட இந்த ஐ.ஏ.எஸ்., கேட்டகிரியிலே நம்முடைய தமிழ்நாட்டில்தான் 60 பர்சென்டேஜுக்கு மேலே பரீட்சை எழுதி , தேர்வு எழுதியதாக நான் பத்திரிகையிலே படித்துக் கொண்டிருந்தேன். வர, வர, அது குறைந்து விட்டது. இப்பொழுது ஐ.ஏ.எஸ்., தேர்விலும், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்விலேயும் தமிழ்நாட்டினுடைய பர்சென்டேஜ் குறைந்துள்ளதால் தமிழ்நாட்டிலே அதற்காகப் பயிற்சி கொடுப்பது ஏதாவது பர்சென்டேஜ் ஏறுமா என்ற நோக்கத்திலே செய்வது. நல்ல காரியம்தான். அதனால் இப்போழுது ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குத் திட்டவட்டமான விடை தரக்கூடிய நிலையில் நான் இல்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., போன்றிருக்கக்கூடிய அனைத்திந்திய தேர்வுகளிலே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பங்கு பெறுவதும், வெற்றி பெறுவதும், தேர்ந்தெடுக்கப்படுவதும் சமீப காலங்களிலே மிக மிகக் குறைந்து கொண்டு வருகிறது என்று பல தரப்பிலேயும் சொல்லப்படுகிறது. அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் இந்தத் தேர்வுகளிலே பங்கு பெறுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற அனைத்திந்தியத் தேர்வுகளிலே தமிழ்நாட்டிற்கு விகிதாச்சாரம் குறைந்து வருவதை மாற்றுவதற்காக எல்லாப் பல்கலைக் கழகங்களிலேயும் தகுதியுள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தப் பயிற்சிகளை முறையாகத் துவக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்று தனியாகவே இந்தப் பயிற்சி சில ஆண்டுக்காலமாக அவர்களிலே ஆர்வம் உடையவர்களுக்கு, திறமையுடையவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி தருகிற காரணத்தாலேயே மட்டும் அதிக அளவிற்கு நாம் பயன் பெற முடியும் என்பது என்னுடைய எண்ணம் அல்ல. இயற்கையிலேயே அதற்கான மனப்பான்மை, ஒரு ஊக்கம், தொடக்கத்திலேயிருந்து கல்வியிலே ஒரு முனைப்பு ஆர்வம் இவை இருக்குமானால் அவர்கள் அதிகம் வெற்றி பெற முடியும் என்பது என்னுடைய கருத்து. அதற்குத் தமிழ் நாட்டிலே கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்பது ஒரு நியாயமான எண்ணம். கல்வித் தரத்தை உயர்த்துவது என்பதும், கல்வியைப் பரப்புவது என்பதும், இரண்டுக்கும் இடையிலே இப்பொழுது ஒரு போட்டி இருக்கிறது. ஏனென்றால், பரவலாகக் கல்வியைக் கிராமத்து மக்களுக்கு வழங்க வேண்டிய ஒரு மாபெரும் கடமை நமக்கு இருக்கிறது. இந்த அடிப்படை பணியைவிட பல்கலைக் கழகத்தை வளர்ப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்திய வேறு சில மாநிலங்களில் குறிப்பிடத்தக்க, விரல் விட்டு எண்ணக்கூடிய இந்த வெற்றி பெறக் கூடியவர்கள் சற்றுஅதிகம்இருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லாவற்றையும்விட, ஆங்கிலம் மட்டும் இருந்தபோது, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும், தென்னாட்டைச் சேர்ந்தவர்களும் பெற்ற அந்த வெற்றியைவிட இப்பொழுது இந்தியும் அதனுடைய இடத்திலே பங்கு கொள்கிற நிலை தேர்விலே வருகிறபொழுது பலபேர் இந்தி மூலமாகத் தேர்வு எழுதி அதிக அளவிற்கு வருகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு கலைஞர் அரசு, கல்லூரி மாணவர்களுக்குத் தகுதி அடிப்படையில், சென்னையில் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்துவது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இதை எல்லா இடங்களிலும் அமல்படுத்தாவிட்டாலும், முக்கியமான நகரங்களாகிய மதுரை, திருச்சி மற்றும் கோவை போன்ற நகரக் கல்லூரிகளுக்கு விரிவு செய்தால் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பயன் பெற முடியும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட பல கருத்துக்கள் இருக்கின்றன. அவை பரிசீலனைக்கு உரியன. ஆனால் உறுதிமொழி ஆகாது.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அதிகம் பேர் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் தேர்வு செய்யப்பட வேண்டும், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு, '' கார்த்திகேயன் கமிட்டி '' என்ற ஒரு குழுவை நியமனம் செய்தது. அந்தக் குழுவினுடைய பணி என்ன ? அந்தக் குழு அரசுக்கு ஏதாவது பரிந்துரை வழங்கியிருக்கிறதா ? அதன் மீது அரசு ஏதாகிலும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தக் குழு சற்று விரிவான அறிக்கையை வழங்கியிருக்கிறது, பல்வேறு நிலைகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நல்ல ஆலோசனைகள் அரசாலும், அதேபோல பல்கலைக் கழகங்களாலேயும் பரிசீலிக்கப்பட்டு, ஒல்லும் வகையால் நிறைவேற்றப்படுகின்றன.

9-10 மணி

### பகுத்தறிவுக் கருத்துக்களைப் பாடமாக வைத்தல்.

*12020 திரு. இ. புகழேந்தி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்களின் பகுத்தறிவுக் கருத்துக்கள் பள்ளிக்கூடங்களில் பாடங்களாக வைக்கப்படுமா ?

[1991 சனவரி 25

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலை
வர்களின் பகுத்தறிவுக் கருத்துக்கள் அடங்கிய பாடங்கள்
மற்றும் பாடல்கள், பள்ளிப் பாடநூல்களில் ஓரளவு இடம் பெற்
றுள்ளன.

**திரு. இ. புகேழந்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு மதக் "கலவரங்களின்றி, மனிதநேய
உணர்வுகள் வளர்ந்திருக்கின்றன என்றாலும், தமிழகம்
இப்படி அமைதிப் பூங்காவாக விளங்குவதற்கு, தந்தை
பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களுடைய இடை
விடாத பகுத்தறிவுப் பணிகள் ஒரு காரணமாகும். அப்படிப்
பட்ட உலகின் ஒப்பற்ற சிந்தனையாளர்களான தந்தை
பெரியார், அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுக் கருத்துக்
களை, மாணவர்கள் இளம் வயதிலேயே பள்ளிக்கூடங்களில்
பயில்வது, எதிர்காலத் தமிழகத்திற்குச் சிறப்பூட்டும். ஆகவே,
விஞ்ஞானிகள், உலக நாத்திகவாதிகள், பகுத்தறிவுவாதிகள்
ஆகியோரின் கருத்துக்களைத் தொகுத்து, 'பகுத்தறிவு விஞ்
ஞானம்' என்ற ஒரு புதிய பாடப்பிரிவினை உருவாக்கி,
அதை மாணவர்கள் விருப்பப் பாடமாகப் பயில்வதற்கு—பயில
வைப்பதற்கு, அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மனிதனை சிந்திக்க வைக்கிற அந்த
முயற்சியிலேகூட, பல்வேறு படிநிலைகளிலேதான் அவற்றை
நிறைவேற்ற முடியும். அவர்களுடைய வயது, அவர்கள் பெறு
கிற கல்வி, அவர்கள் பெறவேண்டியப் பொது அறிவு இவை
களைக் கருத்திலே கொண்டு, பாடத் திட்டம் அமைக்கிற
போது, பகுத்தறிவுக் கருத்துக்களைத் தனியாக ஒரு மதம்
போல—ஒரு கட்சிக் கொள்கையைப் போல—தனியாக ஒரு பாட
மாகப் புகுத்துவது என்பது அவ்வளவு சிறப்பல்ல. அறிஞர்
அண்ணாவோ, தந்தை பெரியாரோ, பாவேந்தர் பாரதி
தாசனோ, டாக்டர் அம்பேத்கரோ, இன்னும் பல்வேறு உலகம்
பாராட்டுகிற அறிஞர்களோ சொன்ன கருத்துக்கள், அவர்
களைப் பற்றிய குறிப்பு வருகிறபோது, அவர்கள் வாயிலாக
வந்த ஒன்றிரண்டு கருத்துக்கள் இடம்பெறுவதன் மூலமாகத்
தான் பக்குவமாக இளம் உள்ளங்கள் அந்தத் தெளிவைப் பெற
முடியும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

**திரு. இ. புகழேந்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்
முடைய தமிழக முதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர்
கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் இனமானக் காவலர்



1991 சனவரி 25]

பேராசிரியர் ஆகியோர்கள் உரையாற்றிய கட்டுரைத் தொகுப்பு
கள், வெளியிட்டு செயல்படுத்திய அத்தனையையும் அரசே
மலிவு விலையில் புத்தகமாகக் கொடுப்பதற்குச் செயல்படுமா?
அப்படிப்பட்ட கருத்தினைப் பரிசீலிக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மலிவு விலையிலே
தரப்படுமா என்று கேட்டார்கள். அது தனிக் கேள்வியாக
இடம் பெற வேண்டும். இருந்தாலும், அவையெல்லாம்
மிகவும் மலிந்துபோய் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்
துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு
இணையாக நூல் யாத்துக் கொடுத்த புலவர் குழந்தையின்
'இராவண காவியம்' பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பாடங்களைத் தெரிவு செய்வது என்ற
நிலையிலே உள்ள குழு, ஒவ்வொரு நூற்றாண்டிலே, ஒவ்வொரு
கவிஞருடைய கருத்தின் ஒவ்வொரு பகுதியை, ஒரு பத்து
அல்லது இருபது பாடல் என்று தெரிவு செய்துதான் பாடமாக
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'இராவண காவியம்'
போன்ற நூல்கள் பல்கலைக் கழகத்திலே தமிழில் சிறப்புத்
தேர்ச்சி பெறுகிற மாணவர்கள் பயிலக்கூடிய ஒரு சிறந்த
இலக்கியமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சில பாடல்கள் பாடத்திலே
சேர்க்கப்பட்டுள்ளன. செய்திக்காகச் சொல்கிறேன்.

**திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :** மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, எதிர் காலத்திலாவது மூடப் பழக்க
வழக்கங்களையுடைய பாடப் புத்தகங்களையெல்லாம் அகற்றி,
இன்றைக்கு சமூகத் துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய விஞ்
ஞான வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு, அதிகப்படியான
அளவுக்கு விஞ்ஞானங்களை எடுத்துச் சொல்கிற அடிப்படை
யிலே, பாடப் புத்தகங்களை அமைப்பதோடு, கற்பனா வாதங்
களும், பழமை வாதங்களும் உள்ளடக்கிய பாடத் தொகுப்புக்
களை அகற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

[1991 சனவரி 25

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல நோக்கத்தோடு கேட்கப்பட்ட கேள்விதான் என்றாலும்கூட, பண்பாட்டு அடிப்படையிலே உள்ள பழைய நூல்களில் இடம் பெற்றுவிடுகிற பழைய கருத்துக்களிலிருந்து விடுபடுவது அவ்வளவு எளிதல்ல. புதிய சிந்தனைகள் பிறப்பதன் மூலமாகத்தான், அவர்களாகத்தான் அந்தச் சிந்தனையை மாற்றிக் கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட, தீண்டாமையைப் புலப்படுத்துகிற கருத்து, சாதி வேற்றுமை அடிப்படையிலே சில சாதிகளைக் குறிப்பிடுகிறபோது இழிவு தோன்றுகிற கருத்து, மத வேற்றுமைகளை வளர்க்கிற கருத்து அல்லது பகைமையை வளர்க்கிற கருத்து அல்லது யாராவது ஒருவரைப் பற்றிய குறிப்பில் முரண்பாடு அல்லது பகையை ஏற்படுத்தக்கூடிய அப்படிப்பட்ட கருத்துக்கள் இல்லாமல் பாடப்புத்தகங்கள் அமைய வேண்டும் என்பது தான் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

9-15 மணி

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் பெண்களைச் சமத்துவம் அற்ற முறையில் சித்தரிப்பதைக் கைவிட வேண்டும் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். குறிப்பாக, ஒன்றாம் வகுப்புப் புத்தகத்தில் ஒரு படம் போட்டுக் காட்டப்படுகிறது. அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்வதாகக் காட்டப்படுகிறது. அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால் பேப்பர் படிக்கிறார் ; அம்மா சமையல் செய்கிறார் ; அண்ணன் படிக்கிறான் ; ஆனால் தங்கை என்ன செய்கிறாள் என்று சொன்னால் வீடு பெருக்குகிறாள். இப்படிச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டும் என்று '' சார்க் '' நாடுகள் அறிவித்திருக்கக்கூடிய சூழ்நிலையில் நம்முடைய அரசும் அதுபோன்ற படங்களை எடுத்துவிட்டு, பெண் குழந்தைகள் படிக்க வேண்டும் என்ற முறையில் இதைக் கொண்டுவர முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்களுடைய கருத்து வரவேற்கத் தக்கது. ஆனால் 100-க்கு 70 பெண் குழந்தைகள் என்ன செய்கிறார்களோ அதைத்தான் எழுதிக் காட்டியிருக்கிறார்கள். 100-க்கு 30 பெண் குழந்தைகள்தான் படிக்கிற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கியுள்ளோம். அனைவரும் படிக்கும் நிலையை உருவாக்க வேண்டி இருக்கிறது. அது அரசினுடைய நோக்கம். எனவே பெரும்பான்மையாக உள்ள சூழ்நிலையில் கருத்துக்கள் இடம் பெறுவதை அடியோடு தவிர்க்க முடியாது. உண்மைகளைப் புரிந்துகொள்வதன் மூலமாகத்தான் நியாயம் வெற்றி பெறும் என்பது என்னுடைய எண்ணம்.



1991 சனவரி 25]

## பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு

**5038—திரு. சு. குருநாதன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை எண். 99, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 26—2—1988-ல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒதுக்கப்பட்ட 3 சதவீதம் இடங்களில், 1 சதவீதம் கண் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, கண் பார்வையற்றவர்கள் செய்யக்கூடிய பணிக்குத் தேவையான ஆட்கள், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடக்கூடிய விழி இழந்தோர் கல்லூரி உள்ளது. ஏராளமான மாணவர்கள் அதிலே படித்து பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஏ.பி.யாக இருக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். நாற்காலி, சோபா பின்னக் கூடியவர்களும் இருக்கிறார்கள். பாளையங்கோட்டையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் விழி இழந்தவர்களுக்குத் தகுதியான வேலை அதிகப்படியாகத் தர அரசு முன்வருமா? அவர்கள் போர்வை நெய்கிறார்கள். மற்றும் நாற்காலி பின்னுகிறார்கள். அந்த வேலைகளாவது அவர்களுக்குத் தரப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்புகளில் மட்டும் தான் விழி இழந்தோருக்கான வேலைகளைத் தர முடியும். குறிப்பாக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இயங்காத பகுதிகளில் மட்டும் தான் அவர்கள் பணியாற்ற முடியும். ஆகவே அவர்களுக்கு நாற்காலி பின்னுதல், பேருந்து இருக்கைகள்

ைதத்தல், பேருந்து நிலையங்களில் அறிவிப்பாளராக இருத்தல், விசாரணைப் பிரிவுகளில் பதில் சொல்லுதல் போன்ற பணிகளில் மட்டுமே அவர்களைப் பயன்படுத்த முடியும். அப்படிப்பட்ட பணிகளில் இதுவரையில் 31 பேர் நிரந்தரப் பணியாளர்களாக, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். எங்கெங்கே அவர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகள் ஏற்படுகிறதோ அந்த வேலை வாய்ப்புகள் அவர் களுக்குக் கொடுக்கப்படுகின்றன. சில இடங்களில் அவர்கள் 4 பேர், 10 பேர் ஒன்றாகக்கூடி அவர்களால் இயன்ற பணி யைக் கான்ட்ராக்ட் முறையில் எடுத்துக் செய்து கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட பணியாளர்களும் இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் கள்.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மேற்கொள்ளும் புதிய தடங்களைப் பொறுத்தவரையில், அதாவது தனியார் போக்கு வரத்துக் கழகங்களை மேற்கொள்கிறபோது தனியார் துறையில் பணியாற்றுகிற உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்கும் எண்ணம் அரசின் குறிப்பில் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்துத் துறைகளை அரசு மேற்கொள்ளும்போது இந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் அவர்கள் எந்தப் பணியில் நியமனம் செய்யப்பட்டார்களோ, அந்தப் பணியைச் சரிவரச் செய்ய முடியவில்லை என்று வேலையை விட்டு எடுத்துவிடுகிறார்களே, அப்படிப்பட்டவர்களுக்கு அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மாற்று வேலைகளைக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பிரச்சனை பற்றி ஏற்கனவே அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு கை ஊனமுற்ற நபர் நடத்துனர் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டு பணியிலே அமர்த்தப்பட்ட பிறகு அவரால் டிக்கெட் கொடுக்க இயலவில்லை என்ற காரணத்தாலே நிர்வாகத்தினர் அவரைப் பணியிலே இருந்து வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் அப்படிப்பட்ட ஊன முற்றவரால் எந்தப் பணியை அலுவலகத்திலே செய்ய முடியுமோ அவருடைய கல்விக்குத் தகுந்தாற்போல் மாற்றித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.



மணி 9-20

## இலவச மருத்துவ சிகிச்சை

* 5272—திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் பணியாற்றும் ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, லாரி டிரைவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க மாநகரக் காவல் துறை நடவடிக்கை ஏதும் எடுத் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மற்றைய மாவட்டங்களுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1989 ஆம் ஆண்டு 20—3—1989 முதல் 26—3—1989 வரை கொண்டாடப்பட்ட " சாலைப் பாது காப்பு வார " விழாவின்போது ஆட்டோ ரிக்ஷா, டாக்சி மற்றும் இதர வாகன ஓட்டுநர்களுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது.

(ஆ) வடாற்காடு-அம்பேத்கார், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் மட்டும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதைத் தவிர மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கான வேறு எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா போன்ற இப்படிப்பட்ட தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய சிதறிக் கிடக்கும் தொழிலாளர்கள்—' அன்-ஆர்கனைஸ்ட் ஒர்க்கர்ஸ் ' இவர் களுக்கு எந்த சமூகப் பாதுகாப்புச் சட்டங்களும் அமலாகாது இருந்து கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே ஒருசில முகாம்கள் நடத்தி மருத்துவ சிகிச்சை மட்டுமல்ல, அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, மருத்துவ சிகிச்சை உட்பட சட்டப்பூர்வமாக சில நடவடிக்கைகளை அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது திட்டத்தை முன் வைக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

144899

[1991 சனவரி 25

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விபத்திலே இறந்து போகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற திட்டப்படி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கக் கூடிய ஒரு திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மருத்துவப் பரிசோதனை பொறுத்தவரையில் ஆங்காங்கு சாலைப் பாதுகாப்பு வார விழாவின்போது சில மாவட்டங்களில் செய்திருக்கின்றார்கள். பல மாவட்டங்களில் அது நடைமுறைக்கு வரவில்லை. வருகின்ற ஆண்டில், வருகின்ற மார்ச் மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வார விழா என்று கொண்டாடும்போது எல்லா மாவட்டங்களிலும் திட்டமிட்டு ஆங்காங்கே இருக்கக்கூடிய பெரிய மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், தனியார் சேவை நிறுவனங்கள் இவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து இப்படிப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

## அனுமதி பெறாத மனைப் பிரிவுகளிலுள்ள வீடுகளுக்கு அங்கீகாரம்

*** 9182—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனுமதி பெறாத மனைப் பிரிவுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வரி மட்டும் வசூல் செய்யும் உள்ளாட்சிகள், அவைகளுக்குச் சாலைகள், விளக்குகள், குடிநீர் போன்ற வசதிகள் செய்து மனைகளை அங்கீகாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

19—4—1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 1—1—1989 ஆம் தேதியில் சொத்து வரி வசூலிக்கப்படுகிற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகள் அனைத்தையும் நகராட்சிகள் எடுத்துக் கொண்டு அந்த மனைப் பிரிவுகளில் குடியிருப்போருக்கு சாலை வசதி, விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்புகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.



1991 சனவரி 25]

**திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அனுமதி இல்லாத குடியிருப்புகளில் வீடு கட்டுபவர்களை உள்ளாட்சி மன்றங்கள் எதுவும் ஆரம்பத்தில் தடுப்பதில்லை. ஆனால் கட்டி முடித்துவிட்ட பின்னால் வரியும் வசூலித்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படாமல் இருப்பதால், அரசால் விரைந்து அந்த திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட நிலை அதிகமாக நீடிக்கவில்லை. ஏற்கெனவே 10, 15 ஆண்டுகளாக இப்படி அனுமதி இல்லாமல் கட்டிய கட்டிடங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்திற்காகவும், பொது மக்களுடைய வசதியை ஒட்டி பல உறுப்பினர்கள் இதே அவையில் சொல்லிய கருத்தையும் பரிசீலித்து இப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் அதைப்பற்றி பிறகு ஆலோசித்து கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த நிலை குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள் வரையிலாவது, அந்தக் காலவரையறை வரையிலாவது விரைந்து செயல்படுத்த அரசு ஆணையிடுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆரம்பப் பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் அவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தாலும், இனிமேல் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதையொட்டி அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் தருவாயில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.25 மணி

## கொளத்தூரில் மார்க்கெட்டிங் சொசைட்டி

***8289—திரு. மா. சீரங்கன் :**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக சாகுபடி செய்து வருகின்ற விவசாயிகள் மார்க்கெட்டிங் சொசைட்டி இல்லாமல் அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக சாகுபடி செய்து வருகின்ற விவசாயிகளுக்கு உதவுவதற்காக, சேலம் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. எனவே மார்க்கெட்டிங் சொசைட்டி இல்லாமல் அவதிப்படும் வினா எழவில்லை.

(ஆ) ஏற்கனவே ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி செயல் படுவதால், புதிதாக ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. மா. சிரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் ஜில்லா, கொளத்தூர் பஞ்சாயத்துப் பகுதியில் பெரும் பகுதி விவசாயிகள் விவசாயத்தை நம்பி வாழ வேண்டியவர்களாதலால் அதிகமாக அவர்கள் மிளகாய் பயிரிடுகிறார்கள். அவ்வாறு மிளகாய் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் அவற்றை மார்க்கெட்டுக்கு விற்பதற்காகக் கொண்டுவரும்போது அவர்களை ஏமாற்றும்படியான நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் நஷ்டம் அடையும் நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். ஆனால் அங்கே சில தனியார்கள் வாரத்திற்கு இரண்டு முறை மார்க்கெட் மூலம் மிளகாயை வாங்குகிறார்கள். அவ்வாறு அவர்கள் வாங்கும் போது நாள் ஒன்றுக்கு 20 லோடுகளுக்கு மேல் மிளகாய் எடுத்துச் செல்கிறார்கள். மூட்டை ஒன்றுக்கு 1 ரூபாய் வீதம் அவர்கள் அதற்குப் பெறுகிறார்கள். அந்த இடம் ஏற்கனவே காவல் துறைக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம். அதைத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டு, விவசாயிகளிடத்திலிருந்து அப்படிப் பணமும் வசூலிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகளை இவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு, நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் பகுதியில் மிளகாய் சுமார் 800 ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஹெக்டேருக்கு 1000 கிலோ வீதம் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டு வருடத்திற்கு, 800 டன் மிளகாய் உற்பத்தியாகி, இதில் 500 டன் மிளகாய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மாண்பு





மிகு உறுப்பினர் சொன்ன சங்கடத்தைப் போக்கும் வகையில், மிளகாய் வியாபாரத்திற்காக மார்க்கெட்டிங் சொசைட்டி ஒன்றை கொளத்தூரில் நடத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால் வருடத்தில் 3 தடவை மட்டும், 3 மாதம் மட்டும் விற்பனைக்கு மிளகாய் வருவதால் மிளகாய் விற்பனைக்காக என்று மட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கொளத்தூரில் தேவையில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள விவசாயிகளின் குறைகள் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சிரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 மாதம் மட்டும் என்று சொன்னார்கள். ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை, 6 மாதத்திற்கு மேல் மிளகாய் விற்பனைக்கு மார்க் கெட்டுக்கு வருகிறது. ஒரு ரூபாய் வீதம் அங்கே சில தனியார்கள் மூட்டை ஒன்றுக்கு வசூல் செய்வதால் 32 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வீணாகிறது. அதுமட்டுமல்ல. விவசாயிகளிடம் ஒரு நாள் திடீரென்று 20 ரூபாய் என்று விலை சொல்வார்கள். மறுநாள் 15 ரூபாய் என்றும், 10 ரூபாய் என்றும் சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி அங்கே மோசடி நடைபெறுகிற காரணத் தால் விவசாயிகளுக்கு நிலையான பாதுகாப்பு இல்லாத சூழ் நிலை இருக்கிறது. ஆகவே, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம், அதை அங்கே ஏற்படுத்தி விவசாயிகள் நல்ல விலை பெறவும், ஆக்கிரமிக்கப்பட்டதை அப்புறப்படுத்தவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் அங்கே 6 மாதம் மிளகாய் வருகிறது என்று சொன்னார்கள். 6 மாதமும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் ஏலம் நடத்த ஏற்பாடு செய்கிறோம். வேறு சில சங்கடங்களையும் இங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கடங்களும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தானியங்கள் கொள்முதல்.

*11388—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள் முதல் செய்வது போல், பயறு, உளுந்து மற்றும் புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் செய்யும் திட்டம் அரசிடம் உள்ள தா

[1991 சனவரி 25

(ஆ) ஆம் எனில், எப்போது கொள்முதல் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயறு, உளுந்து போன்ற புஞ்சைத் தானியங்களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க முடியாமல் சிரமப்பட்டு, தனியாரிடம் விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தனியார்கள் அவ்வப்போது என்ன விலையை அவர்கள் இஷ்டத்திற்கு நிர்ணயிக்கிறார்களோ அந்த விலைக்குத்தான் விவசாயிகள் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அதனைத் தவிர்க்க, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பயறு, உளுந்து மற்றும் இதர தானியங்களைக் கொள்முதல் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயறு வகைகள், குறிப்பாக வானம் பார்த்த பயிர்களாக இருக்கின்ற காரணத்தினால், மழையையே நம்பி இருக்கிற காரணத்தினால், அவற்றைக் கொள்முதல் செய்வதற்காக என்று தனிக் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்துவது சாத்தியம் இல்லை.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பயறு, உளுந்து ஆகிய வகைகளுக்கு, நான் முன்னாலே குறிப்பிட்டது போல, ஒரு தனிக் கடை ஏற்படாவிட்டாலும்கூட, ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயாவது அதை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் அந்தப் பயறு வகைகளைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு இத்தகைய சங்கடங்கள் வருகின்றன என்பதை விளக்கமாகக் கடிதத்தின் மூலம் எழுதி எனக்குத் தருவார்களேயானால், அந்தச் சங்கடங்களை எல்லாம் ஆய்வு செய்து, அவற்றை எப்படிப் போக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு கலந்து பேசி, உரிய முடிவுகளை எடுக்கலாம்.



1991 சனவரி 25]

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் பெரும்பாலான நெல் கொள்முதல் மையங்களில் நெல் மூட்டைகளை வெளியிலே அடுக்கி வைக்கிற நிலை இருக்கிற காரணத்தால், மழையால் பெரிதும் சேதம் ஏற்படுவதோடு, தரை வாடகையும் அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே நிரந்தரமாக நெல் கொள்முதல் மையங்களுக்குக் கட்டிடங்களை அமைக்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பயறு, உளுந்து, புஞ்சைப் பயிராக இருக்கிறதென்று சொன்னார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலத்தில் பயறு, உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 2, 3 இலட்சம் ஏக்கர்களில் அந்தப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அந்தப் பயறு, உளுந்து விற்பனைக்கு வரும் போது, அவற்றைத் தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பாக, திருவாரூர் மார்க்கெட்டில் பல்லாயிரக் கணக்கான மூட்டைகள் ஓராண்டுக்குக் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதற்காகத் தனி ஏற்பாடு செய்ய வேண்டியதில்லை. இப்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நெல் கொள்முதல் நிலையங்களிலேயே இவற்றை வாங்குவதற்கு ஏற்பாடு செய்து தந்தால் அது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இவைகளை—பயறு வகைகளைக் கொள்முதல் செய்வதா அல்லது வேறு ஏற்பாடுகள் செய்வதா என்பதை அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

## கிருதமால் நதித் திட்டம்.

*2639—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருதமால் நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் விரைவில் நிறைவேற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், சிவகங்கை வட்டம், அம்பலத்தடி கிராமத்தில், கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டி மானாமதுரை வட்டத்தில் உள்ள இராக்கியம், இடைமறிச்சான், ஆகிய கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்க 1990 ஆம் ஆண்டுத் திட்டத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனாலும் அந்தப் பகுதி மக்கள் அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அருப்புக்கோட்டைத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்களும் அந்த இடத்தை மாற்றி, இருஞ்சிறை அருகே அணை கட்டி, இருஞ்சிறை, உலக்குடி, மறையூர், வரிசையூர், மற்றும் ஏனைய கண்மாய்களுக்குக் கூடுதல் நீர் வரத்து தருவதற்கான திட்டமொன்று விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில், இரண்டாவது இடத்தை ஆய்வு நடத்தி, அந்த இடத்திலே அணையைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அம்பலத்தடி கிராமத்திலேகூட வேறொரு அணையைக் கட்டுவதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1975-லே வைகையிலே இருக்கின்ற விரகனூர் அணையிலிருந்து பெரம்பலூர் கால்வாய் மூலமாக, கிருதமால் நதித் திட்டம் செயல்படுமென்று அன்றையத்தினம் அறிவித்தார்கள். இடையிலே வந்த ஆட்சி அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. இப்போது அந்தத் திட்டத்தை எடுத்திருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வைகையிலே இருக்கிற பெரம்பலூர் அணையிலிருந்து கிருதமால் நதித் திட்டம் பெரம்பலூர் கால்வாய் மூலமாக இதே இருஞ்சிறை, மற்ற கிராமங்களுக்கு வருவதோடு, ஏற்கனவே கிருதமால் நதியினுடைய உரிமை பெற்ற இடமாக இருக்கக்கூடிய அபிராமம், தலக்குடி, குளவாசல், வல்லக்குளம் போன்ற கண்மாய்களுக்கும் இந்தப் பாசனம் விரிவுபடுத்தப்படுமா? அதை மறு பரிசீலனை செய்து, திட்டத்தை விரிவு படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*9-35 மணி*

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இருஞ்சிறையில் கட்டுகிற அணை, அதைக் கட்டிய பிறகு வருச்சூர், மறையூர் ஆகியவற்றுக்கெல்லாம் தண்ணீர்





போய்க்கொண்டு இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் காதர் பாட்சா சொன்ன அந்தக் கருத்துபற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகையிலிருந்து எங்கள் பகுதிக்கு உரிமை கொடுக்காவிட்டாலும், சர்ப்ளஸாக மழைக் காலங்களில் வைகையில் வீணாகப் போகிற தண்ணீரை, விரகனூர் அணை தடுத்து இருக்கிற—அந்த வைகை சீரமைப்புத் திட்டத்திலே தடுத்து அணை கட்டி இருக்கிற காரணத்தாலே, மழைக் காலத்திலே உபரியாக வருகிற தண்ணீரை எங்கள் பகுதி போன்ற பிற்படுத்தப்பட்ட பகுதி—தேவர் திருமகன் மாவட்டம், நரிக்குடி பகுதியையும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதியையும் விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, தற்போது வைகையில் உபரிநீர் இல்லை. ஆனால், வைகைப் பகுதியும், மற்றப் பகுதிகளும் நவீனப்படுத்துகிற திட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு அதிலே வருகிற உபரிநீரையும், மழைக்காலங்களில் வருகிற உபரி நீரையும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வகையில் அமைப்பதற்கு அரசு மேற்கொள்ளும்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருதமால் நதி அணைக்கட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அருப்புக்கோட்டைத் தொகுதியிலுள்ள திருச்சுழி தாலுக்காவில் அண்மையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டி, அந்தத் திட்டத்தைத் துவக்கிவைத்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் எந்த ஆண்டு துவங்கும்? அது துவங்குவதற்கான சரியான உத்தரவுகளை அரசு பிறப்பித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** துவங்குவதற்காகத்தானே கால்கோள் விழா நடத்தப்பட்டு இருக்கிறது! மீண்டும் இது எந்த ஆண்டு துவங்கும் என்றால்......?

**திரு. வே. தங்கபாண்டியன் :** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உத்தரவு போட்டு விட்டுக் கால்கோள் விழா நடத்தி இருக்கலாம் போல் இருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** அம்பலத்தடி கிராமம் அருகே கட்ட வேண்டுமென்று தான் பார்ட்-2 ஸ்கீமில் நாம் சேங்க்ஷன் கொடுத்தோம். ஆனால், அதன்படி கட்டுவது என்றால் நாளைக்கே கடைக்கால் எடுக்கத் தயார். ஆனால், நாங்கள் அடிக்கல் நாட்டிய பிறகு அந்த ஊர் மக்களும், மாண்புமிகு

உறுப்பினர் தங்கபாண்டியனும், ''இல்லை, இல்லை, இதை மாற்றி இருஞ்சிறை அருகே கட்ட வேண்டும்'' என்று கூறிய காரணத்தாலே ஒரு டைவர்ஷன் அதற்காக சில ஆய்வுகள் நடத்த வேண்டி இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொண்டால், அம்பலத்தடியிலேயே நாளைக்கே கட்டத் தயாராக இருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்கிறாரா ?

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர், காதர்பாட்சாவுக்கும், தங்கபாண்டியனுக்கும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். கிருதமால் நதியினுடைய பூர்வீகம் மதுரை திடீர் நகரில் ஆரம்பமானது என்று வரலாறு இருக்கின்றது. அதைச் செப்பனிடும் முயற்சியில் பொதுப்பணித்துறை இறங்கினால், இப்போது இருக்கக்கூடிய பெரியார் பஸ் ஸ்டாண்டு தெப்பக்குளமாக இருப்பது மாறும் என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுவாக, கிருதமால் நதி, துவரிமான் கண்மாயில் உபரிநீரில் உற்பத்தியாகி ஓடிக்கொண்டு இருந்தது. காலப்போக்கிலே அந்த ஆறு மறைந்து போய்விட்டது. கொம்பைக் கண்மாயில் உற்பத்தி ஆகித்தான் மேலவெள்ளூர் கண்மாய் போன்ற பகுதிகளுக்கு அது பாசனத்தை அளித்துக்கொண்டு இருக்கிறது. ஆக, அந்தத் தூர்ந்து போன பகுதியைப் புதைபொருள் ஆராய்ச்சியைப் போலக் கண்டு பிடித்து மராமத்து செய்யவேண்டி இருக்கிறது. அதற்கென்று ஒரு தனித் திட்டம் அரசின் சார்பிலும், மாநகராட்சி சார்பிலும் தீட்டப்படுகிறது.

பவானி ஆற்றின் குறுக்கே பாலம்.

*10105—திரு. தூ. க. சுப்பிரமணியம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், கள்ளிப்பட்டி அருகில் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம், துணைக் கேள்வி உண்டா ?

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைத்துக் கொடுத்தால் கோபிச்செட்டிப்பாளையம் தாலுக்காவின் தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சென்று வருகிறவர்களுக்கு வசதியாக இருக்கும். ஏனென்றால் 15 கிலோ மீட்டர் சுற்றி அத்தாணி வழியாகவும், இன்னொரு 20 கிலோ மீட்டர் சுற்றி பங்களாப்புதூர் வழியாகவும் தான் கோபிச்செட்டிப்பாளையம் செல்ல முடியும். இதைத் தவிர்ப்பதற்கு பெரிய பாலம் அமைத்துக் கொடுக்காவிட்டாலும், தரைமட்டப் பாலம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கள்ளிப்பட்டிக்கும், கோபிக்கும் நஞ்சாகவுண்டன் பாளையம் வழியாகச் செல்ல வேண்டுமானால் 7.8 கிலோ மீட்டர் தூரம். அதிலே ஒரு கிலோ மீட்டர் ஓடையாறு; அதுதான் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது. அடுத்து இருக்கிற மூன்றரைகிலோ மீட்டர்கோபி பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமானது; அடுத்து வருகிற ஒன்றரை கிலோ மீட்டர் ரோடே இல்லை; அது பட்டா இடம். அதை அடுத்து ஆறு வந்துவிடுகிறது. அதற்கு அடுத்து 2 கிலோ மீட்டர் தூக்கநாயக்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தம். ஆக, இதிலே நெடுஞ்சாலைத் துறைக்கு இருப்பது ஒரே ஒரு கிலோ மீட்டர் தூரம் தான். இரண்டாவது, அந்தப் பாலம் கட்ட வேண்டுமானால் கிட்டத்தட்ட ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேலே செலவாகும். பாலத்தினுடைய அகலம் 150 மீட்டர். எனவேதான் கள்ளிப்பட்டியிலிருந்து நஞ்சாகவுண்டன்பாளையம் வந்து கோபிச்செட்டிப்பாளையம் போவதற்கு, கள்ளிப்பட்டி, ஆண்டிப்பாளையம், பங்களாப்புதூர் வழியாகப் போவதற்கு ஒரு பிரிட்ஜ் இருக்கிறது. ஆறு கிலோமீட்டர்தான். அடுத்து கோபிச்செட்டிப்பாளையம், கௌண்டபுதுபாளையம் சாலையிலிருந்து இன்னும் ஒரு பிரிட்ஜ் இருக்கிறது. அது எட்டு கிலோமீட்டர்தான். ஆக ஆற்றின் ஒரு பக்கத்திலே 6 கிலோ மீட்டரில் ஒரு பிரிட்ஜ், எட்டாவது கிலோ மீட்டரில் இன்னொரு பக்கத்திலே இன்னொரு பிரிட்ஜ் இருக்கும்போது, மூன்றாவது பிரிட்ஜ் இடையிலே கட்டவேண்டுமானால் ரூபாய் ஒன்றரைக் கோடியிலிருந்து ரூபாய் இரண்டு கோடிக்கு ஆகும். ஆகவே, தேவையில்லை. மக்களுடைய போக்குவரத்தும் இல்லையென்ற காரணத்தினால்தான் அது கட்டப்படவில்லை. கட்டவேண்டியவை பல இருக்கின்றன என்ற காரணத்தாலும் இதைக் கட்டுவதற்கில்லை.

9-40 மணி

திரு. தூ. க. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் நிறைந்த பகுதி அது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பங்களாப்

144899

புதூர் வழியாகச் சென்றால் 20 கிலோ மீட்டர் கோபிச்செட்டிப் பாளையம் வருவதற்கு சுற்றி வரவேண்டும். அத்தாணி, கௌண்டபுதூர் வழியாக வந்தால் 20 கிலோ மீட்டர் சுற்றிவர வேண்டும். இங்கே மொடச்சூரில், கோபியில் ஒரு பெரிய மாட்டுச் சந்தை நடைபெறுகிறது. அங்கே அந்த பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் கோபிச்செட்டிப்பாளையம் நாள் தவறாமல் சென்றுவர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தரைமட்டப் பாலமாவது அமைத்துக் கொடுத்தால் பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அன்றாடம் சந்தைக்குச் சென்றுவர வசதியாக இருக்கும் என்ற அந்தக் கருத்தில் தரை மட்டப் பாலமாவது அமைத்துக்கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உருக்கமான கோரிக்கையை ஏற்று அது சாத்தியக்கூறுதானா என்று அரசு ஆராயும்.

மண்ணியாற்றின் குறுக்கே பாலம் அகலப்படுத்துதல்

*10998—திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவி டையளிப்பாரா :

(அ) திருப்பனந்தாள் ஒன்றியம், செருகுடி ஊராட்சிக்கு கனரகப் போக்குவரத்து ஏற்படுத்திட, மண்ணியாற்றின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை அகலப்படுத்திட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அறிவித்துள்ள 100 கிராமப்புறப் பால வேலைகள் திட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட வண்டிப் பாலங்களை ; பேருந்து செல்லத்தக்க பாலங்களாக அகலப்படுத்த இந்த ஆண்டிலாவது எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது ஒரு மாட்டு வண்டிப் பாலமாகும். இருந்தாலும் அந்த ஆயிரம் பேர் இருக்கிற ஒரே ஒரு சிறுகுடி கிராமத்திற்குப் போவதற்குத்தான் இதன் வழிவகை அமைத்திருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் 100 பாலங்களில் அந்தத் திட்டம் தொடர்ந்திருக்குமானால், இந்த ஊரை எடுத்துக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பால வேலைகளை விரிவுபடுத்தும் நேரத்தில், உறுதிப்படுத்தும் நேரத்தில், தேவைப்படுகிற இடங்களில் ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற அளவில் அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ? அதற்காக ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன். காரணம், தற்போது ஒரே ஆற்றில் ரெகுலேட்டருக்காக ஒரு பாலமும், வண்டிகள் செல்வதற்காக அதன் அருகாமையில் இன்னுமொரு பாலமும் கட்ட வேண்டியிருப்பதால் நிதி வீணாகிறது. எனவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற வகையில் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அப்படித்தான் ஒரு காலத்திலே' கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த யோசனையின் அடிப்படையில்தான் அரசு தன் பணியைச் செய்கிறது.

அரூரில் சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

*10564—திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூரில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி அதிகமாக உள்ளதால், ஜவ்வரிசி மற்றும் மாவு சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி என்பது ஒரு இலாபகரமான சாகுபடியாக இருந்து வருகிறது. இது வறட்சிக் காலங்களிலும் மலைப் பகுதிகளிலும் கூட உற்பத்தியாகக்கூடிய பொருள். பருவ காலத்தில் அதிகப்படியான கிழங்கைத் தோண்டி எடுக்கிற காலத்தில் மார்க்கெட்டில் விலை அதிக அளவிற்குக் குறைந்து விடுகிறது. குறிப்பாக மூட்டை ரூ. 140-க்கு இருந்தது தற்போது ரூ. 80, ரூ. 90-க்கு வந்து விட்டது. அதனாலே ஒரு சேமிப்புக் கிடங்கை நாம் ஏற்படுத்தினால், அந்த விவசாயிகள் அதைச் சேமித்து வைத்து குறிப்பிட்ட காலத்தில், நல்ல விலைக்கு விற்று வருவாயைப் பெருக்க வாய்ப்பாக இருக்கும். இதை அரசு அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தர்மபுரியில் ஒன்றும், சேலத்தில் ஒன்றுமாக சவ்வரிசி மற்றும் குச்சிக் கிழங்கின் மாவுப் பொருளைப் பெற்று, விற்பனை செய்யக்கூடிய இரண்டு கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. அதிலே தர்மபுரியைச் சேர்ந்த அந்தக் கூட்டுறவுச் சங்கம் கடந்த காலத்திலே சிறப்பான முறையிலே செயல்படாமல் இருந்து, தற்போது அந்தச் சங்கத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எனவே, அந்தச் சங்கத்தின் சார்பில் அந்தப் பகுதியில் சேமிப்புக் கிடங்கைக் கட்டுகிற முயற்சியில் ஈடுபடுவார்களானால் அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் தாலுக்காவில் உற்பத்தி பண்ணக் கூடிய அந்தக் கிழங்கு, நெசவுப் பாவுக்காக மிகவும் தரம் உயர்ந்தது என்றும் இந்தியா முழுவதும் இதைப் பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது. இதைப் பயன் படுத்தி அரூரிலே ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்று இங்கே அறிய விரும்புகிறேன்.

9-45 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமென்றால் அங்கே இருக்கக் கூடிய நெசவாளர்களோ, அல்லது உற்பத்தியாளர்களோ முன்வந்து, தாங்களாகவே சங்கம் அமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அரசாங்கம் முன் வந்து ஒரு சங்கத்தை அமைத்துத் தர இயலாது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் இருக்கிற ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நசிந்து விட்டாலும், அந்த மாவட்டத்திலே மிக அதிக



மாக உற்பத்தி செய்கிற கிழங்கு உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவும், அந்த உற்பத்தி சிறப்பாக நடக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் மூலம் அந்தச் சங்கத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கவும், அதே நேரத்தில் உற்பத்தியாகிற கிழங்கைப் பாதுகாத்து சேமிக்க கோடவுன் கட்டித் தர வங்கியில் கடனாக நிதி ஒதுக்கினால் வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்குப் பரிந்துரைக்காக அனுப்பினால், அரசு அதைப் பரிசிலிக்கும்.

கைராட்டை நூற்புக் கூடம்.

*11292—திரு. மு. முத்தையா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம், ஓசநூத்து ஆகிய இரண்டு ஊர்களில் கைராட்டை நூற்புக்கூடம் இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஒட்டப்பிடாரம் மற்றும் ஓசநூத்து ஆகிய ஊர்களில் மூன்று கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) வினா எழவில்லை.

கழிவு நீரேற்றுத் திட்டம்.

*2231— திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளை ஒருங்கிணைத்து கழிவு நீரேற்றுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டன. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது இறுதியாக்கப்பட்டபின் ஒப்புதல் வழங்கப்படும்.

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தீட்டப்பட்டு அதன் அடிப்படையில் 65 வார்டுகளில் 12 வார்டுகளில் பகுதியாகவும், 16 வார்டுகளில் துவக்கப்படாமலும் இருக்கின்றன. அது எப்போது துவக்கப்படும் என்பதையும், அதன் விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட மதிப்பீடுகள் மூன்று நிலைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 8.2 கோடி செலவிலும், ரூ. 10.78 கோடி செலவிலும், ரூ. 13.01 கோடி செலவிலும் மூன்று திட்டங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. இதில் மாநகராட்சியினுடைய துறை எவ்வளவு கொடுக்கமுடியும் என்று தெரிந்து, திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. சோ. பால்ராஜ்: 12 வார்டுகளில் பகுதியாகவும், மீதியுள்ள 16 வார்டுகளில் வேலைக்கான திட்டத்தையும் எப்போது திட்டி நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: ஆய்வுப்பணிகள் முடிந்துவிட்டன என்று குறிப்பிட்டேன். திட்ட மதிப்பீடு குறித்து இப்போது முடிவு செய்யப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டவுடன் 4, 5 மாதங்களில் பணிகள் துவங்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ் புறநகர்ப் பகுதிகளையும் சேர்க்கின்ற குறிப்பாணைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சியின் மூலமாக இந்தக் கருத்துருவை அனுப்பினால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.



குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொது மருத்துவமனை.

*3446—திரு. இ. கோதண்டம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றத்தூர் பேரூராட்சியில் அரசு பொதுமருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சுயதொழில் தொடங்க குறுகியகால சிறப்புப் பயிற்சி.

*10848—திரு. சி. ரா. முனிரத்தினம்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா;—

படித்து வேலை வாய்ப்பு இன்றி இருப்போர் விரும்பி சுயதொழில் துவங்க வேலை வாய்ப்பு அலுவலகங்களை அணுகினால் குறுகிய கால சிறப்புப் பயிற்சி தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

திரு. சி. ரா. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாத காரணத்தால் சுயநிதிக் கடன்கள் வழங்கங்கூடிய அரசின் திட்டத்தின்கீழ் அதை முறையாக அவர்கள் பயன்படுத்த முடியாத காரணத்தால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அவர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளித்தால் நல்லதாக இருக்கும் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வேலைகளில் இளைஞர்களுக்கு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் 25 தொழில்

பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இது முடிந்தவுடன் தாங்களாகவே சுய வேலைவாய்ப்புகளை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தொடங்கும் வகையில் ரூ. 10,000 பெறுமானமுள்ள இயந்திரத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் தொகை 25 சதவீத மானியத்துடன் வழங்கப்படுகிறது. மேலும் இங்கே சுய தொழில் தொடங்க கடன்வசதிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளால் அளிக்கப்படுகின்றன. வேலூரிலும், கோவையிலும் இதற்கென்று தனியாக வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் அந்தப் பட்டத்தைப் பெற்ற பிறகு அவர்களுக்குக் கடன் வாங்கி உதவுவதற்காக அந்த வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் வாங்கித் தரப்படுகிறது. தொழில் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சி சான்று பெற்ற மனுதாரர்களுக்கு சுயமாக தொழில் தொடங்க அதிகபட்ச மானியத் தொகையாக ரூ. 2,000 வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ரூ. 10,000 கடன் வாங்கித் தரப்படுகிறது. இப்போதுதான் இந்தத் துறை இதுபோன்ற செயல்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக அவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

திரு. சீ. ரா. முனிரத்தினம் : தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 35,000 இந்த அரசின் மூலமாக வழங்கக்கூடிய அந்த உதவியை சற்று உயர்த்தி ரூ. 50,000-மாக வழங்கினால் அந்தத் தொழில் தொடங்க ஏதுவாக, உதவியாக இருக்கும். அதை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. க. ஸ்டாலின் : தலைவர் அவர்களே, படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்? சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன் அடைந்தோர் எத்தனை பேர் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 25 லட்சம் பேர்களுக்கு மேல் பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வேலூர், கோவையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களை



அணுகியவர்களுக்கு 3,995 பேர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு 4.53 கோடி ரூபாய் கடனுதவியாகவும், அதிலே 1.62 கோடி ரூபாய் மானியமாகவும் இந்தத் துறை மூலமாக வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, இந்தத் துறையில் மொத்தமாக இதுவரையில் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை? எத்தனை விண்ணப்பதாரர்கள் நிவாரணம் பெற்று இருக்கிறார்கள்? மாவட்ட வாரியாக ஏதாவது அதிலே குறியீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த விண்ணப்பங்களில் ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு அளிக்க வேண்டுமென்று அதில் ஏதாவது குறியீடு இருக்கும். (குறுக்கீடு) அலாட்மெண்ட் என்றால்—Prescribed allotment for every district. I would like to know whether they have prescribed such allotment for every district, If so, what is the number for each district? How many applications have been fully disposed of? What is the number of beneficiaries in each district?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியான விளக்கங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்பார்களானால், அதற்கான முழு விளக்கமும் அளிக்கப்படும். இருந்தாலும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பதிவு செய்து வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு இந்த அரசு மூலமாக ஒரு ஆண்டிற்கு ஏழு கோடி ரூபாய்க்கு மேலாக மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர் மனு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்திற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

## பெரியார் பெயரில் கோட்டம் அமைத்தல்.

* 11646—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைந்துள்ளது போல், சமுதாய சீர்திருத்தச் செம்மல் பெரியார் பெயரில் ஒரு கோட்டம் அமைக்க அரசு முன்வருமா?

[1991 சனவரி 25

மாண்புமிகு திரு. சே. என். நேரு : தலைவர் அவர்களே, பெரியார் பெயரில் கோட்டம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்குப் பிறகு, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ராஜராஜ சோழன் தோன்றி அவர் பெரிய சிறப்பை உருவாக்கி, அதற்கு பிறகு ராஜேந்திர சோழன் உருவாகி வீரத்தை உருவாக்கினான். அதற்குப் பிறகு, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு குலோத்துங்க சோழன் தோன்றி அன்பு, தயவு, தர்மம், தாட்சண்யம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சகோதரபாசம் குறைந்துவிட்டது என்று எண்ணி கம்ப இராமாயணத்தை உருவாக்கினான். அதன் பிறகு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா, இந்த இலக்கிய வரலாறெல்லாம் எனக்கும் கொஞ்சம் தெரியும். இப்போது என்ன சொல்ல வருகிறீர்கள் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர் ) : தலைவர் அவர்களே, அவர் அவன், இவன் என்று ஏகாரம் போட்டுப் பேசுகிறார். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கொஞ்சம் மரியாதையாகக் கேட்கச் சொல்கிறார். (சிரிப்பு).

திரு. எம். முத்தையன்: குலோத்துங்கர் அல்ல. குலோத்துங்கன் என்று தான் பெயர். அதன் பிறகு நம்முடைய தலைவர் அவர்கள், வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கி, ஆங்காங்கே இருக்கிற பெரும் புலவர்கள், கலைஞர்கள் மத்தியிலே இருந்த வள்ளுவர் குறளை, சாதாரண மக்கள் மத்தியிலே பரப்பினார்கள். அதன் பிறகு. ''ஆற்ற கலை நூற்றொருவர், ஆயிரத்தொன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத்தில் ஒருவர், பூத்தமலர் தண்டாமரைத் தருவே தாதாகோடிப் பெறுவர்'' என்பதைப் போல, அடிக்கடி, உயர்ந்தவர்கள் தோன்றுவது கிடையாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு, 500 ஆண்டுகளுக்கு, 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்ந்த மனிதன் தோன்ற முடியும். எனவே, இவரால்தான் பெரியார் கோட்டம் அமைக்க முடியும். அப்படிப்பட்ட மிகப் பெரிய பெரியாருக்கு—நாம் எல்லாம் இங்கே உட்கார்ந்து இருப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடிய பெரியாருக்கு—ஒரு சிறப்பான கோட்டத்தைக் கட்டி, வள்ளுவருக்கு எவ்வளவு பெரிய சிறப்பைச் செய்து இருக்கிறார்களோ, அதேமாதிரி நம்முடைய அரசு, நம்முடைய தலைவர் செய்வார்களா என் எதிர்பார்க்கிறேன். கேட்கிறேன்.



1991 சனவரி 25]

9–55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரை எதிலே தான் அடங்குகிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கூற்றோடு, எள் அளவும் மாறுபடாமல், நாங்களும், அதை ஒத்துக் கொள்கிறோம். அதற்கு எதிர்ப்பு இல்லை. தந்தை பெரியார் அவர்களுக்குப் பல்வேறு புகழ்களை நாம் தேடித் தந்திருக்கிறோம். பெரியார் அவர்கள் பெயரால் மாவட்டத்தை அமைத்திருக்கிறோம். பெரியார் அவர்கள் பெயரால், பல்வேறு கட்டிடங்களை கட்டி, பெயர் சூட்டியிருக்கிறோம். ஈரோட்டில் பெரியார் அவர்களுக்கு நினைவகங்களை அமைத்திருக்கிறோம். சென்னையில் தந்தை பெரியார் அவர்களுக்கு பெரியார் மாநாட்டு அரங்கம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. பெரியார் மாநாட்டு அரங்கம் கிரீன்வேஸ் சாலையும், காமராஜ் சாலையும் சந்திக்கும் இடத்தில், மீன்வளத்துறை வசம் உள்ள 18 ஏக்கர் நிலத்தையும் அந்த நிலத்தை ஒட்டியுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் முழுவதையும் பெரியார் மாநாட்டு அரங்கம் அமைக்க ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முன்னர் முடிவு எடுக்கப்பட்டது. மேற்கண்ட இடங்கள் வெவ்வேறு துறைக்கு, வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டு உள்ளன. எனவே, பெரிய மாநாட்டு அரங்கம் அமைக்க வேறு ஒரு இடத்தை தேர்வு செய்ய அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தோடு இந்த அரசினுடைய கருத்தும் ஒத்துத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, எத்தனையோ நல்ல நல்ல காரியங்கள் அவர்களுடைய பெயரால் நடந்திருக்கின்றன. இருந்தாலும், தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்திற்கு இணையாக நாம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அறிவியல் தொழில் நுட்பக் காட்சி மையம் ஒன்று 8 கோடி ரூபாய் அளவில் திட்டமிடப்பட்டு, 4 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகி, சென்னை கோட்டூர் பகுதியிலே மிகப் பெரிய அளவில் அமைந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டி. 2 53-363—5

[1991 சனவரி 25

விசைத்தறிக் கூடம்.

* 983—திரு. ஆலவாயல் வ. சுப்பையா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னமராவதியில் மூடியுள்ள விசைத்தறிக் கூடத்தைத் திறக்கவும், தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதியிலுள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 22—2—1989 முதல் இயங்கிக்கொண்டு இருக்கிறது. மேலும், உறுப்பினர்களுக்கு சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆலவாயல் வ. சுப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் தொகுதியில் உள்ள பொன்னமராவதியில் விசைத் தறிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக போராட்டமும், கதவடைப்பும், தொழிலாளர்கள் மத்தியிலே நடைபெறுகிறது. காரணம், தொழிலாளர்கள் மத்தியிலே போதிய சம்பளம் கிடைக்கவில்லை. தொழிலாளர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படவில்லை என்பது தான். எனவே, அவர்களுடைய குறைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சம்பளம் வழங்கிவிட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, பிறகு என்ன?

**திரு. ஆலவாயல் வ. சுப்பையா :** போதிய அளவு.......

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கம் 1988ஆம் ஆண்டு துவங்கப்படுவதாக இருந்தது. மின்சாரப் பற்றாக்குறை காரணமாகவும், உதிரிப் பாகங்கள் இல்லாத சூழ்நிலையின் காரணமாகவும், கால தாமதம் ஏற்பட்டு, விரைவான நடவடிக்கை மூலமாக 22—2—1989 அன்று திறக்கப்பட்டு இருக்கிறது. அந்த நெசவாளர் சங்கத்தைப் பொறுத்த வரையில், தற்போது லாபத்திலே இயங்கினாலும், குவிந்த நஷ்டம் அதிகமாக இருக்கிற காரணத்தால். தற்போது அதிகமாகக் கூலி கொடுக்கிற வகையில், காடாத் துணியை உற்பத்தி செய்ய இலக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அதிகமான சம்பளம் கொடுக்கவும் அந்தச் சங்கம் தொடர்ந்து லாபத்திலே இயங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 சனவரி 25]

**திரு. ஆலவாயல். வ. சுப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக பெருகிக் கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு விசைத் தறிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தின் ஒதுக்கீட்டை ஆய்வு செய்து, இதுபோன்ற திட்டங்கள் செயல்பட முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

10-00 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பெறுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 5286—திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூல்களுக்கு சாயமிடும் பணியைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு தடை விதிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூலினை சாயமிடும் பணியை மேற்கொள்ளும்பொழுது சொந்த சாயச்சாலை இருப்பின் அவற்றிலும், சொந்த சாயச்சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன சாயச் சாலையிலே சாயம் தோய்க்கும் அந்தப் பணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. இவைகளில் எவையும் நெசவாளர் சங்கங்களில் சாயச்சாலை இல்லாத சூழ்நிலையில் ''மறுப்பின்மை சான்று'' பெற்ற பின்னால், அங்கீகரிக்கப்பட்ட சாயச் சாலைகளில் நெசவாளர் சங்கங்கள் அந்த சாயங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இலக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1991 சனவரி 25

**திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தனியாரிடத்திலே இந்த சாயம் செய்கிற நூல்களைக் கொடுக்கிறபோது பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்ல, காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே, பல கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாக இணைத்து அவற்றின் மூலமாக, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே அந்த ஆலையை அமைக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயச் சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தனியார் சாயச் சாலைகளிலே சாயம் வழங்கப்படுகிறது. அவற்றைப் பரிசோதனை செய்வதற்காக மாதந்தோறும் உதவி இயக்குநர் அவர்கள் அந்த சாயச் சாலைகளுக்கு சென்று, மாதிரிகளை எடுத்து சோதனை செய்கிறார். ஏதேனும் குறை ஏற்பட்டால் உடனுக்குடன் உதவி இயக்குநர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் தனியார் நெசவாளர் சங்கங்களில் சாயச் சாலை அமைக்கும் பணிகள் நிதி நிலைமையைப் பொறுத்து அந்தந்த சங்கங்களை ஏற்படுத்த முன் வருகின்றன. செய்ய இயலாத சூழ்நிலையில் கைத்தறி இயக்குநர் மூலமாகவும் அப்படிப் பட்ட சாயச் சாலை அமைப்பதற்கு அரசின் மூலமாகவும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர்களுக்குத் திருமண மண்டபம்

*** 6518—திரு. அ. தங்கராசு :**

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், சிந்து பூந்துரை, மேலவீரராகவபுரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கென திருமண மண்டபம் , சமுதாய நலக்கூடம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலவீரராகவபுரத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு ஒரு செயற்குறிப்பு தனியாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து தற்போது வரப்பெற்று, அது அரசின் பரிசீலைனயில் உள்ளது.



1991 சனவரி 25]

## ஆதிதிராவிட மாணவியருக்கு விடுதி ஏற்படுத்தல்

***9468—திரு. ஜி. பழனிச்சாமி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆதி திராவிட மாணவியருக்கு விடுதி ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி, கோட்டூரில் மாணவியர் விடுதி ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) அத்தியாவசியம் மற்றும் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி, கோட்டூர் என்டது ஒரு கிராமப் பகுதியாகும். 15. 20 கிலோ மீட்டருக்கு உட்பட்டிருக்கக் கூடிய அந்தக் கோட்டூரில் அரிசன மாணவ மாணவியர்கள் தொலைதூரம் சென்று படித்து விட்டு, வீடு திரும்புவதற்கு மிகச் சிரமமாக இருக்கிறது. போக்குவரத்து வசதியே இல்லாத இடம். ஆகவே, இதுபோன்ற இடங்களை எடுத்துக் கொண்டு, மாணவியர் விடுதிகளை இந்த ஆண்டே அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அவசியம் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டில் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1991 சனவரி 25

## 2. தகவல் கோரல்.

**(அ) திருப்பூர், பல்லடம் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தவறியதன் காரணமாக, கோவை மாவட்டம், திருப்பூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் கடுமையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையின் காரணமாக அங்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, அங்கே நிலத்தடி நீர் முழுவதும் கீழே சென்ற காரணத்தால், அரசினுடைய ஆழ் துளைக் கிணறுகள் அல்லது பொதுக் கிணறுகள் அனைத்திலுமே நீர் மட்டம் கீழே சென்று, இன்றைக்கு குடிநீருக்காக அப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகப் பெரிய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருவதோடு, இன்றைக்கு அந்தப் பகுதியிலே, பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்ப் பாசனத் திட்டத்தின் மூலமாக, பல்லடம், திருப்பூர் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய குளம், குட்டைகளில், முழுவதுமாக அல்ல, பல்லடத்தின் வடக்குப் பகுதிக்கும், திருப்பூரின் தெற்குப் பகுதிக்கும் அந்தத் தண்ணீரை விடுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அங்கே நீர்ப் பாசனத்திற்காக அல்ல—குடிநீருக்காக—நீர்ப் பிடிப்பு ஏற்படுத்துவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் விட்டு, அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தாகத்தைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசின் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள், அதற்குரிய ஆணையிட்டு, அந்தப் பகுதி மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, அந்தத் தாகத்தைத் தீர்க்கும் வகையிலே நல்ல பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அணையின் தண்ணீர் இருப்புகளை ஒட்டி, அதிகாரிகளோடு கலந்து பேசி, சாத்தியக் கூறு இருக்கிறது என்றால் அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். (குறுக்கீடு).

*10-05 மணி*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இசைவு கேட்க வேண்டும். கையைத் தூக்கக் கூடாது. இது Zero hour''.



1991 சனவரி 25]

**(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து.**

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்கள் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு அந்தத் தனியார் பள்ளிகளெல்லாம் இன்றைக்கு மூடப்பட்ட நிலையிலே இருக்கின்றன. அதிலே பணிபுரிகின்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் 10 ஆண்டுக் காலம், 13 ஆண்டுக் காலமாக ஊதியம் எதையும் கூடப் பெறாமல், ஊதியம் இல்லாமலேயே பணி புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பல ஆண்டுக் காலமாக ஊதியம் வாங்காமல் பணி புரிந்து கொண்டிருந்த ஆசிரியர்கள் எல்லாம் எங்களுக்கு ஊதியம் வேண்டும், அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதிலே அரசு உடனடியாகத் தலையிட்டு, அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், நீண்ட காலமாக ஊதியம் இல்லாமல் பணிபுரிகின்ற அந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்கவும் ஒரு உத்திரவாதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் செய்தி அரசினுடைய கவனத்திற்கு நேற்றைக்கு முன் தினம் வந்திருக்கிறது. இருந்தாலும், இந்தப் பிரச்சினை அரசுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினை அல்ல. நிர்வாகம், சிறுபான்மைப் பள்ளிகள் என்ற பெயரால் பல வகுப்புகளைத் தொடங்குவதற்கும், பள்ளிகளைத் தொடங்குவதற்கும் அங்கீகாரம் கேட்கிறபோது அரசு நிதி வழங்குகிற பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமலேயே கூட அங்கீகாரம் வழங்குவது, அந்தச் சிறுபான்மைப் பள்ளிகள் இயங்க விரும்புகிற அந்த நோக்கத்திற்குத் துணையாக இருப்பது என்ற முறையில் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே உள்ள 1973-வது ஆண்டு சட்டத்தின்படியும் கூட, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைப்படுத்தும் சட்டத்தின்படி அந்தப் பள்ளிகள் இயங்குவதற்கு அனுமதி வழங்குகிற கடமை, முறையைச் சரிபார்த்து வழங்குகிற கடமை அரசுக்கு இருக்கிறது. ஆனால் அப்படி அங்கீகாரம் வழங்கப்பட்டாலே நிதி உதவிக்குத் தகுதி உள்ளனவாகக் கருத இயலாது எனவும், நிதி உதவி மானிய வழி வகைகளைப் பொறுத்தும், மானியம் வழங்குகிற வசதிகளைப் பொறுத்தும் அரசால் வழங்கப்படும் எனவும் அப்பொழுதே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

[டாக்டர் க. அன்பழகன்] [1991 சனவரி 25

ஆனால் அப்படி அங்கீகரிக்கப்படுகிற சிறுபான்மைப் பள்ளிகளில் ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட சிறுபான்மைப் பள்ளிகள் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு சில காலம் நடைபெற்று, இடைக்கால உத்திரவுகள் பெறப்பட்டு, இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் மூலமாக, சிறுபான்மைப் பள்ளிகளை நடத்திய அல்லது அப்படி சிறுபான்மை என்ற பெயரால் நடத்தப்பட்ட பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுடைய தகுதிகளுக்கு உரிய ஊதியத்தை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி விட்டது. உயர்நீதி மன்றம் அந்தத் தீர்ப்பு வழங்கியதன் மூலமாக யார் சிறுபான்மை என்ற பெயரால், பள்ளிக்கூடம் நடத்த விரும்பினாலும், நாளைக்கு அரசு நிதி வழங்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை அரசுக்கு ஏற்பட்டதன் காரணமாக, அதுவும் ஒரு 10, 12 ஆண்டுக்கால நடைமுறைகளின் விளைவாக அவ்வளவு பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய நடைமுறையின் காரணமாக உச்ச நீதிமன்றத்தில் இதற்கான மறு விண்ணப்பம், அப்பீல் செய்யப்பட்டு இருக்கிறது. 12—12—1990-ல் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. அது பற்றிய முடிவு உச்ச நீதிமன்றத்திலே கிடைத்ததற்குப் பின்னர்தான் அரசு எந்த வகையிலேயும் முடிவு எடுக்க முடியும். ஆனால் நிர்வாகம் ஆசிரியர்களை வேலைக்கு ஈடுபடுத்திய காரணத்தினால், அவர்களுக்கு அந்த நிர்வாகம் எந்த ஊதியத்தைத் தரச் சம்மதித்து அவர்களை வேலையில் ஈடுபடுத்தியதோ அந்த ஊதியத்தை வழங்க அந்த நிர்வாகத்தினர் கடமைப்பட்டுள்ளனர் என்பதை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**10-10 மணி**

**(இ) பேரவைத் தலைவர் தீர்ப்புப்பற்றி உள்நோக்கம் கற்பித்து சில பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து.**

**திரு. எம். அப்துல் லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறித்தும், தங்களுடைய தனித் தன்மை, தனி அந்தஸ்தைக் கேள்விக் குறியாக்கும் வகையிலும் சில செய்திகள் பத்திரிகையில் வந்திருப்பது வேதனைக்குரிய ஒன்று. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய கடமை என்ற வகையிலேதான் இந்தப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன். 'எய்தவன் ஒருவன் இருக்க அம்பை நொந்து பயன் இல்லை' என்ற ஒரு சொற்றொடரோடு, தாங்கள் அளிக்கின்ற தீர்ப்புகளுக்கு, தாங்கள் சுயமாகச் சிந்தித்து அளிக்கின்ற தீர்ப்புகள் அல்ல, யாரோ தங்களை இயக்கி வைக்கிறார்கள். அவர்களுடைய இயக்குதலின்படித் தாங்கள் நடக்கிறீர்கள் என்று குற்றச்சாட்டு சொல்லப்படுவது இந்த அவையில் இடம் பெற்றிருக்கின்ற உறுப்பினர்களுடைய கண்ணியத்திற்கு அது எந்த வகையிலும் செம்மை சேர்க்காது. தமிழக மக்களுடைய பிரதிநிதித்துவ சபையினுடைய ஒரு இறையாண்மையை அது கேள்விக்குறியாக்குகின்ற வகையில் அமைந்திருக்கிறது.



1991 சனவரி 25] [திரு. எம். அப்துல் லத்தீப்]

சபாநாயகர் என்பவர் தன்னிச்சையாக செயல்படக் கூடியவர்.
எக்ஸிக்கியூட்டிவ் என்று சொல்லக்கூடிய அமைச்சர்
களுடைய கருத்து எதுவாக இருந்தாலும், உறுப்பினர்களுடைய
கருத்து எதுவாக இருந்தாலும், சபை கண்ணியத்தை காக்கக்
கூடிய வகையில் தாங்கள் சுயமாகச் சிந்தித்து முடிவு எடுக்கக்
கூடிய தகுதி பெற்றவர், உரிமை பெற்றவர், கடமைப்பட்டவர்
என்ற வகையிலேதான் தங்களுடைய அந்தஸ்து அரசமைப்புச்
சட்டத்தால் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை
யில் வெளியிலே பொத்தாம் பொதுவாக சிலர் சில கருத்துக்
களைச் சொல்வதும், பத்திரிகையில் அப்படிச் செய்திகள் வரு
வதும் அவையினுடைய கண்ணியத்திற்கு ஏற்புடையது அல்ல.
பார்லிமெண்டரி ஜனநாயகத்திற்கு அது ஏற்புடையதாகவும் அமை
யாது என்ற வகையில் நாங்கள் கவலை கொண்டிருக்கிறோம்.
ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்ட காரணத்தினால் சில பேர்களைத்
தாங்கள் எல்லோருடைய ஒரு கருத்தின் அடிப்படையிலேயும்
வெளியேற்றினீர்கள். அது தங்களுக்குரிய உரிமை. அதே நேரத்தில்
இன்னொரு கட்சிக்காரர்கள் தாங்களாகவே எவ்வளவு
சொல்லியும் கேட்காமல் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற
முடியாது என்று சொல்லிவிட்டு வெளியேறிப் போனார்கள்; வர
மாட்டோம் என்று அவர்களாகவே சொன்னார்கள்.

இது குறித்து டெல்லியிலே இருக்கின்ற ஒருவர் கூட, தமிழகத்
தில் பாராளுமன்ற ஜனநாயகத்தினுடைய குரல்வளை நெறிக்
கப்படுகிறது என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கருத்துக்கள்
சொல்லப்பட்டிருப்பது உண்மையைத் திசை திருப்புகின்ற
முயற்சியாகத்தான் நான் கருதுகிறேன். ஆளுநர் அவர்களிடத்
திலே முறையீடு — இங்கே யார் அவர்களை வெளி
யேற்றினார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை, அவர்
களாகவே வெளியேறினார்கள், எனவே இந்தச் சபையிலே
யாரோ அவர்களை வெளியேற்றி மேற்கொண்டு இங்கே பணி
யாற்றக் கூடாது என்று சொல்லியதைப் போல ஒரு கருத்து
நாட்டிலே உருவாக வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு
—கவர்னர் அவர்களைச் சந்தித்தார்கள் என்று பத்திரிகைச் செய்தி
கள் கூறுவதும், மனுக் கொடுத்தார்கள் என்று கூறுவதும் டெல்லி
யிலே உட்கார்ந்து கொண்டு யாரோ ஒருவர் இங்கே இருக்கக்
கூடிய மக்களுடைய ஆட்சி இப்படித்தான் நடந்து கொள்ள
வேண்டும், இப்படி அவர்கள் ஜனநாயகத்தை, அதனுடைய
குரல் வளையை நெறிக்கிறீர்கள் என்று சொல்வதும் இங்கே
இருக்கின்ற சட்டசபையைக் கேள்விக்குறியாக்குவதோடு மட்டு
மல்லாமல்—எங்களைப் பற்றிச் சொன்னாலும் நாங்கள் கவலைப்
படவில்லை. எங்களுடைய கண்ணியத்தினுடைய சின்னமாக
எங்களுடைய உரிமையினுடைய பிரதிபிம்பமாக இருக்கக்கூடிய
தங்களைப் பற்றியே இங்கே சில கருத்துக்கள் சொல்லப்படுவது
எங்களுக்கெல்லாம் வேதனை அளிப்பதாக இருக்கிறது. தாங்கள்
சுயமாகச் சிந்திக்கவில்லை, யாரோ தங்களை ஆட்டி வைக்
கிறார்கள்—மன்னிக்க வேண்டும்—என்ற வகையிலே கருத்து

வந்திருக்கிறது. அதுகுறித்துத் தாங்கள் சில விளக்கங்களைத் தந்தால் எங்களுக்குத் திருப்தி ஏற்படும். எங்களுக்கு மட்டுமல்ல. நாட்டு மக்களுக்கும் திருப்தி ஏற்படும் என்ற வகையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இத்தகைய செய்திகள் நாட்டில் பரவுவது தடுக்கப்பட வேண்டும். அதற்குத் தங்களுடைய முடிவு என்ன என்பதை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் கூறிய செய்திகளை நானும் செய்தித் தாளில் பார்த்தேன். பொதுவாகவே நம்முடைய நாட்டில் ஆங்கிலேயர் காலத்தில் வகுக்கப்பட்டு இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு இந்தியாவிற்கு வந்து செயல்படுகின்ற மக்களாட்சி, அவர்கள் வெளியேறியதற்குப் பின்னால் உரிமை பெற்ற இந்தியாவில் இன்னும் வலுவாகச் செயல்படுத்தப்பட்டு அதனுடைய சிறப்புத் தன்மைகள் மேலும், மேலும் கூர்மைப்படுத்தப்பட்டு வளர்ந்திருந்தால் நாம் பெரிதும் மகிழ்ந்திருக்க முடியும். ஆனால் வெவ்வேறு கட்டங்களில் பலராலும் இந்த மக்களாட்சித் தன்மைகள் ஊனப்படுத்தப்படுகின்றன. தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்கு, சில நேரம் கொச்சைப்படுத்தப்படுகின்றன என்று வருகின்றபொழுது அந்த மக்களாட்சியைச் செயல்படுத்துகின்ற தளமாக அரசியல் சட்டத்தினுடைய முழுப் பாதுகாப்பில் ஒரு பகுதியாக விளங்குகின்ற சட்டமன்றத் துறையினுடைய செயல்கள்தான் இந்த நாட்டில் அரசு தருகின்ற திட்டங்களை அறிவிப்பதற்கும், அரசு இயற்றுகின்ற சட்டங்களை இங்கே நிறைவேற்றுவதற்கும் அதன் வாயிலாகத் திட்டங்களின் பயனும், சட்டங்களின் பாதுகாப்பும் மக்களுக்குச் சென்று சேர்வதற்கு ஒரு வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்குவது இந்த மன்றம் தான் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஓர் உறுப்பினருக்கு ஏதேனும் சிக்கல் எழுமானால் அந்த உறுப்பினர் ஏதேனும் ஒரு வகையில் பாதிக்கப்படுவார் என்று சொன்னால் அந்தப் பாதிப்பைச் சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி அவருக்குத் தக்க பாதுகாப்புத் தரவேண்டியதும் இந்த மன்றம்தான். எனவே, ஒவ்வொரு உறுப்பினருக்குமான பாதுகாப்புப் பொறுப்பையும் ஏற்று இருக்கின்ற சட்டமன்றம், சில நேரம் யார் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்களோ அவர்களுக்கே பாதுகாப்பு அற்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது மிகவும் ஊனப்படுத்தப்படுகிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்படி ஊனப்படுத்தப்பட்ட பிறகும் அதற்கு எடுத்துக் கொண்ட தீர்ப்புகளுக்கு, நிறைவேற்றிய செயல்களுக்கு கண்ணை மூடிக் கொண்டு வெவ்வேறு வகையான உள் நோக்கம் கற்பிப்பதும், தங்களுடைய நோக்கங்கள் போல் அதற்கு விமர்சனங்கள் செய்வது என்பதும் மேலும், மேலும் இந்த நாட்டைத் தவறான திசை நோக்கித் திருப்பும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையில் இதுபோன்ற கருத்துக்





களை வெளியில் சொல்பவர்கள் சட்டமன்ற விதிகளை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் பேரவைத் தலைவருடைய தீர்ப்புகளுக்கு உள் நோக்கம் கற்பிக்கக்கூடாது.

10-15 மணி

இன்னும் சொல்லப் போனால் பேரவைத் தலைவர் இன்னொருவர் ஆணையின் கீழ் செயல்படுகிறார், இன்னொருவருடைய கருத்தைக் கேட்டுத் தான் செயல்படுகிறார் என்று வெளிப்படையாக இப்படி எல்லாம் ஜனநாயகத்தைக் கேலி செய்வது என்பது கண்டிக்கக்கூடியது. கண்டிப்பது மட்டுமல்ல, கடுமையான நடவடிக்கைக்கும் உட்பட்டது. இது இந்த அளவில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களைச் சேர்ந்த சட்டப் பேரவைத் தலைவர்கள் ஒருங்கு கூடுகின்ற கால கட்டத்தில், எல்லா மாநிலங்களுடைய சட்டப் பேரவைத் தலைவர்கள் ஒருங்கு கூடி நாடாளுமன்றத் தலைவரோடு சேர்ந்து இணைந்து பணியாற்றுகின்ற காலத்திலும் இவற்றிற்குத் தக்க முடிவு எடுக்கப்பட்டு எந்த வகையில் இவற்றைத் தடுப்பதற்கான வேறு வகையான தீர்வுகளைக் காண முடியும் என்பதையும் நாங்கள் சிந்திப்போம். எனினும், உங்களுடைய கருத்தை நான் மனத்தில் வைத்துக் கொண்டு 2—2—1991 அன்று அலுவல் ஆய்வுக் குழுவில் மீண்டும் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம் என்று கூறி இந்த அளவோடு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

### 3. உரிமைப் பிரச்சினை.

துக்ளக் இதழ்மீது—15–1–1991 ஆம் நாளைய இதழில் எம்.எல்.ஏ.–க்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் ‘‘ துக்ளக் ’’ இதழ் ஆசிரியர் மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து எழுப்புதவற்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்துரிமைக்கும், பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் மிகுந்த மதிப்பு அளிக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்தவன் நான். எனினும் ஒரு பத்திரிகை ஆசிரியர் மீது உரிமை மீறல் பிரச்சினை பற்றி எழுப்ப நேர்ந்ததே என்பதற்காக வருத்தத்தோடும், வேதனையோடும், இதை நான் எழுப்புகிறேன்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1991 சனவரி 25

'' துக்ளக் '' இதழில் 15—1—1991 ஆம் தேதி கேள்வி-பதில் பகுதியில் ஒரு கேள்வி. '' வர வர எம்.எல்.ஏ.-க்கள் மதிப்பு உயர்ந்து வருவதைப்பற்றி '' என்ற ஒரு கேள்விக் குறியோடு எழுப்பி, அதற்குப் பதிலாக, '' எல்லாவற்றிற்கும் விலை ஏறும்போது விஷத்திற்கும் விலை ஏறத்தானே செய்யும் ! '' என்று அந்த இதழ் ஆசிரியர் பதில் அளித்து இருக்கிறார்கள். ஒரு சில எம்.எல்.ஏ. க்கள் பற்றியோ, யாரோ ஒரு எம்.எல்.ஏ. வைப் பற்றியோ இப்படிப்பட்ட விமர்சனம் செய்திருந்தால் நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்த சட்டமன்றத்தைப் பற்றி அல்ல, இந்த நாடு முழுவதும் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்கள் அத்தனை பேரையும், இங்கே விமர்சனம் செய்யும்போது இந்த சட்டமன்ற உறுப்பினர்களை அவமதிப்பது மட்டுமல்ல, இந்த ஜனநாயகத்தையே அவமதிப்பது ஆகும். '' விஷம் '' என்று எம்.எல்.ஏ. க்களைச் சொல்லிவிட்டால் அப்படிப்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் தேவையில்லை. விஷத்தை யாரும் தேவையென்று சொல்ல மாட்டார்கள். அப்படி என்று சொன்னால் ஜனநாயகமே தேவையில்லை என்றும் இந்த நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லவேண்டும் என்றும் அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா ; சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று அந்த இதழ் ஆசிரியர் சொல்கிறாரா என்பதே புரியவில்லை. ஆகவே, இது ஜனநாயகத்தை அவமதிக்கக்கூடியது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப் படுத்துவது மட்டுமல்ல, மக்களாட்சித் தத்துவத்தையே அவமதிப்பது என்ற முறையில் இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவிற்கு விடுவதற்குத் தாங்கள் இசைவு தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து இதழ் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டுப் பின்னர் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### சென்னை பொது மருத்துவ மனையில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காதிருப்பது குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சென்னை, அரசு பொது மருத்துவமனையில் உள்ள பதின்மூன்று அறுவை சிகிச்சை நிலையங்களில் பத்து அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காமல் இருப்பது குறித்த'' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :



1991 சனவரி 25] [டாக்டர் க.பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அறிக்கை.

சென்னை அரசு பொது மருத்துவ மனையில் உள்ள மொத்த அறுவை அரங்கங்களின் எண்ணிக்கை 17 ஆகும். இவற்றில் குளிர்சாதன வசதிகளுடன் உள்ள பெரிய அறுவை அரங்கங்கள் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| பொது அறுவை சிகிச்சைத் துறை | .. | 6 |
| எலும்புமுறிவு சிகிச்சைத் துறை | .. | 1 |
| இருதய அறுவை சிகிச்சைத் துறை | .. | 1 |
| நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை | .. | 1 |
| சிறப்புத் துறைகளுக்கு .. .. | .. | 1 |
| மொத்தம் | .. | 10 |

2. குளிர்சாதன வசதியுடன் இயங்கிவரும் சிறிய அறுவை அரங்கங்கள் இரண்டின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| இருதய அறுவை சிகிச்சை .. | .. | 1 |
| தொழுநோய்ப் பிரிவு .. .. | .. | 1 |
| | | 2 |

3. குளிர்சாதன வசதி அற்ற நிலையில் பின்வரும் ஐந்து சாதாரண சிறிய அறுவை அரங்கங்களும் உள்ளன :—

| | | |
|---|---|---|
| செப்டிக் (நச்சுத்தடை) .. | .. | 1 |
| பால்வினை நோய்த் துறை .. | .. | 1 |
| புற்றுநோய்த் துறை .. .. | .. | 1 |
| டெட்டனஸ் பிரிவு .. .. | .. | 1 |
| மூட்டு மற்றும் தசை நோய் .. | .. | 1 |
| | | 5 |

4. மேற்கண்டவாறு மொத்தம் உள்ள 17 அறுவை அரங்கங்களில் பொது அறுவை சிகிச்சைக்கென அமைந்த குளிர்சாதன வசதி செய்யப்பட்ட 6 பெரிய அறுவை அரங்கங்களில் 1, 3, 5 ஆகிய மூன்று அறுவை அரங்கங்கள் மட்டும் தற்போது பொதுப் பணித்துறையால் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த மூன்று அரங்கங்கள் நீங்கலாக மீதமுள்ள 14 அறுவை அரங்கங்களும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

5. பொது அறுவை சிகிச்சைக்கென அமைந்த குளிர்சாதன வசதிகள் கொண்ட 6 பெரிய அறுவை அரங்கங்களுக்கும் குளிரூட்டப்பட்ட காற்றைச் செலுத்துவதற்காக அமைக்கப் பட்ட குழாய்கள் சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப் பட்டவையாகையால் அவை பழுதுபட்டு இப்பொழுது அவற்றை பழுதுபார்க்க நேரிட்டுள்ளது. பெரிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் 2, 4, 6 ஆகியவற்றைப் பொறுத்தவரை அப் பணியை பொதுப்பணித்துறை செய்து முடித்து அந்த அரங்கங் கள் மூன்றும் 27—3—1990 முதல் நன்கு செயல்பட்டு வரு கின்றன. பெரிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் 1, 3, 5 ஆகிய வற்றுக்கான இந்த பழுதுபார்க்கும் பணி இப்பொழுது பொதுப் பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்ததும் அந்த மூன்று அறுவை அரங்கங் களும் மீண்டும் இயங்கத் தொடங்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சென்னை பொது மருத்துவ மனையில் 17 அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்குவதாகவும், அதில் 3 அறுவை சிகிச்சை நிலையங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையில் பார்க்கின்ற நேரத்தில் அங்கே மூன்று அறுவை சிகிச்சை நிலையங்கள்தான் இயங்கி வருகின்றன என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை யில் , மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவ தெல்லாம், இன்றைக்கு எத்தனை அறுவை சிகிச்சை நிலையங் கள் இயங்கிக்கொண்டு வருகின்றன என்பதை நீங்கள் சொல்லி யிருந்தாலும், அங்கே எத்தனை பேருக்கு சிகிச்சைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன ; எத்தனை பேருக்கு ஆப்பரேஷன் செய்யப் பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தை, கடந்த 6 மாதங்களில் அவைகளில் எத்தனை பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களையெல்லாம் தெரியப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த........

10-20 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : சிறிய அறுவை சிகிச்சை நிலை யங்கள் இயங்கவில்லையென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுகளைச் செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்





பேற்றுக்கொண்டதற்குப் பிறகு ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் சென்று மருத்துவமனைகளிலே இதுபோன்ற அறுவை அரங்கங் களும், வாங்கப்பட்ட புதிய கருவிகளும் எந்த அளவிற்குச் செயல் படுத்தப்படுகின்றன என்பதை நேரிலேயே கண்டறிந்து வந் திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறி வார்கள். அதுமட்டுமல்லாமல், பொது மருத்துவமனையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை யன்று அங்கேயிருக்கிற மருத்துவர்களை அழைத்து, நானே கலந்துகொண்டு ஒவ்வொரு கூட்டத்தையும் கூட்டி, இது போன்ற குறைகள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கான கருத்துக்கள் பெறப்பட்டு அதற்கான விரை வான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாதமும், ஸ்டான்லி மருத்துவமனையிலும் இது போன்று செய்யப்பட்டு வருகிறது. மாதம் ஒருமுறை அமைச்சரே கலந்துகொண்டு, இதுபோன்று மருத்துவ மனை களிலே நேரடி நடவடிக்கை எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிந்திருப்பார்கள். அறுவை சிகிச்சை அரங்கங்களைப் பொறுத்தவரையில், 3 அறுவை சிகிச்சை அரங்கங்களில் இப்போது பொதுப் பணித்துறை மூலமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் உள்ள 6 பெரிய அறுவை அரங்கங்களில், மூன்று அரங்கங்களில் வேலை முடிக்கப் பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் வேலை துவங்கப்பட்டு, அது முடிக்கப்பட்டு,அவைகளிலேயும் அறுவை சிகிச் சைகள் நடைபெற்று வருகின்றன. மற்ற சிறிய அறுவை சிகிச்சை அரங்கங்களிலேயும் அறுவை சிகிச்சை நடைபெற்று வருகின்றன. அங்கே எந்தவிதமான பிரச்சினையும் இப்போது இல்லை. விரைவிலேயே இந்த மூன்று அறுவை சிகிச்சை அரங்குகளினு டைய பணிகள் முடிக்கப்படுமானால், முழுமையாக அங்கே அறுவை சிகிச்சைகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அறுவை' என்ற சொல்லை நிறையப் பயன்படுத்தப்படுவதைக் கொஞ்சம் குறைத் தால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மூன்று அறுவை சிகிச்சை நிலையங்களில் ........(சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தவிர்க்க முடியாதது.

[1991 சனவரி 25

திரு. எஸ். டி. உகம்சந்த் : ரிப்பேர்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்படும். அதற்கான மதிப்பீடுகள், பொதுப்பணித் துறைக்கு அதற்காகத் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகையிலேயிருந்து செய்து வருகிறோம்.

### 5. அறிக்கை அளித்தல்.

#### மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

### 6. தீர்மானங்கள்.

#### (அ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு ( Senate ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. லெ. சுப்பிரமணியன்
2. திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



1991 சனவரி 25]

#### (ஆ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. மு. க. ஸ்டாலின்
2. திரு. உ. ரா. வரதராசன் ."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### 7. அறிவிப்பு.

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

10-25 மணி

### 8. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. சட்ட முன்வடிவு—(ஆய்வு செய்தல்).

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1991) நிறைவேற்றப் பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



10. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

திரு. கோ பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் உரை ஒரு புதிய நிலையிலே துவங்கப்பட்டு, வழக்கம்போல் நடைபெறுகின்ற அந்த நிலைக்கு மாறாக இந்த ஆண்டு நடந்து கொண்டிருக்கிறது. வழக் மாக, இந்தப் புதிய அரசு ஏற்பட்டவுடனே முதல் ஆண்டிலே எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும், நிதி நெருக்கடி இருந்தாலும், ஆட்சியிலே மந்த நிலை இருந்தாலும் அதையெல்லாம் போக்குவதற்கு மிகத்திறமையும், சாதுர்யமும் அனுபவமும் வாய்ந்த முதல்வரவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு திறம்பட அந்த ஆண்டிலே ஒரு சிறந்த சேவை, தொண்டு, நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு வழிவகை செய்தார்கள். அப்பொழுது மத்தியிலே வேறு ஒரு ஆட்சி அமைந்திருந்தது. அந்த ஆட்சிக்குப் பல கோரிக்கைகளை விடுத்தார்கள். அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது, எங்கள் தேவையை உணர்ந்து நீங்கள் அதிகமாக எங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது மத்தியிலே இருந்த ஆட்சி செவி சாய்க்காமல், சாக்குப்போக்குச் சொல்லி, நீங்கள் மத்தியத் தொகுப்பிற்கு—குறிப்பாக எங்களுக்கு அளிக்கவில்லை, அதனாலே உங்களுக்கு நாங்கள் திரும்பக் கொடுப்பதாக இல்லை என்று சாக்குப்போக்குச் சொன்னார்கள். பல காரியங்களிலே அப்பொழுது இருந்த மத்திய அரசு ழ ந. மாநில அரசுக்கு ஒத்துழைப்புத் தரவில்லை. அதற்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தல் வந்து, ஒரு புதிய ஆட்சி ஏற்பட்ட முன்னாள் பிரதம மந்திரி வி.பி. சிங் அவர்கள் தலைமையி இருந்த அந்த ஆட்சியிலே இந்தத் தமிழ் நாட்டுக்கு இருந்த சிங் ல் களைப்போக்குவதற்குகேட்ட அத்தனையும் நமக்கு அளித்தார் ள். அரிசி ஒதுக்கித் தரப்பட்டது; பாமாயில் ஒதுக்கித் தரப்பட்டது. நாம் கேட்ட அத்தனை தொழில் பிரச்சினைகளுக்கும் ஆதரவு அளித்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

'மண்டல் கமிஷன்'—நாம் இங்கிருந்து சிபாரிசு செய்து அனுப்பியதை அவர்கள் ஏற்றுக்கொண்டு,அந்த மண்டல் ;னையும் நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்திலே தீர் வந்தது.

10-30 மணி

காவிரி நதிநீர்ப் பிரச்சினையைப் பற்றி நீண்ட காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்ததை, நம்முடைய அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன்—அப்போதிருந்த மத்திய அரசு அதற்கு ஒரு நல்ல பதிலை நமக்கு அளிக்கவில்லை—வி.பி.சிங்

[திரு. கோ. பூவராகன்] [1991 ஜனவரி 25

...சு வந்த பிறகு, நடுவர் மன்றத்திற்கு அந்தப் பிரச்சினையைத் தீர்ப்புக்கு விட்டார். இப்படிப் பல கோணங்களில், நம் ஊருக்கு தண்ணீர் வருமா, வராதா என்ற நிலை இருக்கிறது.

ஆரோமேடிக் இண்டஸ்ட்ரி'யை உத்திரப் பிரதேசத்திலே கேட்டிருக்கிறார்கள். உத்திரப் பிரதேசக்காரர்களுக்குக் கொடுக்கப் போகிறார்களா, நமக்கு கொடுக்கப் போகிறார்களா என்ற நிலைமை வந்தபோது, பிரதமர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, நம்முடைய தமிழ்நாட்டிற்கே அதை ஒதுக்கித் தந்தார்கள். ஆனால் இன்றையதினம் ஆளுநர் உரையிலே, ஆளுநர் குறிப்பினைப் பார்க்கின்றபோது அது வருமா, வராதா என்ற ஒரு நிலையினை ஒரு தயக்கத்தினைக் காணுகின்ற போது, நமக்குக் கொஞ்சம் அச்சமாக இருக்கிறது. ஒரு பெரிய தொழிற்சாலை, நீண்ட காலமாக பல நாட்களாக நமக்கு வர வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வந்தும், மத்திய அரசாங்கத்தினுடைய முதலீடுகள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு அதிகமாக ஒதுக்கப்படவில்லை. 10, 15 ஆண்டுகளாக உரிய முறையிலே நமக்கு வரவேண்டிய உரிமைகள் வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த நிலைமைக்கு மாறாக மத்திய அரசு நமக்கு அந்த ஒரு பெரிய தொழிற்சாலையை அளிப்பதற்கு அவர்களே முன்வந்து, நம் வேண்டுகோளுக்கிணங்கி, ஒதுக்கித் தந்தார்கள். அப்படி அவர்கள் ஒதுக்கியிருந்தும்கூட, இன்றைய நிலையைப் பார்க்கின்றபோது, ஒரு தயக்க நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தை இந்த உரையிலே காணுகின்ற நிலை இருக்கிறது. நாம் திரும்பவும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை விடாப்பிடியாக, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதால், நாம் அதைப்பெற வேண்டும்.

குறிப்பாக இங்கே பேசப்பட்டது, தமிழ்நாட்டிலே இருந்து, மத்திய ஆட்சியை ஆட்டுவிக்கிறார்கள் என்ற பேச்சும் எழுந்தது. ஆனால், நான் ஒன்று சொல்வேன். தமிழ்நாட்டிலே இருந்துதான் இரண்டு முறை, இரண்டு பிரதமர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமை தேவைப்பட்டது. நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய தயவு அன்றைய தினம் தேவைப்பட்டது. அன்றைய தினம் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களையும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. எப்போதும் கஷ்டங்கள் வருகிற போதெல்லாம், நம்முடைய உதவியை நாடுகிறார்கள். 1968-69லே உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும்; காங்கிரஸிலே ஒரு பிளவு ஏற்பட்டபோது, காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்த போது காங்கிரஸ் பாராளுமன்றத்திலே தொடர்ந்து தேர்தல் வரையிலே இருக்க வேண்டுமென்று சொன்னால், ஆதரவு அளித்த கட்சி அன்றைய தினம் இருந்த தி.மு.க. கட்சி. அவர்களை நீங்கள் கலையுங்கள்; இவர்களைக் கலையுங்கள் அப்போதுதான்



1991 ஜனவரி 25] [திரு. கோ. பூவராகன்]

நாங்கள் உங்களுக்கு ஆதரவு கொடுப்போம் என்று ஒரு நிபந்தனையை விதிக்கவில்லை. அப்போது அவர்கள் [illegible]தெல்லாம், நீங்கள் முற்போக்கான திட்டங்களைக் கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறீர்கள்; பாங்கிகள் தேசியமய மன்னர் மானியம் ஒழிப்பு இவைபோன்ற திட்டங்களை நீங்கள் கொண்டு வருவதாக இருக்கின்ற காரணத்தினாலே, உங்களுக்கு ஆதரவு எங்களுக்கு உண்டு; நாங்கள் எங்கள் ஆதரவை உங்களுக்கு அளிக்கிறோம் என்று அன்றைய தினம் தெரிவித்து, ஆதரவை அளித்து வந்தது. தொடர்ந்து அந்த நிலையிலே வருகிற போது, எப்போதெல்லாம் கஷ்டங்கள், [illegible] அப்படிக் கஷ்டங்கள் வருகிறபோதெல்லாம், தமிழகத்தினுடைய உதவி தேவைப்பட்டு இருக்கிறது. நாம் உதவியை அளித்து வருகிறோம். நான் அமைச்சராக இருந்தபோது, அங்கே மற்ற மாநிலங்களிலே இருந்து வருகிற அமைச்சர்கள் எல்லாம் சொல்வார்கள்; "எப்படி உங்கள் மாநிலம் எவ்வாறு இருக்கிறது" என்று கேட்டால், 'எங்கள் மாநிலத்தைப் பற்றிப் பேச வேண்டாம்; எங்கள் மாநிலம் நல்ல முறையில் நடக்கவேண்டுமென்று சொன்னால், உங்கள் கட்சியிலிருந்து இரண்டு அமைச்சர்களை அனுப்புங்கள்; இரண்டு காரியதரிசிகளை அனுப்புங்கள்; அப்போதுதான் எங்கள் மாநிலத்திலே வளர்ச்சியும் நல்ல நிலைமையும் ஏற்படும்' என்று சொன்ன காலமும் உண்டு. யாராவது ஒரு அமைச்சரை—மத்திய அமைச்சரை அங்கு போய்ப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அப்போதும், 'எங்களிடமா? நேரிலா? வர வேண்டாம்; உங்கள் நாட்டிலேதான், உங்கள் பகுதியிலே தான் எல்லாக் காரியதரிசிகளும் இருக்கிறார்களே! என்ற நிலையும் இருந்தது. நம்முடைய உதவியிலேதான் இன்றைய தினமும் பாராளுமன்றம் மட்டுமல்ல; டெல்லியிலே ஆட்சியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்திய நாடே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வளவு திறமையும், ஆற்றலும் எங்களுக்குப் பயன்படும் என்று பெருமையாகச் சொல்வார்கள். அதேபோல்; இன்றைய தினம் அந்தப் பெருமையைத்தான் நாம் சொல்கிறோம். அதற்கு யாராவது தவறான ஒரு கருத்து—எண்ணத்தோடு சொல்வார்கள் என்று சொன்னால் அதற்கு நாம் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

ஆனால் இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிறவர்கள், எந்த அளவுக்கு அவர்களைவிடத் தாழ்ந்தவர்கள்? எண்ணங்களிலோ, தேசப் பற்றிலோ, தேசத்தினுடைய வளர்ச்சியிலோ, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறபோது, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்காக அப்போது இருந்த பிரதமர் வி.பி.சிங் அவர்கள் எல்லா மாநில முதல்வர்களினுடைய எண்ணங்களைப் புரிந்து, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அவர்களுடைய ஆலோசனைகளைப் பகிர்ந்து கொண்டு ஒரு நல்ல காரியத்தை அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம்கூட

தமிழகத்திற்கு வேறுவிதமான காரணங்களுக்காக வருகிறார்கள், போகிறார்கள். இப்போது இருக்கிற பதவி நிலைக்குமா, எங்களுக்கு ஏதாவது யோசனை கூறுங்கள், ஆசீர்வாதம் வேண்டும் என்று வருகின்றவர்கள் ஒரு பகுதியினர். இன்னொரு பிரிவினர் எங்களுக்கு எதிர்காலத்திலாவது பாரதப் பிரதமர் பதவி வருமா, வராதா, அதற்கு உங்கள் ஆசீர்வாதம் வேண்டும், யோசனை தேவை என்று வருபவர்கள். நாங்கள் வகிக்கின்ற அமைச்சர் பதவிகள் எங்களுக்குத் தொடர்ந்து எத்தனை ஆண்டுக் காலம் நீடிக்கும் என்று இங்கே வந்துதான் கேட்டு ஆசீர்வாதம், ஆலோசனைகள் எல்லாம் பெற்றுச் செல்கிறார்கள்.

10-35 மணி

எப்போதும் தமிழகத்திற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். வேறு காரணத்திற்காக நான் சொல்லவில்லை. ஆனால் இன்றைய தினம் நல்லமுறையில் நடந்து வருகிற ஒரு ஆட்சியைக் கலைத்து விட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் கலைப்பதற்குக் காரணம் இல்லை. இப்போதுதான் காரணத்தைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியைக் கலைக்க சரியான காரணத்தை இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை. நாளையோ, நாளை மறுநாளோ அதற்குக் காரணம் வருமா என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி ஒரு எதிர்க்கட்சி இன்றைய தினம் செயல்பட்டுக்கொண்டிருப்பதை எந்த அளவுக்கு நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொதுவாக வளைகுடாப் போர் காரணமாக விலைவாசிகள் ஏறிவிட்டன. மேலும் ஏறிக்கொண்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால் அது வரும் என்று எதிர்பார்த்து முன்கூட்டியே ஏற்றிவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? போக்குவரத்துக்குத் தேவைப்படுகின்ற டீசல் போன்றவற்றில் ஏற்பட்ட தட்டுப்பாடு மற்றும் அதனுடைய விலையேற்றம்தான் விலையேற்றத்திற்கான காரணம் என்று எல்லாம் சொல்லப்படுகிறது. 27 ஆம் தேதி ஒரு கட்சி போராட்டம்; 28 ஆம் தேதி வேறு ஒரு கட்சி மறியல் போராட்டம் என்று இப்படித் தொடர்ந்து நடத்தினால் அதனால் மேலும் விலைவாசி ஏறக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆங்காங்கு வழக்கமாக உணவுப் பண்டங்களும், மற்றவையும் வருவதற்குத் தடையை ஏற்படுத்துகிறபோது, அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்கிறபோது அதனால் என்ன நன்மை விளைய இருக்கிறது என்று பார்த்தால் விலைவாசி ஏறி, சாதாரண மக்களும், நடுத்தர மக்களும் மிகவும் கஷ்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலைதான் ஏற்பட்டுவிடும். இப்போதே விலைகள் பல மடங்கு கூடி இருக்கின்றன. எந்தக் காய்கறியாக இருந்தாலும் 10 ரூபாய்க்குக் குறைந்து இல்லை. எண்ணெய் விலை 50 ரூபாய், 60 ரூபாய், 70 ரூபாய் என்று போய்விட்டது. அரிசி விலை கூடி இருக்கிறது. எனவே



விலைவாசி ஏற்றத்திற்கு இவர்கள் எடுக்கிற நிலை அல்லது போராட்டம் எந்த அளவிற்கு உதவியாக இருக்கும் என்று நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அவர்கள் மனுக் கொடுத்தார்கள், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். உங்கள் கோரிக்கைகளை இந்தச் சட்டமன்றத்திலே தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்; ஏதாவது குறை இருந்தால் அவற்றைச் சொல்லுங்கள்; விளக்கம் சொல்கிறோம்; சமாதானம் சொல்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு அதிலே இஷ்டம் இல்லை. அவர்கள் சொல்லிவிட்டார்கள், இந்த ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்று. இந்த ஆட்சி நன்றாக நடக்கிறது; நேர்மையாக நடக்கிறது; உண்மையாக நடக்கிறது; அமைதியாக நடக்கிற ஒரு ஆட்சியை எவ்வாறு கலைப்பது என்று கேட்டபோது மற்றவற்றிற்கெல்லாம் அவர்கள் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் கடைசியில் அமைதியைக் குலைப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யலாம் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதனை முதலில் சட்டசபையிலேயே பார்க்கலாமா என்று நினைத்தார்கள். ஆரம்பத்தில் இருந்தே, அதாவது இந்த ஆட்சி வந்ததில் இருந்தே அவர்களுடைய எண்ணம் எல்லாம் முதலமைச்சர் உரையை ஆரம்பத்திலேயே தடுப்பது; கடைசியாக அவர் உரையாற்றுகிறபோது அதைக் கேட்பதற்கு இருப்பதில்லை என்றெல்லாம் இப்படி ஒரு முடிவுக்கே வந்து தொடர்ந்து இவ்வாறு செய்கிறார்கள்.

இந்த முறைகூட கவர்னர் உரையின்போது அவர்கள் அந்த முடிவோடுதான் வந்திருக்கிறார்கள் என்பது தெரியும். கவர்னர் அவர்களிடம் அவர்கள் மறுபடியும் ஏதோ மனுக் கொடுத்தார்கள் என்று நம்முடைய உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன். அன்றைக்கு நடந்த நிகழ்ச்சி கவர்னருக்கு நன்றாகத் தெரியும், அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது. அதைவிடப் பொறுமையாக ஒருவரும் இருக்க முடியாது. கவர்னரும் பொறுமையாக இருந்தார்கள், மன்ற உறுப்பினர்களும் பொறுமையாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் என்னவெல்லாம் சொல்லவேண்டுமோ, அன்றைக்கு அறிக்கை படித்ததன் பெயரிலே அத்தனையையும் படித்துவிட்டார்கள். அந்த அறிக்கை எல்லாம் பத்திரிகைச் செய்தியிலே வந்திருந்தால் மக்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். ஒரு எதிர்க்கட்சி ஆளுநருக்கு என்ன மரியாதை அளித்தது; எந்த அளவுக்கு நடந்துகொண்டார்கள், எப்படி எல்லாம் அவர்கள் செய்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது இந்த மன்றத்திலே எதிர்க்கட்சியின் நிலையை இந்த மன்றத்திற்கு வந்திருக்கின்ற நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படி எல்லாம் ஜனநாயக உணர்வுக்கு மாறாக அவர்கள் நடந்து

கொள்கிறார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் சட்டம் சொல்கிறார்கள். இந்தப் பிரிவு, அந்தப் பிரிவு என்கிறார்கள். பொதுவாக, நம்முடைய பாராளுமன்ற ஜனநாயகம் பிரிட்டிஷ் ஜனநாயக முறையை ஒட்டி அமைந்திருக்கிறது. சட்டத்தைவிட சம்பிரதாயத்தைத்தான் நாம் அதிகமாக மதிக்கிறோம். அப்படி சம்பிரதாயத்தை மதிக்கிறபோது ஒவ்வொரு நடைமுறையிலும் நாம் எல்லைமீறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. ஒரு விதிமுறை இருக்கிறது.

10-40 மணி

சட்டத்தைப் பார்த்து நடத்தமுடியாது. அந்த சம்பிரதாயப்படித்தான் பாராளுமன்றமும், சட்டமன்றமும் நடந்து கொண்டிருக்கிறது. அந்த சம்பிரதாயத்திலே எதிர்க்கட்சிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத்தான் நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த சம்பிரதாயத்தை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் நாம் பார்க்கிறோம். பாராளுமன்றத்திலே இருந்தாலும், சட்டமன்றத்திலே என்று இருந்தாலும், அப்போது இருக்கின்ற சபாநாயகர்கள் முன்னுதாரணத்தைப் படித்துக் காட்டுகிறார்கள். அந்த முன்னுதாரணம் எப்படி வருகிறது? சட்டப்படி வருகிறதா? இல்லை. முன்னுதாரணம், அப்போது இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ அப்போது நடந்து கொண்ட அந்த நடவடிக்கைகளிலே இருந்து அவர்கள் கொடுக்கின்ற தீர்ப்பின் மூலம் வருகிறது. ஒரு சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். அந்த சம்பிரதாயத்திற்கு இன்றைக்கு எதிர்க்கட்சிகளாக இருப்பவர்கள் இன்றைய தினம் என்ன முறையிலே நடந்து கொள்கிறார்கள் என்று அந்த முறையில் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த சம்பிரதாயத்தையும் கடைப்பிடிப்பதாக இல்லை. சட்டத்தையும் கடைப்பிடிப்பதாக இல்லை. இரண்டுக்கும் முரணாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம், எந்த வழியிலேயாவது ஆட்சியைக் கலைத்து விடுங்கள். அது ஒரு வழி. எந்த வழி? அப்போது குறுக்கு வழி என்கிறார்கள். ''நல்லவனுக்கு 4 வழி முரடனுக்கு ஒரே வழி'' என்று சொல்வார்கள். அந்த மாதிரி அவர்கள் 4 வழியை விட்டுவிட்டு, ஒரு வழியிலே போய் குறுக்கு வழியிலே இந்த ஆட்சியைக் கலைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். தினந்தோறும் அங்கே வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது, இப்போது இருக்கின்ற பாரதப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்களுக்கு நிபந்தனை விதித்திருக்கிறார்கள். நான் முன்பே சொன்னேன். அன்றுகூட இந்திரா காந்தி அம்மையாருக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளித்தது. எப்போது ஆதரவு? இன்னின்ன முற்போக்குக் காரியங்கள் செய்கின்றபோது, எங்களுடைய ஆதரவு அதற்கு என்றார்கள். இப்போது இருக்கின்ற கட்சி என்ன சொல்கிறார்கள்? இவர்களைக் கலைத்துவிட்டால் எங்களுடைய ஆதரவு உங்களுக்கு இல்லை. கலைப்பதற்கு ஆதரவு. அப்போது என்ன ஜனநாயகம்?



அப்போது என்ன நிலை? இவர்களைக் கலைத்துவிட்டால்தான் உங்களுக்கு ஆதரவு. கை தூக்குவோம். இல்லை என்றால் கை தூக்க மாட்டோம் என்கின்ற நிலை இருக்கும்போது இப்படி ஒரு எதிர்க்கட்சி இருக்குமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் பாராளுமன்றத்திலே பாரதப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்களுக்கு முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களுடைய கட்சி ஒரு நிபந்தனை விதித்திருக்கிறது. என்ன நிபந்தனை என்றால், அவர்களே இப்போது குறை சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள், '' இந்த வெளிநாட்டு விஷயத்திலே இப்போது இருக்கின்ற பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு முன் யோசனையோடு நடந்துகொள்ளவில்லை. அவருடைய நிலையை உணர்த்தவில்லை. இதனாலே நம்முடைய இந்திய நாட்டின் பெருமை பாதுகாக்கப்படவில்லை'' என்றெல்லாம் குறைப்பட்டு, நான்கு விதமாகக் கோரிக்கைகளை வைத்து இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதிலே இப்போது எல்.டி.டி.ஈ. உல்பா என்று இரண்டு பெரிய பிரச்சினைகளை முதலில் வைத்தார்கள். அது கொஞ்சம் அவர்களுக்கு அவ்வளவாகக் கிட்டவில்லை. நல்ல செய்திகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பூராவும் போய்விட்டது. எல்.டி.டி.ஈ. எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. அதனாலேதான் இந்த இரண்டும் நீங்கள் சொன்ன மாதிரி இல்லையே, இதெல்லாம் ஏற்கனவே நிலையாக இருந்ததே தவிர, இந்தப் புதிய ஆட்சி வந்த பிறகு முளைத்ததாக இல்லையே, நீங்கள் சொல்கின்ற காரியங்கள் மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்ற காரியமாக இருக்கின்ற காரணத்தினாலே இதிலே மாநில அரசாங்கத்திற்கு எந்த அளவுக்குப் பொறுப்பு இருக்கின்றது. அதிலே, அவர்கள் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுப்பும்போதுதான் இந்த சாலை மறியல் வருகிறது. சாலை மறியலிலே என்ன வருமோ? உல்பா, எல்.டி.டி.ஈ. இரண்டும் போய்விட்டது. இப்போது வேறு என்ன வருமோ தெரியாது. அதனாலேதான் அவர்கள் உல்பா, எல்.டி.டி.ஈ. பற்றி எல்லாம் குறிக்கின்ற போது, இந்த உல்பா, எல்.டி.டி.ஈ. பற்றி பூர்வீக வரலாற்றைப் பார்க்க வேண்டும். அதிலே எல்லாம் போகவேண்டுமென்றால் எனக்கு நேரம் இல்லை. அதைப்பற்றி எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்த அரசாங்கத்துக்கும் அதற்கும் என்ன இருக்கிறது? ஏற்கனவே பாராளுமன்றத்திலேகூட ஒரு முறை கேள்வி எழுப்பப்பட்டது. இந்த நாட்டிலே வெளி நாட்டவர் வருகின்றபோது விசா கொடுக்கிறார்கள். அந்த விசாவில் இத்தனை வருடம், இத்தனை மாதம், இத்தனை நாட்கள்தான் இருக்கவேண்டும் என்று நியதி இருக்கிறது. இந்த விசாக் காலம் கடந்து எத்தனையோ பேர் இந்திய நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டவர் என்று கேட்கிற போது, பல்லாயிரக்கணக்கான பேர் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விசாக் காலம் முடிந்தும்கூட இருக்கிறார்கள் என்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு யார் பொறுப்பு?

[திரு. கோ. பூவராகன்] [1991 சனவரி 25

அப்படிப்பட்டவர்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். என்ன ஏற்பாடு? நம் ஊரிலேயே உல்பா இருக்கிறதா? எல்.டி.டி.ஈ. இருக்கிறதா? மற்ற நிலைக்கும் நம் நிலைக்கும் வேறுபாடு இருக்கும். என்னவென்றால் இலங்கையிலே தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்கிறது. நாம் கடாரம் கொண்டோம் என்றெல்லாம் சொல்கிறோம். நம்முடையவர்கள் அங்கே இருக்கின்றார்கள். உறவு முறைகள் நிறைய இருக்கின்றன. இங்கே எதற்காக வருகிறார்கள்? எப்படி வருகிறார்கள்? எப்படிப் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. சமீபத்திலே இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்கனவே இலங்கையிலே ஆட்சி செய்த ஒரு மன்னருடைய நினைவுச் சின்னத்தை வைத்திருக்கிறார்கள். வரலாறு பல இருக்கின்றன. வடக்கே இருக்கின்ற நிலைமைக்கும் நம் நிலைமைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. அவர்கள் மாதிரி நாமும் நடந்து கொள்ள முடியாது. இங்கே உள்ள சிலர் சொல்வதுபோல நம்முடைய இரத்தத்தின் இரத்தங்கள் இலங்கையில் இருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது.) நான் இன்னும் முக்கியமான பிரச்சினைக்கு வரவில்லை. இந்த மாதிரிக் குறுக்கீட்டால் அப்புறம் என்னுடைய பேச்சு தடைப்பட்டு விடும். விரைவில் முடித்து விடுகிறேன்.

**10-45 மணி.**

நான் இங்கே சொல்வதெல்லாம் மற்ற மாநிலங்களுடனோ, வட மாநிலங்களுடனோ நம் மாநிலத்திற்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. இது தனிப் பிரச்சினை. ஆகவே, இலங்கையில் இருப்பவர்களை எங்கே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. பன்னெடுங்காலமாக நமக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருக்கிறது. மாமன் மச்சான் உறவு முறை இருக்கிறது. நம்முடைய சொந்தக்காரர்கள் அங்கே இருக்கிறார்கள். ஆகவே, இது மற்ற மாநிலத்திலுள்ள பிரச்சினை மாதிரி அல்ல. அவர்கள் இப்படிச் சொல்வதன் மூலம் நேரடியாக நாம் பாதிக்கப்படுகிறோம் என்று சொல்வதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்.டி.டி.ஈ.-க்கு இவர்கள் உதவி செய்தார்கள். மற்றவர்களுக்கு இவர்கள் உதவி செய்து விட்டார்கள் என்று சொல்கிறவர்களுக்கு நான் சொல்கிறேன். அவர்களுக்கு அதிக உதவி செய்தது யார். குறைந்த உதவி செய்தது யார். என்று பார்த்தால் நம்முடைய அரசுதான் குறைவாக உதவி செய்தது. நம் அரசு எல்லோரையும் ஒரே மாதிரி பார்க்கிற நிலைமை இருக்கிறது. அதனால்தான் திரு. வி. பி. சிங் அவர்கள் பொறுப்பேற்றபோது நம் முதல்வரிடம் இலங்கைத் தமிழர்களுக்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிகின்றபொறுப்பை ஒப்படைத்தார்கள். நம்முடைய முதல்வர் அவர்களும் பல்வேறு பிரிவினரையும் அழைத்து உங்கள் குறைகள், பிரச்சினைகள் என்னென்ன என்று என்னிடம் சொல்லுங்கள், நான் பிரதமர் அவர்களிடம் எடுத்துச் சொல்கிறேன் என்று சொன்னார்கள்.



1991 சனவரி 25] [திரு. கோ. பூவராகன்]

அதுமட்டுமல்ல, எல்லோரும் ஒன்றுபட்டு வாருங்கள், இது தக்க சமயம். இதை நன்கு பயன்படுத்துங்கள் என்றும் நம்முடைய முதல்வர் அவர்கள் அவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். ஆகவே, அன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க எல்லா நிலையிலும் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

இப்போது இவர்கள் ஏதோ ஒரு காரணம் சொல்வதற்காக ஆயுதங்கள் அங்கே போயிற்று, இங்கே போயிற்று என்று சொல்கிறார்கள். அதுமாத்திரமல்ல, அடுத்ததாக இங்கிருந்து தகவல்கள் அங்கே போய் விட்டதாகச் சொல்கிறார்கள். தகவல்களை வெளியிடுவதைப் பொறுத்தவரையில், நான் அறிந்தவரையில் டெல்லியிலிருந்துதான் அதிகமான தகவல்கள் வெளிநாட்டுக்குப் போய் விடும் நிலை இருக்கிறது. வெளிநாடுகளிடம் தகவல்களை வெளியிட்டுவிட்டார்கள் என்கிற காரணத்திற்காக மத்திய அரசு சிலரை வெளியேற்றிய சம்பவம் கூட சில வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது அனைவருக்கும் தெரியும். ஆகவே, இங்கேயிருந்து தகவல்களை வெளியிட்டு விட்டார்கள் என்பது உண்மையா, இல்லையா என்று பார்க்கும்போது, நான் ஒன்று சொல்கிறேன். டெல்லியில் இம்மாதிரி தகவல்களை அளிக்கிற சில நிறுவனங்களே உண்டு. சில தனி ஆட்களே உண்டு. ஒருவர் கையெழுத்தை இன்னொருவர் போடுவது, ஒருவர் பெயரில் இன்னொருவர் வங்கிக் கணக்கை வைத்துக்கொள்ளுதல் போன்ற சம்பவங்கள் எல்லாம் அங்கே நடப்பது உண்டு.

போபார்ஸ் இஷ்யூவில் என்ன நடந்தது என்பதுபற்றி விலாவாரியாக இருந்தது. கையூட்டுப் பெற்றார்கள் என்று எல்லாம் அப்போது செய்தி வந்தபோது இவர்கள் எல்லாம் எங்கே போயிருந்தார்கள்? இங்கேயிருந்து ஆயுதங்கள் கொண்டு போகிறார்களாம், இப்போதும் போய்க் கொண்டிருக்கிறதாம். அது எந்தப் பக்கம் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் போகலாம். காரணம், போக்குவரத்து வசதி இப்போது அதிகமாக இருக்கிற காரணத்தினால் அப்படிப்பட்ட போக்கு இருக்கிறது. அம்மாதிரி ஒரு செய்தி போகிறபோது, அந்தச் செய்தி ஒருவர் மூலமாக மட்டும்தான் போகிறது என்கின்ற நிலை கூட சரியல்ல. அதிலும்மிகத் திறமையும், பல வருடங்கள் முதலமைச்சராக இருந்த பெருமையும் வாய்ந்த ஒரு முதலமைச்சர் மீது இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டைச் சொன்னதை யாரும் ஒத்துக்கொள்ள முடியாது. அவர்கள் இருவரும் பேசிய பேச்சு என்று இவர்கள் சொல்கிறார்கள் என்னிடம்தான் அந்தச்செய்தியைச்சொல்லவேயில்லையே, அப்படி இருக்கும்போது அந்தச் செய்தியை அவர்களே கூட சொல்லியிருக்கலாம் அல்லவா? நல்ல முறையில் நடைபெறுகிற ஒரு ஆட்சியை இம்மாதிரி பொய்யான காரணங்களைச் சொல்லிக் கலைப்பதற்குச் சொல்வது சரிதானா? இதில் மத்திய அரசு தலையிடுவதோ அல்லது தமிழ்நாட்டுப் பிரச்சினைகளில் பிரதமர் கலந்துகொள்கிற அளவுக்கு எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துவதும், கோரிக்கை

[திரு. கோ. பூவராகன்] [1991 ஜனவரி 25

வைப்பதும் அவ்வளவு பொருத்தமாக இருக்காது. பொறுத்து இருந்து, குறிப்பிட்ட காலவரையறை வரை காத்திருந்து, மக்களிடம் குறைகளைப் பொறுமையாகத் தெரிவித்து, நிலைமை களை எடுத்து வைத்து, இவர்கள் பெருமை பெற்று, தேர்தலில் வெற்றி பெற்று அதன் மூலமாக ஆட்சிக்கு வருவதுதான் முறை யாக இருக்குமே தவிர, குறுகிய வழியில் மக்கள் உணர்வுகளைத் தூண்டிவிட்டு ஆட்சிக்கு வரத் துடிப்பது அவ்வளவு சரியாக இருக் காது. இன்றைக்கு நீங்கள் செய்வது நாளைக்கு உங்களுக்கு ஏற் படும். 'என் கத்தியை அவன் வாங்கி வைத்தான், அவன் கத்தியை இவன் பிடுங்கி வைத்தான்' என்று சொல்லுவார்களே, அம்மாதிரி நிலைமை நிச்சயமாக உங்களுக்கு வரும். அது எவ்வளவு பொருத் தமாக இருக்கும் என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**10-50 மணி**

ஓரிரு மணித் துளிகளிலே முடிக்கலாமென்று இருக்கிறேன். சென்னை நகரத்திலே கொசுத் தொல்லை அதிகமாக இருக் கிறது. அந்தக் கொசுத் தொல்லையைப் போக்குவதற்கு சென்ற முறையே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். திரு. செங்கை சிவம் போன்றவர்கள் சொன்னார்கள். முதல்வர் அவர்கள்கூட, அவருடைய தொகுதியிலே பத்திரிகை யாளர்கள் அவரைப் பேட்டி கண்டபோது, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் உடனடியாக என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 3 காரியங்களை உடனடியாக சென்னை நகரத்தில் செய்ய வேண்டுமென்பது என்னுடைய ஏற்பாடு. ஒன்று, கொசுத் தொல்லையை ஒழிப்பது ; இரண்டாவது, குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது ; மூன்றாவது, வீட்டு வசதியைப் பெருக்குவது என்று சொல்லியிருக்கிறார்கள். கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு, பம்பாய், கல்கத்தா, டெல்லி நகரங்களில் தனி நிறுவனம், சுகாதாரத் துறையோடு இணையாமல், தனியாகச் செயல்படுகிறது. கொசுத் தொல்லையைத் தடுப்பதற்கு அல்லது அதைப் போக்குவதற்கு என்று ஒரு இலாக்கா ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே முறையிலே சென்னை மாநகரத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்காக அதிகாரிகள் எல்லாம் ஒன்று கூடிப் பேசினார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சுகாதாரத் துறை அமைச்சர் அவர் களும் சேர்ந்து அதற்கு ஒரு நல்ல முறையைக் கண்டறிந்து, புதிய அளவிலே ஒரு இலாக்காவை ஏற்பாடு செய்ய வேண்டு மென்று 2, 3 மாதங்களுக்கு முன்னாலே பேச்சு நடந்தது. பத்திரிகையிலேகூட செய்தி வந்தது. பிளானிங் கமிஷன் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட அதற்கு ஏற்பாடு செய்து, கவர்னர் வந்து உரையாற்றி, மாணவர்கள் எல்லாம் பங்கேற்று, அதற்குத் தனி இலாக்கா வேண்டுமென்று



1991 சனவரி 25] [திரு. கோ. பூவராகன்]

எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். இன்றையதினம் அது ஹெல்த் மினிஸ்டர் இடத்திலே கட்டிப் போடப்பட்டிருக்கிற தென்று சொல்லப்படுகிறது. இன்றைய தினம் மூளைக் காய்ச்சல் நோய், மலேரியா நோய் போன்றவை இந்திய நாட்டிலேயே சென்னை நகரத்திலேதான் அதிகமாக இருக்கிற தென்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க தனி இலாக்கா அமைத்து, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை யில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து 30 கோடி ரூபாய் ராயல்டியாக பெறப்பட்டிருக்கிறது. 1956லேயே கொடுக்க வேண்டியது. 30 வருடங்களுக்குப் பிறகு, முன்னாலே இருந்த மத்திய ஆட்சி, நம்முடைய முதல்வ ரவர்களுடைய வேண்டுகோளை ஏற்று தமிழகத்திற்கு 30 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் இருக்கிற பகுதிகளிலே பெருவாரியான நீர் வளம் கீழே போய்விட்டது. கவர்னர் உரையிலே நீர் வளத்தைப் பெருக்குவதற்கு பாலாறு, வெள்ளாறு ஆகிய வைகளிலே மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போல இந்தப் பகுதியை யும் எடுத்துக்கொண்டு, 30 கோடி ரூபாயில் சில கோடி ரூபாய்களை ஒதுக்கி, அந்த ஊர் மக்கள் விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே பெண்கள் கல்லூரி, ஆண்கள் கல்லூரி, தொழிற் கல்லூரி ஆரம்பிப்பதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். அந்தப் பகுதியிலே காகிதத் தொழிற்சாலை ஒன்று வருவதாக இருந்தது. அதைப் பற்றிப் பேச்சு மூச்சு காணவில்லை. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அது வருமென்று எதிர்பார்க்கிறேன். அது என்னுடைய பகுதியிலே என்னுடைய தொகுதியிலே வந்தால் கூட வரவேற்கலாம். அதற்கு வேண்டிய எல்லா ஆதாரங்களும், எல்லா வாய்ப்பு வசதிகளும் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. இங்கே செங்கற்பட்டு மாவட்டத்திலே, திருப்போரூர் வட்டத்திலே நெமிலி என்ற கிராமத்திலே ஆளவந்தார் நாயக்கர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஆயிரங்காணி ஆளவந்தார் என்று பெயர். ஆயிரம் காணிக்கு உரியவர். அப்போது விலை போகாத நிலைமை இருந்தது. இப்போது ஒரு ஏக்கர் 10 லட்சம் ரூபாய் போகிறது. அது நம்முடைய அறநிலையத்துறையின் பொறுப்பிலே இருக்கிறது. யார் யாரோ அந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். 500 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்து இருக்கிறது.

அதை ஒரு வன்னியர், நாயக்கர் ஏற்பாடு செய்திருக்கிறார். அந்தப் பகுதியை ஒரு வளமாகச் செய்து, ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்குக்கூட பண வசதி அங்கே உண்டு. நம்முடைய அரசாங்கம், நம்முடைய முதல்வரவர்கள், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள், மற்ற அமைச்சர்கள் எல்லாம் அதை ஆராய்ந்து பார்த்து, அந்தப் பகுதியிலே பெரிய வளாகத்தை, தொழில் வளத்திற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் ஏற்படுத்தி எல்லா வகையிலும் அந்தச் சமுதாய மக்கள் வளமடைய ஏற்பாடு செய்ய வெண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வகையிலே நாம் ஓரளவுக்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அமைச்சரவர்கள் வியாபாரிகளைக் கண்டு பேசி, கூடிப் பேசி, அவர்களுக்கு உள்ள சங்கடங்களைப் புரிந்து, அவர்களுக்கு உதவி செய்து, ஒரு கார்டு கொடுக்கலாம். டீசல் வாங்குவதற்குத் தேவையான கார்டுகள் கொடுத்து, எத்தனை வாகனங்கள் வந்து போகின்றனவோ, அந்த வாகனங்களுக்கு வசதி செய்து கொடுத்து, அந்தக் காய்கறி விலைகளைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். உணவுப் பண்டங்கள், எண்ணெய்கள் இவைகளின் விலைகளை எல்லாம் குறைப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

10-55 மணி

இந்த கவர்னர் உரையிலே அரசாங்கம் முன்னோடித் திட்டமாக, இந்த பட்ஜெட்டுக்கு முன்னாலே என்னென்ன காரியங்கள் — இந்த அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு எடுத்ததாக இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே மிகவும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டு வசதிகள் செய்ய இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வந்து இருக்கிற காரணத்தால்— அவருடைய கவனம், அவர் எங்கே இருந்தாலும் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருப்பார்கள் ; எனக்கு நன்றாகத் தெரியும் — அவர்கள் இந்தச் சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள் ; இந்தச் சமுதாய மக்களின் பேரில் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்காகப் பாடுபட வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். நான் இந்தச் சமயத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முழுவதுமாக உங்களையே நம்பி இருக்கின்ற ஒரு சமுதாய மக்களுக்கு நீங்கள் எந்த அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னவெல்லாம் நல்ல ஏற்பாடு செய்ய இருக்கிறீர்கள் என்று இந்தச் சமுதாய மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் நல்லதே செய்வீர்கள் ; அதுவும்



இன்றே நல்லது செய்வீர்கள் என்று சொல்லிக்கொண்டு நீங்கள் நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டு வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (அ) திருப்பூர், பல்லடம் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் பல்லடம், திருப்பூர் பகுதிகளில் கடுமையான குடிதண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது ; எனவே பரம்பிக்குள்ம் பிரதானக் கால்வாயிலிருந்து குளம் குட்டைகளுக்காவது குடிதண்ணீர் விடப்படுமா என்று கேட்டார். திடீரென்று கேட்ட நேரத்திலே என்னிடத்திலே போதிய செய்திகள் இல்லை ; அதிகாரிகளோடு கலந்துபேசிய பிறகு சொல்வதாகக் கூறினேன். பரம்பிக்குளம் — ஆளியாறு பாசனத்தில் முதல் மண்டலத்துக்கு தண்ணீர் வழங்குவது 21—1—1990 முதல் நிறுத்தப்பட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி தண்ணீர் கேட்கும் குளம் குட்டை பகுதிகள், இரண்டாவது மூன்றாவது பகுதி அவற்றைச் சுற்றியுள்ள பகுதி விரிவாக்கப் பகுதியாக இருப்பதாலும், குடிநீர் மக்களுக்கு அத்தியாவசியம் என்பதாலும் 500 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்துவிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திருப்பூர், பல்லடம் பகுதி மக்களுடைய கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை அவர்கள் சார்பாக நான் காலையிலேயே எடுத்துச் சொல்லி பி.ஏ.பி. மூலமாக தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டதற்கு, அதிகாரிகளைக் கலந்து சொல்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரை மணி நேரத்திற்குள்ளாகவே அதுபற்றி கேட்டு அந்தப் பகுதிக்கு தண்ணீர் விடப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்து இருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் ர்களுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் அப்பகுதி மக்களின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

## 10. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் கலந்து கொண்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய

[திரு. பி. எச். பாண்டியன்] [1991 சனவரி 25

கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். ஆளுநர் இந்த அவையில் உரை நிகழ்த்துவாரா, நிகழ்த்தமாட்டாரா என்றெல்லாம் நவம்பர் மாதத்திலிருந்து ஒரு பெரிய பரபரப்பான செய்தியே தமிழகத்தில் பல்வேறு பத்திரிகைகளும், பல்வேறு அரசியல் தெரியாத அரசியல்வாதிகளும் பேசிக் கொண்டு இருந்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆளுநர் உரையைப் படிப்பதற்கு முன்பே இந்த ஆட்சி கவிழ்ந்து விடும் ; இந்த சட்டசபையைக் கலைத்துவிடுவார்கள் என்பது தான் பெரிய, பெரிய பாரம்பரியம் உள்ள பத்திரிகைகள் எல்லாம், யாரையோ எண்ணிப் பார்த்து பல்வேறு செய்திகளை வெளியிட்டுக் கொண்டு இருந்தார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளாக டில்லி பாராளுமன்றத்தில் அன்றைக்கு உள்ள மத்திய ஆட்சியை, ராஜீவ் காந்தியினுடைய ஆட்சியை இறக்க வேண்டுமென்று எப்படிப் பல்வேறு பத்திரிகைகள் கங்கணம் கட்டிக் கொண்டு செய்திகளை வெளியிட்டனவோ, அதற்குப் பிறகு அவர்கள் வெளியிட்ட செய்தியை நம்பி மக்கள் எல்லாம் வாக்களித்து அன்று ஆட்சி மாற்றத்தை மத்தியில் உருவாக்கினார்களோ, அதே பாணியில் அதே பத்திரிகைகள் தமிழ் நாட்டில் இங்கேயும் இந்தச் செய்தியை வெளியிட்டன என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லியாக வேண்டும் இந்தியா முழுவதும் போபார்ஸ் பிரச்சினையை எடுத்துச் சொல்லி நமக்கெல்லாம் கிடைக்காத, அரசாங்கத்துக்கெல்லாம் கிடைக்காத ஆவணங்களை ''இந்து பத்திரிகை, எக்ஸ்பிரஸ் பத்திரிகை'' இரண்டும் பெற்று முழுமையான பத்திரிகைச் செய்தியைப் போட்டு அன்றைக்கு நாட்டில் மக்களை நம்ப வைத்தார்கள்.

ஆனால் இன்றைக்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவுடன் மண்டல் கமிஷனை திரு. வி. பி. சிங் நிறைவேற்றியவுடன் அதே பத்திரிகைகளுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர்கள் எண்ணிக் கொண்டார்கள்—நாங்கள் நினைத்தால் ஒருவர் பிரதமர் ; நாங்கள் நினைத்தால் ஒருவர் முதலமைச்சர். ஆகவே மண்டல் பிரச்சினையைப் பெரிதாக்கி அதே பத்திரிகைகள்—'' இந்து '', '' இந்தியன் எக்ஸ்பிரஸ் ''—இந்தியா முழுவதும் வி. பி. சிங் மீது காழ்ப்புணர்ச்சியை பல்வேறு சமுதாயத்தினரால் வீசச் சொல்லி, அவரும் பதவி இழந்தார். ஆகவே' நாங்கள் இந்தியா முழுவதும் மாற்றத்தை உருவாக்கக் கூடிய சக்தியைப் பெற்றவர்கள், நாங்கள் சொன்னால் மக்கள் நம்புவார்கள் என்று இங்கேயும் தமிழகத்தில் சட்டமன்றம் கலைந்துவிடும், ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று பரப்ப ஆரம்பித்தார்கள் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக. இன்றைக்கும் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

11-00 மணி

சட்டமன்றத்தில் — திரு. சிங்காரம் என்று எண்ணுகிறேன் பேசினார் முழுமையாக. அவைகளை எல்லாம் முழுமையாக '' இந்து '' பத்திரிகை வெளியிடவில்லை. ஆனால் இறுதியில்



1991 சனவரி 25] [திரு. பி. எச். பாண்டியன்]

1994 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற சட்டமன்றத் தேர்தலைப் பற்றி. காரணம்—நம்முடைய தமிழ்நாடு தான் எதையும் தெரியாத நாடு ; நம்முடைய தமிழ்நாடு தான் எதையும் தெரியாத நாடு ; நம்முடைய தமிழ்நாட்டு மக்கள்தான் எதையும் புரியாத மக்கள் ; நம்முடைய தமிழ் நாட்டு மக்கள்தான் எதையும் புரியாத மக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்னால், தமிழ்நாட்டில் நன்மை செய்யக்கூடியவர்களுக்கு மக்கள் பின்னணி வருவதே கிடையாது. இது இந்த நாட்டின் சாபக்கேடு. நன்மை செய்யச் செய்ய பின்னணி குறைந்துகொண்டே இருக்கும். சும்மா இருந்தால் எதையும் செய்யாமல் இருந்தார்கள் பெரியோர்கள் என்று எண்ணிக் கொள்வார்கள். சாதாரணமாக நீங்கள் காட்சியளிப்பீர்களேயானால் நம்பமாட்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் அப்படி. இன்றைக்கு அவர்களுடைய பலவீனத்தைப் புரிந்து கொண்ட அரசியல்வாதிகள், ஏமாற்றுகின்ற அரசியல்வாதிகள் இன்றைக்கு அரசியல் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே முதலமைச்சர் அவர்களே, எவ்வளவோ திட்டத்தை இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றியிருக்கிறீர்கள், ஆளுநர் உரையிலும் சொல்லியிருக்கிறீர்கள். நான் அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன், தமிழக மக்கள் வேலை செய்பவர்களுக்கு, சட்டமன்றத்தில் பேசக் கூடியவர்களுக்கு, மக்களின் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கிறவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கவே மாட்டார்கள். புரிந்து கொள்ளுங்கள். இது நான்கில் ஒரு வாக்கு. சும்மா இருக்கக்கூடியவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் வாக்குகளைப் பெறலாம். தியாகமே வேண்டாம், சேவையே வேண்டாம், சும்மா இருந்தால் இந்த நாட்டில் எதையும் செய்யலாம். தவறாக எண்ணி விடாதீர்கள், இந்த மக்கள் அப்படி, நான் உயர்நீதிமன்றத்தில் கூடக் கூறுவது உண்டு, இந்த நாடு ஒரு புறம்போக்கு நாடு என்று. எதையும் செய்யலாம். இந்த நாட்டில் யாரும் குடியேறலாம். குடியேறி யாரையும் மேய்க்கலாம், யாரையும் ஏய்க்கலாம்.

11-05 மணி

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக இந்த நாட்டைப்பற்றி புறம்போக்கு நாடு என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆகவே அந்த வார்த்தையை தயவுசெய்து எடுத்து விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : நீங்கள் பேசுகிற போது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மணியடித்தால், சிந்தனை ஓட்டம் தடைப்பட்டு விட்டதே என்று சொல்வீர்கள். அப்படித் தானே திரு. பாண்டியனுக்கும் தடைப்படும் ?

இந்த ஆட்சி கவிழ வேண்டும் என்று ஒரே ஒரு வார்த்தையைத்தான் சொன்னார். அதைத்தான் பெரிய கொட்டை எழுத்தில் ''இந்து'' பத்திரிகை பிரசுரித்தது. அவர்களுடைய ஆதங்கம், அவர்களுடைய ஆசை புரிகிறது. யாருக்காகவே ஆலோசகர்களாக இன்றைக்கு மாறி ஆலோசனைகளைச் சொல்லி, இன்றைக்குத் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றைச் சொல்லுகிறேன். இதே உணர்வை நாங்கள் எல்லாம், நாமெல்லாம் பெறுவோமானால் இந்த நாடு என்ன ஆகும் ? பெரும்பான்மை சமுதாயத்தினர் சிறுபான்மையினரோடு ஒத்து வாழ வேண்டும் என்றுதானே நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்ந்த காரணத்தாலேதான் இன்றைக்கு இது போன்ற எழுத்துக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஆனால் சட்டரீதியாக சட்டமன்றத்தைக் கலைக்கவே முடியாது. 1988ஆம் ஆண்டிலிருந்து அரசியல் நிர்ணயச் சட்டம் விமர்சனம் செய்யப்படுவது வளர்ந்துள்ளது என்பதை அந்தப் பத்திரிகைகள் உணரும். சட்டமன்றத்தைக் கலைக்கவே முடியாது. 1988 ஆம் ஆண்டு நாகாலாந்தில் சட்டசபையைக் கலைத்தார்கள். நாகாலாந்து சட்டசபையின் சார்பில் கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தார்கள். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கீழ் அமைந்த பெஞ்ச் என்ன சொன்னது தெரியுமா ? அந்த சட்டசபையைக் கலைத்தது தவறு, சட்டசபையை மீண்டும் உயிர் கொடுத்துக் கூட்ட வேண்டும் என்று பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டி 1988 ஆம் ஆண்டு அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அது இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கும் இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவே ஒரு சட்டமன்றத்தைக் கலைக்கக் கூடிய அதிகாரம் ஆயுள் முழுவதும் உண்டு என்ற நிலை இன்றைக்கு மாறியிருக்கிறது. ஆதலால்தான் பாண்டிச்சேரியில் கலைக்கவில்லை. ஏதோ அவர்கள் தார்மீகரீதியாக விட்டு வைத்ததாக எண்ணிக் கொள்ளாதீர்கள். இன்றைக்குச் சட்டம் அப்படி. சட்டமன்றத்தைக் கலைக்கவே முடியாது. ஆனால் அந்தத் தீர்ப்பை வழங்கிய தலைமை நீதிபதியின் நிலைமை என்ன தெரியுமா ? அவர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்படவில்லை.

அதற்குப் பிறகு ஒரே வாரத்தில், வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த தலைமை நீதிபதியை அழைத்து உச்ச நீதிமன்ற நீதிபதியாக ஆக்கினார்கள், அன்றைக்கு அவருக்குப் பாடத்தைக் கற்பிக்க. ஆகவே தப்புக் கணக்குப் போடக் கூடிய பத்திரிகைகள், தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கக் கூடிய அரசியல் தெரியாத அரசியல் கட்சிகள் கூட்டணியைப் பற்றி இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்,





**திரு. கோ. பூவராகன்** : இவர் வேறு சிந்தனைக்குப் போகிறார். புறம்போக்கு என்று சொல்வது . . . . . . (குறுக்கீடு).

**திரு. பி. எச். பாண்டியன்** : தலைவர் அவர்களே, புறம்போக்குப் பகுதியில் வாழ்கின்றவர்களுக்கு இந்த நாட்டில் பட்டா எளிதில் கிடைக்கிறது. ஆதி திராவிடர்கள் யார் ? அரிசன மக்கள். ஆதி திராவிட மக்கள். அவர்களுக்கு எங்கே பட்டா கொடுக்கிறோம் ? ஒரு செண்ட், 2 செண்ட் பட்டா கொடுக்கிறோம். இந்த நாட்டுக்கே அவர்கள் சொந்தம். ஆதி திராவிடர்களுக்குப் பாவம் பார்த்து கான்கிரீட் வீடு, ஆனால் பிழைக்க வந்தவர்களுக்கு எல்லாம் பெரிய, பெரிய பங்களா. ஆனால் அந்த ஆதி திராவிட மக்கள் யார் பின்னால் இருக்கிறார்கள் ? வெள்ளையாக இருக்க வேண்டும். ஏன் என்றால் நம்மை எல்லாம் பார்த்தால் மதிக்க மாட்டார்கள். கறுப்பாக இருப்பவர்களுக்கு அரசியலில் அதிக ஆதரவு கிடையாது இந்த நாட்டில். அது ஒன்று. கறுப்பா ? (சிரிப்பு) பத்திரிகையில் கூட கறுப்பாக இருப்பவர்களுக்கு அதிகமாக விளம்பரம் கொடுக்க மாட்டார்கள். கற்பு குறையக் குறைய பெரிய, பெரிய தலைவியாக ஆகலாம். நான் கூட இரண்டு பேரிடம் கேட்டேன். ஔவையாருக்கும் மாலை அணிவித்தீர்களே, ஏன் போய் கண்ணகி சிலைக்கு மாலை அணிவிக்கவில்லை என்று கேட்டேன். காரணம், நானும் 10—12 ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். கண்ணகியை யாரும் சீண்டுவதே கிடையாது. கடற்கரையில் இருக்கிற கண்ணகி சிலைக்கு யாராவது மாலை அணிவித்திருக்கிறோமா ? அங்கே மாலை அணிவித்தால் இன்றைக்கு இது போன்ற நிகழ்ச்சிகள் சட்டமன்றத்தில் நடக்குமா? இது போன்றவர்கள் சட்டமன்றத்தில் தோன்றிவிடுவார்களா ?

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு தலைவர் அவர்களே, கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தால் மாதவி கோபித்துக் கொள்வாள் என்பதற்காக மாலை அணிவிக்காமல் இருந்திருக்கலாம்.

**திரு. பி. எச். பாண்டியன்** : சட்டமன்றத்தில் மக்களுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்குத் தான் நாமெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். மக்களுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசுபவர்கள் யார் ? கட்சிப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காகவா இந்தச் சட்டமன்றம் ? கட்சிப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்குக் கட்சிக் கூட்டங்கள் மாலை 6 மணிக்கு மேல் தங்களுடைய சொந்தச் செலவில் மைக் போட்டு நடத்த வேண்டும். ஆனால் இங்கே விலைவாசி ஏற்றத்தைப் பற்றிப் பேசவில்லை. இரண்டு கட்சிகள் இங்கே இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் விலைவாசிப் போராட்டத்தை நடத்தித்தான் நாட்டு மக்களை ஈர்த்தார்கள். ஆனால் இங்கே சாலை மறியல். ஒரு ஆளுகின்ற கட்சிக்கு, ஜனநாயக ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடுகிறார்கள். மக்களாட்சியில் ஒக்களை மக்களாட்சித் தத்துவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு எதிராகவா தூண்டிவிடுவார்கள்? உண்ணா

[திரு. பி. எச். பாண்டியன்] [1991 சனவரி 2

விரதம், போராட்டம் இவைகள் எல்லாம் சர்வாதிகார ஆட்சியை
எதிர்த்துத்தான் நடத்திப் பழக்கப்பட்டவையாகும். ஆனால்
இன்றைக்கு சாலை மறியல்—யாருடைய சாலை, யாருடைய
பணம்? இப்போது நம்மால் சாலையில் உள்ள குண்டு குழிகளை
நிரப்ப முடிகிறதா?

11-10 மணி

பணம் இல்லை, பட்ஜெட்டில். பொதுச் சொத்து சேத
மாகிறது. பொதுமக்கள் அல்லலுக்குள்ளாகிறார்கள். ஒன்
றைப் புரிந்து கொள்ள வேண்டும். மறியலில் ஈடுபடுவது எளிது.
ஆனால் சமூக விரோதிகள் நுழைவார்கள். யாரையாவது
கொன்று விட்டால், எங்கேயாவது பஸ் தீ வைக்கப்பட்டால்
இன்றைக்கு இருக்கிற உயர்நீதிமன்றத்தின் கருத்தைச் சொல்லி
விடுகிறேன். முன் ஜாமீனும் கிடையாது. ஜாமீனும் கிடை
யாது. ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். இன்றைக்
குள்ள நிலைமை வேறு. நானே, ஒரு சாதாரண பஸ் கண்டக்டர்
தன்னுடைய பஸ்ஸின் ஒரு பாகத்தை, கண்ணாடியை, 150
ரூபாய் மதிப்புள்ளதை உடைத்தார் என்று இந்த அரசாங்கம்
தொடுத்த வழக்கை எதிர்த்து ஒரு முன் ஜாமீனைக் கேட்ட
போது நீதிபதி அம்மையார் பத்மினி ஜேசுதுரை—இது
அரசாங்கச் சொத்து, 150 ரூபாயாக இருந்தாலும் பரவாயில்லை.
சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டுமென்று தீர்ப்பு அளித்து இருக்
கிறார்கள். இதெல்லாம் அந்த அப்பாவிகளுக்குத் தெரியாது.
யாரோ தூண்டி விடுகிறார்கள். போய் மாட்டிக்கொள்ளக்
கூடாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உரு
வாக்கப்பட்டு மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டவர்கள்
சிறைச்சாலைக்குள் வாடக் கூடாதே என்பதற்காக—''தான்
ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்'' என்று சொல்வார்களே,
அதனால் சொல்கிறேன். தமிழ் இரத்தம் ஓடுகிற காரணத்தால்
தான் இந்த ஆலோசனையைத் தெரிவிக்கிறேன். ஆகவே,
இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று, சட்டமன்றத்தைக்
கலைக்க வேண்டுமென்று மக்களிடம் ஒரு மாயையை உருவாக்கு
வதற்கு இது போல சாலை மறியல் இன்றைக்கு நடத்தப்படு
கிறது. ஆனால் இந்தச் சட்டமன்றம் சாவரின். நம்முடைய
லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல யாருக்கும் கட்டுப்பட்ட
மன்றமல்ல. சட்டக் கல்லூரியில் போய்ச் சேர்ந்து படிக்கும்
போது இங்கேயுள்ளவர்களுக்குத் தெரியும்—ஜூரிஸ்புருடன்சில்
முதலில் சொல்லிக் கொடுப்பது இது தான். சாவரின். சட்ட
அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்.
சால்மண்ட் என்ற சட்ட அறிஞர் என்ன சொல்கிறார்? If a
determinant human superior is not in the habit of obedience to
a like superior, he is the sovereign of that society who
receives a bulk of command from the society. மக்களால்



1991 சனவரி 25] [திரு. பி. எச். பாண்டியன்]

தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் இந்த மன்றம், சாவரின். இது
மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட மன்றமல்ல. பாராளு
மன்றத்திற்குக் கட்டுப்பட்ட மன்றமல்ல—சாவரின். ஆனால்
356 என்பது எமர்ஜென்சி புரவிஷன் தான். இன்றைக்கு
எமர்ஜென்சி எங்கே இருக்கிறது? தேவையில்லை. இந்தச்
சட்டமன்றத்தில் படத்தில் காட்சியளிக்கிற அம்பேத்கார் என்ன
சொல்லி இருக்கிறார்? அரசியல் சட்டசபையில் அரசியல்
சட்டப் பிரிவு 356 செத்த எழுத்தாக இருக்க வேண்டுமென்று
சொல்லியிருக்கிறார்கள். It should remain as a dead letter.
சமுதாய நீதியை அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக்
கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில்,
சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அம்பேத்காருக்கு அஞ்சலி செலுத்தும் போது 356 ''டெட்
லெட்டர்'' என்று அவர் சொல்லியிருக்கிற காரணத்தால்
''டெட்டாகத்'' தான் இருக்க வேண்டும் என்பதை இங்கே நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று கூட்டாட்சித் தத்துவம். மத்திய அமைச்சர்
ஒருவர் மாநிலத்திற்கு வருகிறார். நான் அதைப் பார்க்கப்
போகிறேன், இதைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்கிறார்.
நான் பத்திரிகையில் பார்த்துக் கொண்டிருந்தேன். முதல
மைச்சர் அவர்களும் அவரோடு பேசுகிறார். நீங்களும் அவரோடு
அமர்ந்து சொல்கிறீர்கள். அவர் கேள்வி கேட்கிறார்—இந்த
மாநிலத்தின் நிலைமை என்ன? பிறகு பத்திரிகையில் சொல்
கிறார்—திருப்தியாக இருக்கிறது. எங்கே கூட்டாட்சித் தத்து
வம்? முதலமைச்சர் மத்திய இணை அமைச்சரின் சபார்டினேட்
அல்ல. அவர் இங்கே வந்து கேட்பதற்கு அதிகாரம் கிடையாது.
We are sovereign. We are the symbol of sovereignty. The House
is the symbol of sovereignty.

11-15 மணி

அவர் கேட்டு விட்டுப் போய், கலைப்பைப் பற்றி முதலில்
ஒரு செய்தி, பிறகு ஒரு செய்தி. இதை வைத்துத் தான் சொன்
னேன் புறம்போக்கு என்று. கேட்பதற்கு ஆள் இல்லை என்று
இங்கே இருப்பவர்கள் அங்கே போய்ச் சொல்கிற காரணத்தால்,
இது போன்ற பேச்சுக்கள் இன்றைக்கு வந்து கொண்டு இருக்
கின்றன. மத்திய அரசாங்கம், மாநில அரசின் சட்டம்—
ஒழுங்குப் பிரச்சினையில் தலையிட முடியாது. பாராளுமன்
றத்திலே எத்தனை முறை என்னுடைய நண்பர், பாராளு
மன்ற சபாநாயகர் பலராம் ஜாக்கர் அவர்கள் தீர்ப்பு அளித்து
இருக்கிறார் தெரியுமா? Law and order is a State subject.
நாஞ்சிலாருக்குத் தெரியும். நாம் ஏன் வாயை மூடிக் கொண்டு
உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும்? சட்டமன்றம் என்றால்
என்னையும் சேர்த்துத் தான். இந்த ஆட்சியை ஒருவிதத்தில்

கொண்டு வந்தவன் இங்கே நான் தான். என்னுடைய நடவடிக்கை ஜனவரி 28 ஆம் தேதி வேறு விதமாக இருந்திருந்தால், திருநாவுக்கரசோடு சேர்ந்திருந்தால் நீங்கள் எல்லாம் வந்திருக்க முடியுமா ? ஆகவே, உங்களை இங்கே கொண்டு வருவதற்கு நானும் காரணமானவன் என்பதை உணர்ந்த காரணத்தால் தான் சொல்கிறேன். இதைக் கொண்டு வந்தால் மட்டும் போதுமா ? பாதுகாக்க வேண்டாமா ? ஆகவே தான் முழுமையான பாதுகாப்போடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். நாம் இன்றைக்குக் கூட்டாட்சித் தத்துவத்தை முழுமையாக அமல்படுத்தாத காரணத்தால் தான் இன்றைக்கு இந்த நிலைமை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எல்லோரும் வாக்குக்கேட்கிறோம். நீங்கள் தி.மு.க. கொடியை வைத்து வாக்குக் கேட்கிறீர்கள். நாங்கள் அண்ணா தி.மு.க. கொடியை வைத்து வாக்குக் கேட்கிறோம். தேர்தலுக்குப் பிறகு, என்றைக்காவது அந்த மக்கள் இந்தக் கொடிகளை இந்தக் கட்டிடத்திலே பார்த்திருக்கிறார்களா ? எங்கே மாநில சுயாட்சி ? தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, கட்சிக்காரர்கள் இங்கே வந்து பார்க்கிறார்கள். கொடியைக் காணோமே என்கிறார்கள். மக்கள் வாக்களிப்பது ஒரு கட்சியின் கொடிக்கு. அந்தக் கட்சியின் கொடியை — எப்படி ரஷ்ய நாட்டில் மாநிலங்களினுடைய கொடிகள் பறக்கின்றனவோ, அதைப் போல, நாம் இன்றைக்கு — அந்தக் கொடியை நாட்டியிருப்போமானால், ஆட்சிக் கலைப்பைப் பற்றிய பேச்சுக்கள் வந்திருக்காது. நான் இடைப்பட்ட காலத்தில் இதைத்தான் சொன்னேன். அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஆம் ஆண்டு வெற்றி பெறுமானால், இந்தக் கோட்டையில் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை ஏற்றுவேன் என்று சொன்னேன். காரணம் இதை அடிப்படையாக வைத்துத்தான். ஆகவே நாம் மாநில சுயாட்சியை இனிமேலாவது பெற வேண்டும்.

பஞ்சாபில் கிரிக்கெட் ஸ்கோர் போல நாள்தோறும் கொல்லப்படுகிறார்கள். பேச்சு உண்டா? எங்கே எப்.ஐ.ஆர். ? 10 ஆயிரம் பேர்கள் இதுவரையில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். யாராவது தூக்கிலிடப்பட்டு இருக்கிறார்களா ? எங்கேயாவது வழக்கு நடந்ததா ? கிரிக்கெட் ஸ்கோர் மாதிரி, டி.வி.யில் கேட்டால் 15 பேர்கள் என்கிறார்கள். சாதாரணச் செய்தி, ஆக்சிடெண்ட் மாதிரி. ஆனால், இங்கே சாலை மறியல் நடத்துவதன் மூலமாகச் சட்டம் — ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கி, டெல்லியிலே காட்டப்போகிறார்கள். இதற்குத் தடுப்பு நடவடிக்கையை நீங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆகவே நான் இங்கே தெரிவித்துக் கொள்வதெல்லாம் நம்முடைய மாநில சுயாட்சித் தத்துவத்திற்குத் தூபம் இட்டாக வேண்டும். விதையை விதைத்தாக





வேண்டும். பாரதப் பிரதமர், சிம்ரஞ்ஜித்சிங் மானை அழைத்துப் பேசவில்லையா ? நாமும் அதுபோல் ஒரு கொள்கையை வைத்திருப்போமானால், அவர்கள் இங்கே வந்து பேசுவார்கள். இது யாருடைய சொந்த நாடும் கிடையாது. உங்களுக்கு இப்படித் தரமாட்டோம் என்று சொல்வதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது? அரசியல் சட்ட ரீதியாகவே சொல்கிறேன். அரசியல் சட்டப் பிரிவு 1, 2 என்ன சொல்கிறது? India, that is Bharat, shall be a Union of States. அதைத் திருத்துங்கள். தமிழ்நாடு மாநிலம் கூட்டாட்சித் தத்துவத்தின் கீழ் இயங்கட்டும் என்று அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள் என்று சொல்வோம். தவறு கிடையாது. 368 எதற்காக அரசியல் சட்டத்தில் இருக்கிறது ? இதையெல்லாம் மாற்றுவதற்காகத்தான். பிரிவினையைப் பற்றி பேசக் கூடாது, பேசினாலே தவறு என்று சட்டம் தெரியாதவர்கள் சொல்கிறார்கள். ஒன்றைச் சொல்கிறேன், இந்த ஆட்சியே, மாண்புமிகு முதலமைச்சரே, அரசியல் சட்டப் பிரிவு 1 மற்றும் 2-ஐ, 368-ன்கீழ் திருத்துவதற்குப் பாராளுமன்றத்திற்கு, மத்திய அரசுக்கு, உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று வழக்கைத் தொடர்ந்தால் என் நிலைமை என்னவாகும்? 368-ஐச் சேர்த்துத்தான் பதவிப் பிரமாணம் எடுக்கிறோம். திருத்த முடியாதது அல்ல அரசியல் சட்டம். பைபிள் அல்ல, குரான் அல்ல, பகவத் கீதை அல்ல.

11-20 மணி

திரு. லத்தீப் சொன்னார். 1935-வது ஆண்டு அரசியல் சட்டப் பிரிவு 356ஐ சுட்டிக்காட்டினார். 1935-வது ஆண்டு கவர்ன்மென்ட் ஆப் இந்தியா சட்டத்தை வைத்துக் கொள்ளுங்கள். பக்கத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சட்டத்தைப் பிரித்து வைத்துக் கொள்ளுங்கள். வரிக்கு வரி காப்பி அடிக்கப்பட்ட சட்டம். எழுத்துக்கு எழுத்து அது தான். நம்முடைய நாட்டில் அறிவு இல்லாதவர்கள் அதிகம் என்று நம்பித்தான் இதையெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இது போன்ற நிகழ்வுகள் நடைபெறும்போது நீங்கள் பேசலாம். மத்திய அரசிடம், முதலமைச்சரிடம், இணை அமைச்சரிடம். ஆனால் பிற்காலத்தில் என்னவாகும்? நாங்கள் எல்லாம் பேச மாட்டோம். வந்தால் பேசு. இல்லாவிட்டால் பார்த்துக் கொள். இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும். நியாயம். நியதி. இதுபோன்ற நிலை உயர்ந்தால், மக்களை எழுப்பினால், தேர்தலையே நடத்தாமல் உள்ளே அமர்ந்து, எப்படி அந்தக் காலத்தில் நடைபெற்றதோ, அதைப் போல் நடத்த முடியாதா ? இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், சட்டமன்றத்தில் அதிகாரத்தைத் தகர்க்க முற்படுகின்றார்கள். இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரையில் காவிரித் தண்ணீரைப் பற்றிய வழக்கைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்று காலையில்

'' இந்து '' பத்திரிகையில் பங்காரப்பா ஒரு பக்கம் விளம்பரம் கொடுத்திருக்கிறார். அதில் காவிரி வாட்டரைப் பற்றிய ஒரு பாராகிராப்.

''. . . .The States, rightful share of the bountiful Cauvery is being insisted upon. The Projects in the Cauvery Basin Areas are being provided with more funds for early completion and the planning Commission urged to include them in the plan so that hundreds of crores of Rupees can be obtained by way of loans from external agencies. . . .''

இது இன்று காலை '' இந்து '' பத்திரிகையில் பங்காரப்பா கொடுத்த விளம்பரம். இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். வழக்கு நிலுவையில் இருக்கிறது. தண்ணீரையும் கொடுக்காமல் வழக்கை வாபஸ் பெறுங்கள். தண்ணீரைத் தருகிறோம் என்று சொல்லும்போது, எங்கே தேசிய ஒருமைப்பாடு? எதற்கு தேசிய ஒருமைப்பாடு? தஞ்சையில் பயிர்கள் வாடும்போது மக்கள் யாரின் கீழ் இருந்தால் என்ன என்ற எண்ணம் வராதா? எதற்கு தேசிய ஒருமைப்பாடு, இதற்கா? தண்ணீரைக் கொடுக் கவும் மாட்டோம். அணையைக் கட்டுவோம். அதற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழிப்போம் என்று சொல்வது என்ன நியாயம்? இதை இன்றைக்கு இருக்கக்கூடியவர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தண்ணீர் கிடையாது இன்று. நடுவர் மன்றம் சொன்னவுடன், டில்லியில் கர்நாடக பவனில் இனிப்பு வழங்கப் படுகிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியிருந் தார்கள். இனிப்பு வழங்கப்பட்டது என்று. இதுதான் சகோதரத் துவமா? இன்றைக்கு நான் சொல்கிறேன். உங்களிடத்தில் நான் இருந்தால், இன்றைக்குக் கர்நாடகத்திற்கு சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து ரயில் போகாது. இங்கேயிருந்து பெங்களூருக்குப் பஸ் போகாது. அப்படிப்பட்ட சகோதரன் வேண்டாம். கூடப் பிறந்தவனே அவசரத்திற்கு உதவி செய்ய வில்லை என்றால், என்ன செய்யத் தோன்றும்? பேச்சு வார்த்தை உண்டா? அது போன்றுதான் ஒரு மாநிலம், இன்னொரு மாநிலத்தோடு சுமுகமான உறவோடு இருக்க வேண்டு மென்றால், இரண்டு பேருக்கும் பரஸ்பர உறவு இருக்க வேண்டும். இங்கே பேசப்பட்ட அந்த விளம்பரத்தின் மீது நீங்கள் என்ன தீர்ப்பைக் காணப்போகிறீர்கள் என்பதைக் கேட்டுக் கொள் கிறேன்.

இந்த ஆட்சியைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்படக்கூடிய இணை அமைச்சர் ஏன் அங்கே போகவில்லை? பாசனத்துறை அமைச்சர் அங்கே சென்றிருக்க வேண்டாமா தண்ணீரை விட வேண்டுமென்று சொல்லி? தமிழகத்தைப் பற்றிப் பேசும்போது



எப்படி நான் பேசுகிறேனோ அதை விட வேகமாகப் பேச வேண்டும். ஒரு வழக்கு 5 நிமிடம் தான். உச்சநீதி மன்றத்திலே ஒரு வழக்குக்கு 5 நிமிடம் தான் டைம்.

11.30 மணி.

மண்டல் கமிஷனை அமல்படுத்துங்கள் என்று 89-ல் தொடர்ந்த ஒரு வழக்கு இன்னொரு வழக்கோடு இணைக்கப் பட்டு விசாரணைக்கு வந்தது. நான் ஒருவன்தான் அன் றைக்கு மண்டல் கமிஷனை ஆதரித்து நீதிமன்றத்தில் பேசி னேன். மற்றவர்கள் எல்லாம் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். வெளியிலே வேகம், 5 ஆயிரம் பேர் கூச்சலிட்டுக் கொண்டிருக் கிறார்கள், நீதிபதிகளுக்கு எதிராக. அங்கே ஒருவர், பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு வேண்டும் என்று கேட் கிறார். விபச்சாரிகளுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமாம் என்று ஒருவர் கூச்சலிட்டார். '' ஹிந்துஸ்தான் டைம்ஸ்''லே எல்லாம் வந்தது டெல்லியிலே. நாம் ஏளனப்படுத்தப்படுகிறோம் என்பதற்காக அதைச் சொன்னேன். அந்தப் பேச்சை இங்கே பேச முடியுமா? அந்தக் கேள்வியை இங்கே கேட்க முடியுமா? அவையில் கூடப் பேச முடியாது. அன்-பார்லிமென்டரி என்று சொல்லிவிடுவோம். அங்கே அப்படிப் பேச்சுக்கள் வந்தன. பிற்படுத்தப்பட்ட மக்கள் பெரும்பாலான வகையில் வாழ்கிற மாநிலம் தான் இந்திய மாநிலம். உச்சநீதிமன்றத்திலே 1983-ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டிலே வால்யூம் நெம்பர் 3, பக்கம் 388-இல் நீதிபதிகள் ஓ. சின்னப்ப ரெட்டி, வரதராஜன்—
''. . . .Public employment is the property of the nation which has to be shared equally subject to the qualification necessary for holding the office or post and it should not be monopolised by any particuler section of the people of this country in the name of efficiency.'' திறமை, திறமை என்று '' இந்து '' பத்திரிகை எழுதுகிறதே, திறமை, திறமை என்று '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' எழுதுகிறதே—சொல்கிறேன் உச்சநீதிமன்றமே திறமை என்று ஒரே ஒரு கம்யூனிட்டி மொனாப்பலி பண்ணக் கூடாது என்று 1983-லே சொல்லியிருக்கிறது. புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். ஆகவே தான் விவரம் தெரியாதவர்கள் நாம். நம்முடைய மூதாதையர்கள் அப்படி இருந்த காரணத்தினால் தான் இன்றைக்கும் போராடிக் கொண்டிருக்கிறோம் நம்முடைய உரிமையை நிலை நாட்டுவதற்கு. இங்கே அரசியல் சட்டப் பிரிவு 16-ல் தான் மண்டல் கமிஷனின் சார்பில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய எழுத்து There shall be equality of opportunity in the matter of public employment. இங்கே இருக்கிறது மாநிலத்தில். எங்கே மத்தியில்? எங்கே ஐ.ஏ.எஸ்.? எங்கே ஐ.பி.எஸ்ஸில்? கிடையாது. காங்கிரஸ் கட்சி நண்பர்கள்

இங்கே நுழையலாம். சாவரின் ஸ்டேட்டில் நுழையலாம் என்று
தைரியமாக வரும்போது கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி
நிர்வாகத்தில் நுழைந்து தமிழகத்திற்குத் தண்ணீரைக்கொடு என்று
ஏன் உத்தரவிடக் கூடாது ? ஆகவே தான் சொன்னேன். இங்கே
தான் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலை உருவாகிக் கொண்டு
இருக்கிறது. இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்லுகிறேன்,
உங்களைத்தவிர வேறு யாராவது இங்கே முதலமைச்சராக
இருந்திருப்பார்களேயானால் நான் பேசுகிற பாணியே வேறாக
இருக்கும். என்னுடைய நண்பர்களிடத்திலே சொன்னேன்.
தவறாக நினைக்காதீர்கள். இன்றைக்கு ஒரு கிழவனார் இருந்து
கொண்டிருக்கிறார் தமிழகத்தில், எங்கள் எல்லோருக்கும் வயதில்
மூத்தவராக இருக்கிறார். அவர் இருக்கட்டும். பேசட்டும் என்று
சொன்னேன்.

11-25 மணி.

உங்கள் மீது ஒரு விதமான எண்ணம் இருக்கிற காரணத்தாலே,
பாசம் இருக்கிற காரணத்தினாலே, இந்த இரண்டு ஆண்டுகளில்
துரோகிகளைப் பார்த்த பிறகு, நாட்டைப் பிரிக்கப் புறப்பட்டவர்
களைப் பார்த்த பிறகு, மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற
ஆசை உங்களுக்கு இருக்கிற காரணத்தினால், மக்களுக்குச் செய்ய
வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு உண்டு என்று எனக்குத் தெரி
யும், உங்களிடம் பேசியிருக்கிறேன். ஆனால் அந்த ஆசை இருக்கிற
காரணத்தினால்தான் மக்களுக்குப் பிடிக்கவில்லை. இவன் என்ன
செய்வது என்று மக்களுடைய சின்னத்தனமான எண்ணம். மாடு
மேய்த்துக் கொண்டிருப்பவன் அப்படியே இருக்க வேண்டும்.
ஆகவே முதலமைச்சர் அவர்கள் இந்தக் காவிரி வழக்கை
(மணியடிக்கப் பெற்றது) முதலிலே பேசியது எல்லாம் நாட்டுக்கு,
இப்போது பேசுவது நமக்கு. இந்தக் காவிரிப் பிரச்சினையில்
கடுமையாக உச்சநீதிமன்றத்தில் வாதாடி அதில் ஒரு இன்வால்வ்
மென்ட்டோடு பண்ணக்கூடிய அளவுக்கு ஒரு வழக்கறிஞரை
நியமிக்க வேண்டும். இன்வால்வ்மென்ட் வேண்டும். நான் ஒரு
கேசை எடுத்துக் கொண்டால் ஜெயிக்காமல் தூங்க மாட்டேன்.
அதை எப்படியாவது ஜெயிக்க வேண்டும். தனிப்பட்ட ஒரு
வழக்கிற்கே, பத்தாயிரம் ரூபாய் பீசுக்கே இவ்வளவு என்றால்,
அதற்கு எப்படி இருக்க வேண்டும் ? அப்படிப்பட்ட ஒரு இன்வால்வ்
மென்டோடு வரவேண்டும். ஆனால் அது வரவில்லை என்ற குறை
என் மனத்திலே இருக்கிறது.

ஜெத்மலானி அங்கே இந்திரா காந்தி அம்மையார் கொலை
வழக்கில் எப்படி வாதாடினார் ? இங்கே எப்படி ஜீரோ அவரில்
நாம் வேகத்தோடு பேசுகிறோமோ, அந்த வேகத்தில் அங்கே
பேசினால்தான் வழக்கு வெற்றி பெறும். உட்கார்ந்து பேசக்
கூடிய இடம் அல்ல, சுப்ரீம் கோர்ட். மண்டல் கமிஷன்
வழக்கில் நான் வாதாடும்போது அப்படித்தான் இங்கே



சொல்லும் போது மாநிலத்தில் இருக்கிறது என்று சொன்னார்
கள். எங்கே, மத்தியில் ? கிடையாது. ஆகவே மண்டல்
கமிஷனுக்காக இன்றைக்கு ஆட்சி அங்கே மாற்றப்பட்டிருக்
கிறது. மண்டல் கமிஷன் அமல் படுத்தியவுடன் ஜாதிச்
சண்டை வந்துவிட்டது என்று பத்திரிகைகள் எழுதின. நமக்கு
உரிமை கேட்டால், ஜாதி விட்டுக் கொடுத்தால் நல்லவர்.
இதே போலத்தான் நம்முடைய சமுதாயம் இன்றைக்கு இழுக்கப்
பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே உங்களுக்குத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

விலைவாசி, ஏறக்கூடிய விலைவாசியை சில பேர் இங்கே
பேசினார்கள். வெங்காயம் 12 ரூபாய். கேரட் 10 ரூபாய் கிலோ
கத்திரிக்காய் 10 ரூபாய், தக்காளி 12 ரூபாய், அவரைக்காய்
8 ரூபாய், பாவக்காய் 10 ரூபாய், மட்டன் (கறி) 50 ரூபாய்,
மீன் 60-லிருந்து 70, காபி, சாதாரண காபி $1\frac{1}{2}$ ரூபாய்,
இட்டிலி 75 காசு அல்லது ஒரு ரூபாய், வடை 1ரூபாயும் 50
காசும். இதைப்பற்றி இங்கே பேசுவதற்குக் கட்சிகள்
கிடையாது. இவர்கள் எல்லாம் வடையை இங்கே வாங்க
வில்லை, டெல்லியிலே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு),
இங்கே இருக்கக்கூடிய மக்களைப் பற்றிப் புரியாதவர்கள்
மக்களோடு நெருங்கித் தொடர்பு கொள்ளாத காரணத்
தினாலேதான் இதைப்பற்றிப் பேசவில்லை. மக்களுடைய
பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருப்பார்களேயானால்
வெளியே செல்வார்களா ? இங்கே சட்டமன்றத்திற்குள் செயல்
படுவதற்குத்தான் அவர்களை மக்கள் அனுப்பியிருக்கிறார்கள்.
எதிர்க்கட்சி என்றால் என்ன ? ' ஷேடோ கேபினெட்.'
அதாவது சந்திரசேகர் ஒரு வேளை உங்களை மட்டும்
மாற்றிவிட்டு பிறகு யாரையாவது அழைத்தால் அதுதான்
ஷேடோ கேபினெட். சட்டமன்றத்தைத்தான் கலைக்க
முடியாது என்று சொல்லிவிட்டேனே, இங்கே ஷேடோ எங்கே ?
வெளியிலே இன்பமாக அவர்கள் திரிந்து கொண்டு இருக்கிறார்
கள் என்பதைத்தான் இங்கே சொல்வதற்காகச் சொன்னேன்.

ஒவ்வொரு எம். எல். ஏ.யும் தன்னுடைய தொகுதி
மக்களுக்குக் கடமை செய்வதற்கு, சட்டமன்றத்தில் பேசு
வதற்குப் பணிக்கப்பட்டுத்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
கட்சியா தேர்ந்தெடுத்தது ? கட்சிக்காரரர் மட்டும் வாக்குப்
போட்டால் நாம் எல்லாம் வர முடியுமா ? பொது மக்கள்
வாக்குகளைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறோம்.
ஆகவே மக்களுடைய உடைமை, மக்களுடைய சொத்து,
மக்களுடைய உயிர் இத்தனையையும் பாதுகாக்கக் கூடிய
மாபெரும் பொறுப்பு நம்முடைய அரசாங்கத்திற்கு உண்டு
என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, பல்வேறு திட்டங்களை அறிவித்தீர்கள்.
திட்டங்களைப் பெறும்போது கூட, இந்த ஆட்சி எவ்வளவு
நாள் இருக்கும் என்று [illegible]றான்? இதுதான் தமிழன்.

யாருக்கு அதிக நன்மை செய்கிறோமோ, அவன் தான் பெரிய எதிரி இந்த நாட்டிலே. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். நம்மிடம் ஒரு நேரம் சாப்பிட்டால் 2 நாட்கள் இருப்பான், ஒரு மாதம் சாப்பிட்டால் 2 மாதங்கள் இருப்பான், தினமும் சோறு போட்டால் வாழ்க்கை பூராவும் இருப்பான், இந்த நாட்டில் அதிக நன்மை செய்யச் செய்ய ஓட்டு குறையும். நான் வந்த அன்றைக்கே சொன்னேன். சும்மா இருங்கள் என்று, இருந்திருந்தால் இந்த வம்பே வந்திருக்காதே? ஏனென்றால் மந்திரியாகியாச்சு, உட்கார வேண்டும். காரில் போவதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். காரில் போகும் போது ரோட்டிலே நின்று 'டாடா' காட்டத் தான் அவன் விரும்புகிறான். மக்கள் இதற்கு அடிக்கல் நாட்ட எல்லாம் விரும்பவில்லை. நீங்கள் இரண்டு வருடங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? போய்க்கொண்டே இருக்க வேண்டும், அவன் ரோட்டிலே இருப்பான்: அவன் 'டாடா' காட்டுவதற்குத்தான் இருப்பான். நீங்கள் இரண்டு வருஷம் ஓட்டப் போகிறீர்கள். நீங்கள் இதைச் செய்தீர்களா, அதைச் செய்தீர்களா என்று கம்பேர் பண்ணுகிறார்கள், இதுவே பரவாயில்லை. இது இப்படி,

இன்னொன்று, சீப்-மினிஸ்டர் குட்டையாக இருக்கிறார்; மண்டையில் ஒன்றும் காணோம்—அதாவது முடி இல்லை; அவன் சினிமா பாணியில் முதலமைச்சரை எதிர்பார்க்கிறான். எதற்காக சினிமா நடிகர்களுக்கு இன்றைக்கு வேகம்? எதற்காக இன்றைக்கு அவர்களுக்கு வரவேற்பு? சினிமாவிலே வேகமாக எதையாவது செய்யும்போது மக்கள் மனதிலே போய்விடுகிறான். ஒரு நடிகன் சூப்பர் தமிழன் என்று போட்டிருக்கிறான். தினத்தந்தியில் பார்த்தேன். சூப்பர் தமிழன், நீங்கள் சூப்பர் இல்லை, நானும் இல்லை; (குறுக்கிடு) நான் அவரைச் சொல்லவில்லை (சிரிப்பு) நம்முடைய கூட்டு இல்லையா? (சிரிப்பு) பொது எதிரியை வீழ்த்த வேண்டுமென்றால் இது வேண்டும் இல்லையா?

**11-35 மணி**

நீங்கள் ஆட்டோ சங்கரை ஏரோப்பிளேனில் கூப்பிட்டுக் கொண்டு வந்தீர்கள். மக்கள் அதை வரவேற்கமாட்டார்கள். ஒரிசாவிலிருந்து லாரியில் நிற்க வைத்துத் தொங்க வைத்துக் கொண்டு வந்து மவுண்ட் ரோட்டில் நிற்க வைத்து அடித்துக்கொண்டே போனால் — சினிமாவில் அதைத் தான் செய்கிறான் — உங்களுக்கு வோட்டுப் போட்டு இருப்பார்கள். நீங்கள் சும்மா, சாதாரணமாக பெரியார் போல் பேசிக் கொண்டு இருந்தால் யார் வோட்டுப் போடுவார்கள்? கொஞ்சம் வேகம் வேண்டும். ஆகவே, இப்படித் திடீர் ஹீரோவாக வருபவன் எல்லாம் கொஞ்சம் வேகத்தைக் காட்டினால்தான் பெயர் வருகிறது. திரு. திருநாவுக்கரசு சட்ட சபையில் பேசினால் பெயர் அதிகம் வராது.



அங்கே பேசினால் நிறையப் பெயர் வரும். ஆகவே, இன்றைக்கு நம்முடைய நாடு அப்படி இருக்கிறது. இந்த நாட்டில் மக்கள் எதிர்பார்க்கிற தலைவர் இப்படித்தான் இருக்கிறார். அவர்களுக்கு வேறு ஒன்றும் தியாகத்தைப் பற்றித் தெரியாது. பாதிப்பேர் என்ன தொழில் செய்கிறார்கள்? விவசாயக் கூலிகள், அன்றாடம் காய்ச்சிகள், குடிசையில் இருக்கக்கூடியவர்கள். அவர்களுக்குத் தெரிந்தவர்களுக்குத்தான் வாக்கு அளிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவன் நாள்தோறும் இவனைத்தான் பார்க்கிறான். ஏன் என்றால் ஆங்காங்கே கொட்டகைகள் திறந்து வைத்து ஆகிவிட்டது. அவனை 3 மணி, 6 மணி நேரம் பார்க்கிறான், நீங்கள் 2 நிமிடம் தான் பார்க்கிறீர்கள். இப்போது நானே உங்களிடம் ஒரு நிமிடம் தானே பேசுகிறேன்; (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் "High pitch"-ல் பேசினீர்கள், முடித்து விட்டால் நன்றாக இருக்கும், இன்னும் திரு. ரமணி அவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து கடன் நிவாரணம் ரூபாய் 10 ஆயிரம் நெசவாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்றும் அவர்களுக்குப் பலன் கிடைக்கவில்லை அனுமதிக்கவில்லை என்றும் என்னுடைய தொகுதியிலுள்ள சௌராஷ்டிரா பெருமக்கள்—இதைத் திரு. எஸ். ஆர். இராதா பேசியிருக்க வேண்டும். நான் பேசுகிறேன், இன்றைக்கு சௌராஷ்டிரா நான்தான். புதுக்குடி, சேரன்மாதேவித் தொகுதியில் வீரவநல்லூரில் எங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கவில்லை கடனைத் திருப்பிக் கேட்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள், அதை ரத்துச் செய்வதற்கான உத்தரவை நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றொன்று, 10 ஆயிரம் ரூபாய் பொதுவான விவசாயக் கடன் பெற்றவர்களுக்கு ஏதாவது ஒரு குறையைச் சொல்லி, கிடையாது என்ற நிலைமை வந்திருக்கிறது. அதையும் ஆராய்ந்து நீங்கள் எல்லோருக்கும் பொருந்தும் வகையில், சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்ற நிலையில் அதை நிலை நாட்டுங்கள். "Equality before Law" சட்டத்திற்கு முன்னால் எல்லோரும் சமம் என்பது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நேரடியாக நேற்று இரவு சட்ட அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு இதைச் செய்தார்கள், இந்த ஆண்டும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு 12 ஆண்டுக் காலம் வரை சிறையில் இருந்த ஆயுள் கைதிகளை விடுவித்தோம். இப்போதும் கொஞ்சம் குறைத்து 10 ஆண்டுக் காலம் வரை இருந்தவர்களை இன்றைக்கே விடுதலை செய்யுங்கள் என்ற

[திரு. பி. எச். பாண்டியன்] [1991 சனவரி 25

வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லாம் அப்பாவிகள், சிலபேர் பொதுச் சொத்தை உடைத்துவிட்டு, பொதுச் சொத்தைச் சாப்பிட்டுவிட்டு வெளியே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே இதையெல்லாம் எண்ணிப்பார்த்து, 10 ஆண்டுகள் என்று செய்வ தால் இதனால் ஒன்றும் வந்து விடாது.

நான் இப்போது உங்களுக்குச் சாதகமாகச் சொல்வதை அவைக் குறிப்பில் ஏற்றவேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது அவர் சொல்வதை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.

திரு. பி. எச். பாண்டியன் : ****ஆகவே, 10 ஆண்டுக் காலம் என்று நிர்ணயித்து சமுதாயத்தினால் சிறைக்குச் சென்றவர்களை, சமுதாயப் போராட்டத்தினால் சிறைக்குச் சென்றவர்களை...சமுதாயத்தின்...(குறுக்கீடு) இது பத்திரிகைக் குறிப்புகளில் வரவேண்டாம்.****

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதே நேரத்தில் நீங்கள் '' Canvass '' பண்ணுவது போல் ஆகி விடும்.

திரு. பி. எச். பாண்டியன் : இல்லை, அது பத்திரிகை யில் வரவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதனால் தான் நான் '' Off the record '' என்று சொல்லிவிட்டேன்

திரு. பி. எச். பாண்டியன் : ஆகவே, இங்கே என்னைப் பொறுத்தவரையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்து சொல்கிறேன். 1994-லே தான் தேர்தல் வரவேண்டும். அதற்கு முன்னால் வேண்டுமா? திரு. துரைமுருகன் அவர்களே, பார்க்கிறீர்களே! இந்த ஆட்சியை, இந்தச் சட்டமன்றத்தை, தமிழர்கள் காப்பாற்ற வேண்டிய கடமை உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்

11-40 மணி

ஆட்சி இல்லையென்றால், பலபேருக்குத் தெரியாது, என்னவாகும் என்று, நேற்று, என்னுடைய நண்பர் சொல்லும் போது சொன்னேன். என் மனதிலே தோன்றியது, என்ன

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 சனவரி 25] [திரு. பி. எச். பாண்டியன்]

ஆகப் போகிறோம் ஒவ்வொருவரும் என்று தெரியாது என்று, அந்த அளவிற்கு இருக்கும்போது, அவர்களுக்கே அந்த நிலைமை வந்தபோது, தமிழ்நாட்டு மக்கள் சீரழியக்கூடாது, தமிழ்நாட்டு மக்களுக்கு வாழ்வு வேண்டும், தமிழர்களைப் பற்றித் தெரிந்தவர்கள், தமிழ்நாட்டு எல்லையைப் பற்றிப் புரிந்தவர்கள், தமிழ்நாட்டு மக்களோடு வாழ்ந்தவர்கள்தான் தமிழ்நாட்டில், இந்த மன்றத்தில் அமரவேண்டும்.

இன்னொன்று, இறுதியாகச் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், முதலமைச்சர் பதவி என்ற முறையிலும் இரண்டு நாற்காலிகளும் சாதாரண நாற்காலிகள் அல்ல. நீங்கள் நினைக்கலாம் சாதாரண நாற்காலிகள் என்று, சில பேரைத் தூக்கித் தூக்கிப் போடும். அதே மாதிரிதான் சபாநாயகர் நாற்காலியும், இந்த நாற்காலிகளுக்கு ஒரு சக்தி உணடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனுபவத்தில் சொல்கிறார்.

திரு. பி. எச். பாண்டியன் : இதிலே சிலபேர் இரண்டு நாள் உட்கார்ந்தவர்கள் மூன்றாம் நாள் உட்கார முடிகிறதா ? மக்களுக்காக இல்லையென்றால் தூக்கி வெளியிலே விட்டு விடும். அந்த நாற்காலிகூட அப்படித்தான். மக்களுக்காக இருந்தால்தான் அந்த நாற்காலியிலே உட்கார முடியும், இரண்டு வருடம் இருந்ததால்தான் நான் அந்தக் கணக்கைச் சொல்கிறேன். மக்களை ஏமாற்றி விட்டு ஒருநாள்கூட உட்கார முடியாது.

என்னிடம் இரண்டு நண்பர்கள் சொன்னார்கள். கூட்டணி வந்துவிட்டது ; தேர்தல் வரப்போகிறது, ஒன் பிளஸ் ஒன் ; இதுதான் ஜெயிக்கப்போகிறது, நீங்கள் இன்னும் ஒன்றும் செய் யாமல் இருக்கிறீர்களே என்று கேட்டார்கள். அதற்கு நான் சொன்னது, தமிழ் நாட்டிலே உள்ள மக்கள் தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள். ஆறுபடை வீட்டிற்கு சக்தி முழுமையாக இருக்குமானால், நாகூர் தர்காவிற்கு முழுமையான சக்தி இருக்குமேயானால், அன்னை வேளாங்கன்னிக்கு சக்தி இருக்கு மேயானால், ரோம் கதிட்ரலுக்கு சக்தி இருக்குமேயானால் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி, தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களெல்லாம் இங்கே வந்து முதலமைச்சராக அமர முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதையும் மீறி மக்கள் ஒருவேளை ஏமாந்தால்கூட உள்ளே வர முடியாது. நான் ஒரு சட்ட ஆயுதத்தை வைத்துக் கொண்டு இருக்கிறேன். எங்கேயும் எளிதில் அமர முடியாது. இதெல்லாம் தூக்கி அடிக்கிற நாற்காலி, அங்கேயும் அப்படித்தான். மக்களைப் பற்றிச் சிந்திக்காதவர்கள் வர முடியாது. ஆகவே, தெய்வ நம்பிக்கையுடைய இந்த நாட்டில், மதுரையை எரித்த கண்ணகி

பிறந்த இந்த நாட்டில், திருநாவுக்கரசு சொன்னதுபோல மாதவியெல்லாம் இங்கே, இந்த எல்லைக்கே வர முடியாது. பல வழிகள் வைத்துக் கொண்டிருக்கிறோம். கடைசியிலே தான் சட்ட ஆயுதம் வரும். நான் ஏன் இன்றைக்குத் தனியாக அமர்ந்து கொண்டிருக்கிறேன்......

திரு. வே. தங்கபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலக்கியத்திலே மாதவி தவறாகக் குறிப்பிடப்படவில்லை. நாம் சொல்கிற மாதவி இலக்கிய ரீதியாகவும், வரலாற்றுக் குறிப்பிலும் பாராட்டுக்கும், வணக்கத்திற்கும் உரியவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாதவி என்ற வார்த்தையை எடுத்து விடுங்கள். தவறானவர். தவறானவர்கள், முதலமைச்சர் அவர்களே, சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இறுதியாக ஒன்றைச் சொல்கின்றேன். நாம், நம்முடைய வீட்டிலுள்ள பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது, ஒரு பையனுக்கு பெண் பார்க்கும்போது குடும்பம் என்ன ; தகப்பனார் யார் ; பாட்டனார் யார் என்றெல்லாம் பார்க்கிறோம். அது ஏன், அல்சேஷன் நாய் வாங்கும்போது கூட பியூர் அல்சேஷனா என்று கேட்கிறோம். டாபர்மேன் நாய் வாங்கும்போது பியூரா என்று பார்க்கிறோம். நாய்க்கே நாம் பியூரிட்டி பார்க்கிறோம். ஒரு தனிப்பட்ட குடும்பம் வாழ்வதற்குத் தகப்பனார் எப்படி, பாட்டனார் எப்படி என்று பார்க்கிறோம். நாட்டிலேயுள்ள அத்தனை குடும்பங்களும் வாழ்வதற்கு எப்படிப் பார்க்கவேண்டும் ? இதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். மக்கள் தவறு செய்துவிட்டால், அதையும் மீறி இந்த எல்லையில் நாங்களெல்லாம் நின்றுகொண்டு இருப்போம். எங்களை யாரும் தடுக்க முடியாது. எத்தனை தேர்தல்கள் வைத்தாலும் நான் சேரன்மாதேவியில் வெற்றி பெற்றுக் கொண்டுதான் இருப்பேன். நான் ஒத்தையிலே இருந்தாலே போதும். ஆகவே, நாட்டு மக்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். இன்றைக்கு பலபேர் வெற்றி பெற வேண்டுமென்று, வெற்றி பெற்று விடுவார்கள் என்று சிலபேர் கணக்குப் போடுவார்கள். ஆனால் உடனே அங்கே போய் மாலை போட்டுக்கொண்டு இருப்பார்கள். நாடே அப்படித்தான் இருக்கிறது. உங்களையே, நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இன்றைக்கு எதிர் அணியிலே இருக்கக்கூடிய சிலபேர், இன்றைக்கு சாலை மறியலிலே ஈடுபடக்கூடியவர்கள் உங்களைப் புகழ்ந்தவர்கள், வந்தவுடன் அண்ணன் என்று சொல்வார்கள். கொஞ்சம் டவுன்-ஆனவுடன் அவன்தான் முதலிலே கல்லைப் போடுவான். அவன்தான் தமிழன். இந்த நிலைமையைத் தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உங்களிடம் யார், யார் ரொம்ப சாப்பிட்டார்களோ அவர்கள்தான் உங்களுக்கு





அதுதான் சொல்கிறேன், சாப்பிடாதவன்தான் இன்றைக்கு ஆதரவாக இருக்கிறான். சாப்பிட்டவன் எங்கே இருக்கிறான் ? உங்களுக்குச் சட்ட ஆலோசனை சொன்னவன்தான் இன்றைக்கு அங்கே ஆலோசனை சொல்கிறான். உங்களுக்கு சட்ட ஆலோசனை சொன்னவன்தான் எங்களுக்குச் சட்ட ஆலோசனை சொல்லி, எங்களையெல்லாம் பிரித்து விட்டான். இன்றைக்கும் அங்கேயிருந்து ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கிறான். ஆகவே, தமிழ்நாட்டில் உற்பத்தி பண்ணியது பூராவும் நீங்கள்தான். இந்த நாட்டில் நன்றி கெட்டவர்களை, இந்த மாதிரி துரோகிகளை உருவாக்கியவர்கள் நீங்கள். ஆகவே, அவர்களை இனிமேலும் இந்த அவைக்குள்ளே வர விடுவதற்கு, துரோகிகள், உள்ளே வருவதற்கு நாம் எல்லாம் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொன்னேன். இந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கிற காரணத்தாலேதான் நான் இதைச் சொன்னேன். ஆகவே, ஆளுநர் உரையை வரவேற்று 1994-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி நாம் இருப்போம் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி,, வணக்கம்.

**11-45 மணி**

திரு: கே. ரமணி : மதிப்பு மிக்க துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மிது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தோழர் வரதராசன் அவர்கள், தோழர் வீரையன் அவர்கள் ஏற்கனவே உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன விஷயங்களைத் தொட்டுப் பேசினார்களோ, அந்த விஷயங்களை விட்டு விட்டு, அவர்கள் தொடாத சில விஷயங்களை எடுத்துச் சொல்லி, இந்த உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சில கருத்துக்களையும் எடுத்துக் காட்டி, இந்த அரசைக் கலைக்கும்படியான ஒரு பெரிய விவகாரத்தை. ஒரு சதியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்களே அதைப் பற்றியும், இன்னும் சில இரகசியங்கள் உலவிக் கொண்டிருக்கின்றன, ஆனால் அதை யாரும் முன்னுக்குக் கொண்டு வந்து நிறுத்தத் தயாராக இல்லை: அந்த விஷயத்தையும்—நான் ஓரளவுக்குச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

முதலிலே எடுக்கும்பொழுது நம்மைப் பற்றி அல்ல : இந்திய நாட்டுக்கும் நெருக்கடி, உலகத்திற்கும் பெரிய கவலையைக் கொடுக்கும்படியான ஒரு வளைகுடாப் போர் இன்று நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்த வளைகுடாப் போரைப் பற்றி நேற்று நமது சகோதரர் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கை எப்படியிருக்கிறது? என்று சுட்டிக் காட்டினார்கள்.

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

22 நாடுகளைக் கொண்ட அந்த அரபு நாடுகளை, எண்ணெய் வளத்தினுடைய மையமான அந்த நாடுகளைப் பிளவுபடுத்தி ஆதிக்கத்தைத் தன் கையில் எடுக்க வேண்டு மென்று, உலகத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்த வளைகுடாப் போரைத் துவக்கியிருக்கிறது. இன்று அது உலகப் போர் ஆகாமல் இருக்க என்னென்னமோ பேச்சுக்களையெல்லாம் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அதுவொரு பயங்கரமான நிலைமை. ஆயிரக் கணக்கான விமானங்கள் குண்டு போடுவதும், மக்களைப் படுகொலை செய்வதுமான நிலைமைகள் நடந்து கொண்டிருக் கின்றன. இப்படிப்பட்ட அநீதி நிறுத்தப்பட வேண்டும். அந்த வளைகுடாப் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அமெரிக்கா அந்தப் போரை நிறுத்த வேண்டும். வளைகுடாவில் அரபு நாடுகளில் இருக்கும்படியான பிரச்சனைகளுக்கு ஒரு பெரிய இராணுவத்தைத் திரட்டிக் கொண்டு வந்து போரிடக் கூடிய அவசியம் அமெரிக்காவுக்கு இல்லை. எனவே, அவர்கள் தங்கள் படைகளை வாபஸ் வாங்க வேண்டும்: அந்தப் போரையும் நிறுத்த வேண்டுமென்பது எங்கள் கருத்து.

அதேமாதிரி, குவைத் நாட்டுக்குச் சென்று அது ஒரு ஆக்கிரமிப்பு என்ற காரியத்தை வைத்துத் தான் இன்றைக்கு இந்தச் சண்டை நடக்கிறது. அதிலிருந்து ஈராக் நாடும் வெளியேற வேண்டும். அந்த முறையில் இந்த யுத்தத்திற்கு முடிவை ஏற்படுத்த வேண்டும்.

இது இந்திய நாட்டையும் நிச்சயமாகப் பாதிக்கிறது. இந்தியாவின் பொருளாதாரம் ஏற்கனவே நெருக்கடியில் உள்ளது. இது இந்த நெருக்கடியைத் தீவிரமாக்கும். எண்ணெய் வளம் இந்த அளவிற்கு நாசப்படுத்தப்பட்டால் எத்தனை ஆண்டு அந்த நிலை நீடிக்கும் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இன்றைக்கே நமக்கு எண்ணெய் வகையறாக்கள், பெட்ரோல், டீசல் போன்றவைகளை வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, இந்த நாடு முழுவதும், இந்திய நாடு முழுவதும், உலகம் முழுவதும் இன்றைக்கு அந்த யுத்தத்திற்கு எதிர்ப்பு இருக்கிறது. அமெரிக்க நாட்டிலே அதன் ஜனாதிபதியாக இருக்கும் புஷ்—அவருடைய உருவத்தைக் கட்டி அவருடைய அரசுக் காரியாலயத்திற்கு முன் மக்கள் நின்று இன்றைக்கு ஆர்ப்பாட்டத்தைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட உலக மக்கள் சமாதானத்தை விரும்புகிறார் கள். ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம், ஒரு உலக யுத்தத்தையே நடத்தி, பாழ்படுத்த நினைப்பதை இந்திய மக்களும் எதிர்க்க வேண்டும்: தமிழக மக்களும் எதிர்க்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இந்த விஷயத்தில் அணி சேரா நாடுகள் அனைத்தும் ஒன்று திரண்டு,—அணி சேரா நாடுகள் என்று ஒரு பெரிய சக்தி இன்று உலகத்தில்



1991 சனவரி 25] [திரு. கே. ரமணி]

இருக்கிறது; அது மூன்றாவது சக்தி—அதையும் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த விஷயத்தில் இன்றைக்கு இருக்கிற மத்திய அரசினுடைய நடவடிக்கைகள் பலவீனமாக இருக்கின்றன என்பது மட்டுமல்ல; அதற்கு முன் முயற்சியும் இல்லை. ஆரம்பத்திலேயே அந்த முன் முயற்சி எடுக்கப்படாமலே விடுபட்டுள்ளது. அந்த நிலைமையை இடது சாரிக் கட்சிகளும், தேசிய முன்னணிக் கட்சியும், மற்ற ஜனநாயக சக்திகளும் எடுத்துக் காட்டியுள்ளன. அப்படிப் பட்ட ஒரு தவறான நிலையில், முன் முயற்சி எடுக்க முடியாத நிலையில், இந்திய அரசாங்கம் சென்றுள்ளது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஜனங்களினுடைய எதிர்ப்பு இப்போது பெருமளவு வந்து கொண்டிருக்கிறது. இந்த அம்சம், இந்த உரையிலே—ஆளுநர் உரையிலே, வெளியிட்டு இருக்கும்படியான ஒரு அம்சம்.

மணி 11.50

அதேமாதிரி வகுப்புக் கலவரங்கள் நமது நாடு முழுவதை யும் எப்படி நாசமாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். தமிழ்நாடு ஒன்றைத் தவிர, மேற்கு வங்காளம் ஒன்றைத் தவிர, கேரள மாநிலம் ஒன்றைத் தவிர, பல்வேறு மாநிலங்களில் இந்த வகுப்புக் கலவரங்களும், வேறு விதமான கலகங்களும் ஏதாவது ஒரு விதத்தில் நாட்டு மக்களையே எப்படிச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன, நாட்டின் ஒற்றுமையை எப்படி நாசமாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். வட மாநிலங் களில் பெரும் கொந்தளிப்பு; நூற்றுக்கணக்கான உயிர்ச் சேதம்; பாரதிய ஜனதாக் கட்சி, விஸ்வ ஹிந்து பரிஷத், இந்து முன்னணி, சிவசேனை, இப்படிப்பட்ட அமைப்புகள், மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி, நாடு முழுவதும் கலகங்களை நடத்தும்படியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தக்கூடிய ஸ்தாபனங்கள். இதை நாம் நேரடியாகவே நம் கண் முன்னாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் கூட, இந்த அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே அமைதியான முறையிலே, நல்லிணக்கத்தோடு, ஒரு சமரசமான முறையிலே, ஜாதிச் சண்டைகள் சில கிளப்பி விடப்பட்டபோதும் கூட, அவையெல்லாம் தடுக்கப்பட்டு ஒரு அமைதியான நிலை இருப்பதனால், அவர்களுடைய நடவடிக் கைகளைப் பெருமளவுக்கு இங்கே நடத்த முடியாதபடி, தூண்டி விடப்படாத நிலையில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அரசு இது பற்றி மெத்தனமாக இருக்கக் கூடாது. மிகவும் உஷாராக இருக்க வேண்டும்.

இந்த மாதிரி நேரத்தில், இப்படிப்பட்ட நடவடிக்கை களைத் தூண்டி விடுவதற்கு, இங்கேயும் அமைதி இல்லாத நிலையை உண்டாக்குவதற்கு சில அரசியல் கட்சிகளிலே

இருந்து செயல்படும்படியான சக்திகளும் பயன்படுத்திக்
கொள்ளும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
அதேமாதிரி, ஜாதிச் சண்டைகள்—இந்த ஜாதிச் சண்டைகள்
வளராமல் தடுக்கப்பட வேண்டும். மதச் சண்டைகள் வளரக்
கூடாது ; ஜாதிச் சண்டைகள் வளரக் கூடாது. மக்களுடைய
பிரதானத் தேவையே அவையல்ல. மக்களுடைய தேவை—
பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், விலையேற்றம்
இவையெல்லாம் தடுக்கப்பட்டு, அவர்கள் வாழ்வதற்கு
வேண்டிய வசதிகள், நல்ல அம்சங்கள், சமுதாயத்திலே ஒரு
செழுமை, வாழ்க்கையில் ஒற்றுமை இவையெல்லாம் ஏற்பட
வேண்டும் என்பதுதான். ஆகவே, ஜாதிச் சண்டைகளும்,
மதச் சண்டைகளும் தலை தூக்காமல் இருக்க வேண்டுமானால்,
உஷாரான தன்மையோடு இந்த அரசு செயல்பட வேண்டும்.
ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அது
வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த ஜாக்கிரதை தொடர்ந்து
நீடிக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் சமாதானக் கமிட்டி
கள் ஏற்பட்டு, அவற்றிற்கு மக்களோடு இருக்கும்படியான
தொடர்பு, அனைத்து மாநிலங்களிலேயும் இணக்கமாக இருக்
கும்படியான தொடர்பு, அதில் உருவாக்கப்பட வேண்டும்.

நாங்கள் எங்களுடைய கோவை மாவட்டத்திலே ஒரு
சமாதானக் கமிட்டியை உருவாக்கி, அனைத்து மதத் தலைவர்
களையும், அதேமாதிரி சமூகத் தலைவர்களையும் ஒன்று
திரட்டி, தொடர்ந்து கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக
அந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறோம். இதை ஒரு உதா
ரணத்திற்குச் சொன்னேன். தமிழகம் முழுமையும், அப்படிப்
பட்ட காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே நமது
முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்
கத்தக்க நல்ல அம்சம். அதையும் நாம் கணக்கில் எடுத்துக்
கொள்ள வேண்டும்.

அதேமாதிரி, இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற இன்
னொரு விஷயம் மண்டல் கமிஷன் பரிந்துரை. மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி இதுபற்றி என்ன நிலையில் இருக்கிறது என்று
காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே கேட்டார்.
நாங்கள், இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள், நடை
முறைக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று ஆரம்பத்தி
லேயே எங்களுடைய சார்பிலே தீர்மானம் போட்டு, இதை
நாட்டிற்கும் அறிவித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, தாழ்த்
தப்பட்ட மக்கள், மலைஜாதி மக்களுக்கு 18 விழுக்காடு ஒதுக்
கீடு—இதில் வேறு எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் இல்லை.
அதைத் தொடர்ந்து அமலுக்குக் கொண்டு வர வேண்டும். பிற்
படுத்தப்பட்ட மக்கள் என்று சொல்கிறார்கள். இதரப் பிரிவு

11.55 மணி

மக்கள், அதாவது ஓ.பி.சி. என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதி
மக்களுக்கும் ஒதுக்கீடு தேவை. அந்த ஒதுக்கீடு வருகிற இடத்
தில்தான் எங்களுடைய பிரச்சினை வருகிறது. நாங்கள் என்ன



கோரிக்கை வைத்திருக்கிறோம் என்றால், அதில் வசதி படைத்
தவர்கள், பணம் படைத்தவர்கள், சக்தி படைத்தவர்கள்,
அரசாங்கத்தினுடைய உதவி பெற்றுத்தான் நிலைக்க வேண்டும்
என்ற நிலை இல்லாத அப்படிப்பட்ட பகுதியினர் இருக்கிறார்
கள். அவர்கள் வளர்ந்தும் வருகிறார்கள். எனவே பொரு
ளாதாரத் துறையில் அவர்களைப் பற்றிப் பரிசீலனை செய்து
ஒரு எக்கனாமிக் க்ரைட்டீரியா அதற்குப் பயன்படுத்தப்பட
வேண்டும். இது ஏற்கனவே நாங்கள் சொன்னதுதான். இதில்
ஒன்றும் புதியதல்ல. பீகார் மாநிலத்தில் திரு. கர்பூரி தாகூர்
முதலமைச்சராக இருந்த காலத்தில், அவர்களே ஒரு ஃபார்
முலாவை வகுத்து அந்த ஃபார்முலாவை அமலாக்கி இருக்
கிறார்கள். ஏழை எளியவர்களாக இருப்பவர்கள், மேல்
ஜாதிக்காரர்களில் இருக்கிறார்கள் என்று எதிர்த்துப்
போராடக்கூடியவர்கள் சுட்டிக்காட்டக்கூடிய காரணம்
அது. ஏழை எளிய மக்கள் மேல்ஜாதிக்காரர்களிலும்
இல்லையா என்றால் இருக்கிறார்கள். எனவே, அந்த ஏழை
எளிய மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு வசதிகளை ஏற்
படுத்தவேண்டி இருக்கிறது. அதை நாம் கணக்கில் கொள்ள
வேண்டும்.

எனவே, பிற்பட்டவர்களில் பணம் படைத்தவர்களுக்கும்,
வசதி படைத்தவர்களுக்கும், தங்களால் சமாளிக்க முடியும்
என்ற சக்தி உள்ளவர்களுக்கும் இந்த ஒதுக்கீடு சென்று சேரக்
கூடாது. அந்த ஒதுக்கீடு முழுவதும் பிற்பட்ட வகுப்பில்
இருக்கக்கூடிய ஏழை, எளியவர்களுக்கே போய்ச் சேரவேண்டும்
என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதற்காகத்தான்
நாங்கள் தொடர்ந்து அந்தக் கருத்தை வலியுறுத்தி வருகி
றோம்.

அடுத்து, பிற்பட்ட வகுப்பாருக்கு இன்னின்ன சௌகரியங்
கள் கொடுக்க வேண்டும் என்று அளிக்கப்பட்ட மண்டல் கமிஷன்
ரிப்போர்ட்டை இப்படி 10 வருஷ காலம் தொடாமல் வைத்
திருந்த திரு. ராஜீவ் காந்தி அரசாங்கமும் சரி, அதற்கு முன்பு
இருந்த அரசாங்கமும் சரி, ஒன்றும் செய்யவில்லை. தேசிய
முன்னணி அதிகாரத்திற்கு வந்ததற்குப் பிறகுதான், திரு. வி. பி.
சிங் அவர்கள் தான் அந்தச் சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டு
வர வேண்டும் என்று அதை அமலாக்குவதற்கான நடவடிக்கை
எடுத்தார்கள். அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை நாடு
முழுவதும் பார்த்தோம். அதை எதிர்த்துத்தான் மேல்
மட்டத்தில் இருக்கக் கூடிய மேல்ஜாதிக்காரர்கள், மேல்
மட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் வடநாட்டிலே பல மாநிலங்
களில் பெரும் கலவரங்களைச் செய்ததை நாம் பார்த்தோம்.
ஆனால் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட
வில்லை. வட மாநிலங்களில்தான் அந்தக் காரியங்கள்
செய்யப்பட்டன. அந்தக் காரியத்தில் காங்கிரஸ் கட்சி என்ன
செய்தது? காங்கிரஸ் கட்சி செக்யூலர் ஆட்சி என்று சொல்லிக்

கொண்டிருக்கிற கட்சி. ஆனால் அந்தப் போராட்டத்தில் அவர்களுடைய மாணவர் பிரிவு முழுவதையும் அந்தக் கட்சியினர் ஈடுபடுத்தினார்கள்.

அதுமட்டுமல்ல. மண்டல் கமிஷன் அறிக்கையை அமலாக்க வேண்டும் என்ற வகையில் அவர்கள் முன் வந்து அறிக்கைகள் கொடுத்தோ, நடவடிக்கைகள் எடுத்தோ பிற்பட்ட மக்களுக்கு இந்த வசதிகள் கிடைக்க வேண்டும் என்று என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நாம் தேடித்தான் பார்க்க வேண்டும். வெகு சாமர்த்தியமாக அவர்கள் ஒருவிதமான சமரசத்தைத்தான் கையாண்டார்கள். மேல்ஜாதிக்காரர்கள் நடத்தும்படியான கடுமையான தாக்குதல் நடக்கும்போது, தாக்குதல் நடத்துவதற்காக ஒருவிதமான சமரசத்தோடுதான் அவர்கள் சென்றார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய 'ஸ்டூடன்ட்ஸ் விங்' என்று சொல்லக்கூடிய பிரிவினர் அந்தக் கலவரத்தைத் தூண்டிவிடக்கூடிய வகையில் முன்னணிப் படையாக இருந்து அதைச் செய்து வந்தது. இதை நாம் பார்க்கிறோம். அதனால்தான் நாம் சொல்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் சொல்வது ஒன்று. நடைமுறையில் நடப்பது வேறு ஒரு காரியம். அப்படிப்பட்ட நிலையை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் சமாளித்துக்கொண்டுதான் இன்றைக்கு இந்திய நாட்டில் ஜனநாயக இயக்கங்களும், இடதுசாரிக் கட்சிகளும், தமிழ்நாட்டில் இருக்கும்படியான நமது அரசாட்சியும், இங்கே இருக்கிற மக்களும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். மண்டல் கமிஷன் ரிப்போர்ட் அமலாக்கப்படவில்லை என்பதற்காக அதை நிறைவேற்ற இந்த மன்றத்திலே தீர்மானம் போட்டு நாம் அனுப்பி இருக்கிறோம். என்ன நிலைமை? நாட்டில் எவ்வளவு பெரிய மோசமான நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது? இன்றைக்கும் பல காரியங்கள் தொடர்ந்து செய்ய வேண்டி இருக்கிறது. அதைச் செய்யவேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து.

இலங்கை அகதிகள் சம்பந்தப்பட்ட வகையில் ஒரு ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு இலட்சத்து இருபத்திரண்டாயிரம் அகதிகள் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான பணம் அவர்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது. அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள், அவர்களுடைய உரிமைகளைப் பெற முடியாமல் இருக்கின்றார்கள். இலங்கை அரசினுடைய பிற்போக்குத்தனமான தவறான அடக்குமுறைப் போக்குகளைக் கண்டித்துப் போராடக்கூடிய தமிழ் மக்களுக்கு நம்முடைய பரிபூரணமான ஆதரவு உண்டு. அவர்களுக்கு ஜனநாயக முறையான ஒரு வாழ்வு வேண்டும். இலங்கை அரசினுடைய அந்த ஒடுக்கு முறைக்கு எதிராக, ஒன்றுபட்டு இலங்கையில் அந்தத் தமிழ் மக்கள், தமிழ் மக்களுடைய சுய ஆட்சியைப்



பெற்று, அவர்கள் பிரஜா உரிமையைப் பெற்று அனைத்து மக்களுக்கும் இருக்கும்படியான உரிமைகள் அத்தனையும் பெற்று, பாதுகாப்பும் பெற்று, வடக்கும் கிழக்கும் இருக்கின்ற மாநிலங்களில் அவர்களுக்கு மாநில சுய ஆட்சி அமைப்பு வந்து, அவர்களுடைய அரசாட்சியையும் ஏற்படுத்தி அந்த முறையில் அவர்களுடைய உரிமைகள் முழுவதும் பெறப்பட்டுத் தரப்பட வேண்டும். அதற்காக நடக்கும்படியான ஒரு போராட்டம் அது. அப்படிப்பட்ட போராட்டத்திலே பங்கெடுத்த மக்களுக்குத்தான் நாம் உதவிகளைச் செய்கிறோம். அந்த முறையிலே நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். எந்த அளவுக்குத் தெரிவிக்க வேண்டுமோ, அந்த அளவுக்குத் தெரிவிக்கிறோம். அப்படிப்பட்ட அகதிகள் இங்கே 1,22,000 பேர்கள் இருக்கின்றார்கள். நம்முடைய பொருளாதாரத்தின் மீது ஒரு பெரிய பாரமாக இருந்தாலும் அதற்கும் செலவழித்து இங்கே அவர்களுக்கு பலவிதத்திலும் சௌகரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதும் இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

12-00 மணி

இலங்கை அரசு அங்கே இருக்கும்படியான மக்களை ஒன்று திரட்டி, ஒற்றுமையோடு அந்த இலங்கை நாடு இருக்கவேண்டுமானால், அவர்களுடைய குண்டு வீச்சையும், அவர்களுடைய யுத்தம் நடத்தும்படியான நடவடிக்கைகளையும் நிறுத்தி அவர்கள் அங்கே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அனைத் துத் தமிழ் மக்கள் குழுக்களோடும், அங்கே இருக்கின்ற இதர சக்திகளோடும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்துத்தான் எங்களுடைய கட்சியி னுடைய கருத்து என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதுதான். இருந்தாலும் இங்கே கேள்வி கேட்கப்பட்டதனாலேயே அதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் இந்த ஆளுநர் அவர்கள் அறிக்கையிலே சொல்லப்படாத ஒரு முக்கியமான விஷயம். அதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அது என்னவென்று கேட்டால், தொழிலாளர்களுடைய நடைமுறையைப் பற்றி. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைபற்றி தொழிலாளர்களுக் கும், தொழிலுக்கும், அரசுக்கும் ஏற்படவேண்டிய நல்ல உறவைப் பற்றி இருக்கின்ற அம்சங்கள்தான் அது. அது இங்கே சொல்லப்பட வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை உடைக்கும்படியான நடவடிக்கைகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது தனியார் துறைகளிலே அதிகமாக நடக்கிறது. அரசாங்கத் துறையிலே இருக்கின்ற சில தொழில்களில்கூட இது ஏற்படு கிறது. இது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. அதற்கு இடமளிக்கக்கூடாது. இந்தத் தொழிலாளர்கள் நலச் சட்டம்

இருக்கிறதே அவை பலவும் நடைமுறைக்குக் கொண்டு
வருவதற்குப் பதிலாக அந்தச் சட்டங்களே பலன் அளிக்காத
முறையில் செய்து விடுகிறோம்.

உதாரணமாக, ஒரு தொழிலாளி 30 வருட காலம் வேலை
செய்துவிட்டு வீட்டுக்குப் போகும்போது கிடைக்க வேண்டிய
கிராஜுவிட்டி பணம் அவருக்குக் கொடுக்கப்படாமல் இருக்
கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை உறுப்
பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. ரமணி :** அப்படி அந்த கிராஜுவிட்டி பணம்
கொடுக்கப்படாமல் கூட தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
அதற்கு முதலாளிமார்கள் தவணை சொல்கிறார்கள்.
கணக்கிலே கொடுக்காமல் இருக்கின்றார்கள். வருடக்
யானால் அந்தச் சட்டம் எல்லாம் என்ன ஆகும்? அதே மாதிரி
நஷ்டயீட்டுச் சட்டம், கிராஜுவிட்டி சட்டம், பிராவிடண்ட்
பண்ட் சட்டம், இப்படிப்பட்ட சட்டங்கள் எல்லாம் உடைக்கப்
பட்டு, அந்தச் சட்டங்களுடைய பலன் கிட்டாமல் பண்ணப்
பட்டிருக்கிறது. அரசு இதிலே ரொம்பக் கவனமாக இருந்து,
சில நல்ல கொள்கை முடிவுகளை உருவாக்கி இதிலே எதிர்த்து
நிற்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் வர்க்கத்
திற்கு இந்த அரசு பக்கபலமாக நின்று இந்த விஷயத்திலே
பலனைப் பெற வேண்டும்.

அதுபோலவே, தொழிற்சங்க அங்கீகாரம். இன்றைக்கு
தொழிற்சங்க அங்கீகாரம் இல்லாமல் உடைப்பது. அவர்கள்
அதை உடைப்பதையே ஒரு முக்கியமான வேலையாகக் கொண்
டிருக்கின்றார்கள்.

இன்னொன்று, தேயிலைத் தொழிலாளர்கள் 2 இலட்சம்
பேர்கள் நம் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள். அந்தத்
தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி
இல்லாத ஒரு ஏற்பாட்டை, அண்மையிலே ஒரு ஒப்பந்தத்தைச்
செய்திருக்கின்றார்கள். அரசாங்க அதிகாரிகளும் அதிலே
கையெழுத்திட்டிருக்கிறார்கள். பஞ்சப்படி என்பது தனியாக
சம்பள உயர்வு அல்ல. ஏறிய விலைவாசியை ஈடுகட்டுவதற்கு
அந்தச் சம்பளம். அதற்கு ஏற்படக்கூடிய 'எரோஷன்'—
அது அரிக்கப்பட்டுப் போகிறதே, அதை ஈடுகட்டிக் கொடுப்
பது. அந்த மாதிரி இருக்கக்கூடிய காரியங்களில் அரசாங்க
அதிகாரிகளே, 'சங்கங்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள்,
நாங்கள் செய்கிறோம்,' என்று சொல்வது சரியல்ல. பல
சங்கங்கள் அதை ஒத்துக்கொள்ளாமல் எதிர்த்துக் கொண்டிருக்
கின்றன. இதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன்.



அதே மாதிரி தொழிலாளர்கள் இலாகாவில் கீழிருந்து மேல்
மட்டம் வரைக்கும், மேல்மட்டத்தில் கமிஷனர் வரைக்கும்
இருக்கக்கூடிய இந்த இலாக்காவினுடைய நடவடிக்கை இருக்
கிறதே, அது மிகவும் பலவீனம் என்பது மட்டுமல்ல, நீண்ட
நாட்களுக்கு நியாயம் கிடைக்காமல், தொழில் தகராறுகள்
இழுத்துக்கொண்டே போய், கடைசியிலே அரசாங்கத்தினுடைய
மேல்மட்டத்திற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
வரைக்கும் அதைக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு நிர்ப்பந்தங்
கள் கீழே நடக்கின்றன. அது சரியல்ல. அந்த
நிலை மாறவேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
இவைகளை மாற்ற அரசு தகுந்த நடவடிக்கை எடுத்தாக
வேண்டும்.

12-05 மணி

அடுத்தது, விலை ஏற்றத்தைப் பற்றி. எனக்கு முன்னால்
பலர் எடுத்துக் காட்டினார்கள். இன்றைக்கு விலை ஏற்
றத்தைத் தடுக்கவேண்டிய பொறுப்பு யாருக்கு? மத்திய
அரசாங்கம். அந்த மத்திய அரசாங்கத்தினால் விலைவாசி
யைக் கட்டுப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்
கப்பட்டு இருக்கிறது? தினசரிப் பத்திரிகைகளிலே வரக்
கூடிய செய்திகளைத் தவிர வேறு நடவடிக்கை எதுவும்
காணோம். வியாபாரிகள் யாராவது விலை ஏற்றினார்கள்
என்றால் அவர்களை நாங்கள் கடுமையாகத் தண்டிப்போம்
என்று சொல்கிறார்கள். அனுதினமும் சொல்கிறார்கள்.
கடைசியில் அவர்களே முடிவுக்கு வந்து விடுவார்கள். இது
ஒரு நோய் போல இருக்கிறது என்று. அதுமட்டுமல்ல,
உள்ளபடியே இதுகுறித்து யார் நடவடிக்கை எடுப்பார்கள்
என்று ஒரு எண்ணம் வந்துவிடும். ஆகவே, விலைவாசியைத்
தடுக்க, விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர,
பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை உடனடியாகத்
தடுக்க, இன்றைக்குப் பிரதானமான திட்டவட்டமான நட
வடிக்கை எடுக்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்கள்
அத்தனையையும் கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்குக்
கிடைக்கச் செய்ய வேண்டும். அது நியாயமான ஒன்று. நம்
மாநிலத்தில் ஏற்கெனவே அரசு அரிசி விலையைக் குறைத்
திருக்கிறது. அதுகுறித்து, கடைசியில் சொல்கிறேன். இப்
போது என்னென்ன பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில்
கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். இன்றைக்கு விலைவாசி
உயர்வு சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு ஏறியிருக்கிறது.
இவ்வாறு விலைவாசி உயர்வை சரித்திரத்தில் நாம் கண்டதில்லை.
மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் கூடச்
சொன்னார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு
மத்திய அரசுக்கு இருக்கிறது. அது அதை நிறைவேற்ற
வில்லை.

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

இன்றைக்கு இந்த அரசைக் கவிழ்க்கக் குரல் கொடுக்கிற வர்கள், அதில் 5 பெர்சென்டை விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும் குரல் கொடுத்திருந்தால் அதில் அர்த்தம் இருந்திருக்கும். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதுடன் பதுக்கலையும் கள்ள மார்க்கெட்டையும் கட்டுப்படுத்த வேண்டும். விலைவாசி யைக் கட்டுப்படுத்த, அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு, பயறு வகைகள், மிளகாய், சோப்பு, மலிவு விலைத் துணி, கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாடிபின் ஆயில் போன்றவைகளை நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்க, வினியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு பெரிய பொறுப்பான வேலை. இதற்கு நூற்றுக் கணக்கான கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். இப்படி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் விலைவாசியைக் கட்டுப் படுத்த முடியாது. நாம் ஒன்றும் இதற்காக அதிகமாக சப்சிடி கொடுக்கத் தேவையில்லை. வெளி மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்தி, பதுக்கலைக் கட்டுப்படுத்தி, கள்ள மார்க் கெட்டைக் கட்டுப்படுத்தி, வெளி விலையை விடக் கொஞ்சம் குறைவான விலையில் நாம் இந்தப் பொருள்களை விநியோ கித்தால் போதும். அவ்வாறு செய்தால் நிச்சயமாக இந்த அரசுக்கு நல்ல பெயர் உருவாகும். ஆட்சிக்கு நல்ல பெயர் என்பது மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாகத் தமிழக மக்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தவரையில் கூட நல்ல பெயர் உண்டாகும். அது அவசியம் செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்று சொல்லி, ஒரு இட்டுக் கட்டிய, இல்லாதவைகளை ஒரு குற்றச்சாட்டாக உருவாக்கி, அதையே ஒரு பொய்யையே— பொய் என்கிற சொல்லைப் பேசக் கூடாது, அதற்கு உண் மைக்கு மாறாக என்றுதான் பேசவேண்டும்—100 தரம் அடுத்து, அடுத்துச் சொன்னால் கேட்கிறவர்கள் நம்பினால் அந்தப் பொய்யும் உண்மையாகும் என்பது ஹிட்லருடைய தத்துவம். அதை நம்ப வைக்கத்தான், அதை நம்பவைத் தால்தான் அதை முழுமையாக நிறைவேற்ற முயலுவார்கள். That idea becomes a force. அந்த வேலைதான் இன்றைக்கு நடக்கிறது. அதுதான் 28ஆம் தேதி நடத்த இருக்கிற சாலை மறியல். அதுபோல நான் பலவற்றைச் சொல்ல முடியும். ஆனால் நேரமில்லை. ஆகவே, அப்படிப் பட்ட பொய்யான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன வழி? நம் அரசு பேசுவது மட்டும் போதாது. இந்த அரசின் மீது ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் மீது கை வைத்தால், லட்சக்கணக்கான அல்ல. கோடிக்கணக்கான



1991 சனவரி 25] [திரு. கே..ரமணி]

மக்கள் பெரிய, பெரிய அளவில் போராட்டத்தில் இறங்கு வார்கள் என்கிற நிலை உருவாகும். அதற்கு மக்களைத் திரட்ட வேண்டும். ஆகவே, தமிழக மக்களுக்கு எந்த அள வுக்கு நிவாரணங்கள் செய்து கொடுக்க முடியுமோ அந்த அள வுக்கு அவர்கள் நிவாரணம் செய்து கொடுக்க வேண்டும். சௌகரியம் என்று நான் சொல்ல மாட்டேன், ஆனால் விலை வாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். நியாயமான ஊதியம், அதற்கு ஏற்ப கட்டுப்பாட்டுக்குள் விலைவாசி இருக்கின்ற வகை யில், நியாயமான விலையில் மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கக்கூடிய அளவுக்கு சாத்தியமான பெரிய அளவிலான நிவாரணத்தை அளித்து, மக்கள் மனதில் நல்ல பெயரைப் பெற்று அந்த வகையில் மக்களைத் திரட்டவேண்டும்.

இன்றைக்கு இலங்கையில் இருக்கிற போராளிகளுடைய நடமாட்டம் அதிகமாக இருப்பதால் இங்கே சட்டம்-ஒழுங்கு கெட்டுப் போய்விட்டது, கடற்கரையில் இருக்கிற 3 மாவட் டங்களில் கரை ஓரம் முழுவதும் அவர்கள் கையில் ஆட்சி இருக்கிறது என்று எல்லாம் சொல்கிறார்கள். அது பச்சைப் பொய். உண்மைக்கு மாறான ஒன்று. அப்படி அங்கே ஒன்றும் இல்லை. அது உண்மைக்கு மாறானது என்பது எல் லோருக்கும் தெரிந்த ஒன்று. இருந்தாலும் எங்கள் ஜனநாயக அமைப்பு, வாலிபர் அமைப்பு, விவசாய அமைப்பு, மாதர் சங்க அமைப்பு போன்ற அமைப்புகள் நாட்டில் எல்லாப் பாகங் களிலும், கடற்கரைகள் உட்பட இருப்பதால், தொழிலாளர் அமைப்புகள் இருப்பதால் நாங்கள் அவர்களை எல்லாம் அழைத்து இம்மாதிரி சொல்கிறார்களே, உண்மை நிலைமை என்ன என்று கேட்டோம். அப்படி ஒன்றும் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள் ஆக, இலங்கையில் நடக்கும்படியான சண்டையை இந்த மண்ணுக்குள்ளேயும் கொண்டுவந்து, இங் கேயும் அம்மாதிரி நிலைமையை உருவாக்கி, நாட்டின் பாது காப்புக்கு அபாயம் உண்டாக்கக் கூடாது என்று நாங்கள் சொன் னோம். அது என்ன விவரம்? அவர்கள் சொல்லுகிறார்கள், அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை என்று முன்னாலேயே அவர்கள் வருவது, போவது உண்டு, யாரும் அதை இல்லை என்று சொல்லவில்லை. இங்கே இருந்து பொருள்களை எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்று சொல்லு கிறார்கள்.

12-10 மணி

நான் கேட்கிறேன், இலங்கைக்குத் தமிழ்நாட்டிலிருந்து பொருள்கள் கொண்டு போவதும், வர்த்தகம் செய்வதும் பத்தாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அது இன்றைக்குப் புதிதல்ல. இனிமேலும் நடக்கத்தான் செய்யும். ஆனால் அது முழுவதும் இந்தப் புலிகள் வடிவத்தில், அவர்கள்

உட்கார்ந்து செய்வது என்ற குற்றச்சாட்டைச் சொல்லி அவர்கள் சுற்றி நடக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கு குலைந்து போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். சட்டம்-ஒழுங்கு குலைந்து போனால் அதைத் தடுக்கத்தான் மாநில அரசு தன்னுடைய கையிலே இருக்கும்படியான போலீஸ், ரிசர்வ் போலீஸ் ஆகிய சகலத்தையும் பயன்படுத்துகிறது. ஆனால் இலங்கையிலிருந்து கடலைத் தாண்டி இந்தக் கடற்கரைக்கு வருகிறவர்களை யார் அனுமதித்தார்கள்? அதற்கு இந்திய அரசாங்கம் என்ன சொல்லும்? அந்த இந்திய அரசாங்கத்தைக் கேள்வி மேல் கேள்வி கேட்பதற்கு வகை இல்லாதவர்கள்—காங்கிரஸ் கட்சிக்கு வகை இல்லையா? அனைத்திந்திய அண்ணா தி.மு.க.விற்கு வகை இல்லையா அதைக் கேட்பதற்கு? இரண்டு பேரும் சேர்ந்துதானே நிற்கிறீர்கள்? ஏன் கடல் வழியாக அவர்கள் வரவேண்டும், கடற்படை என்ன செய்கிறது? இப்போது தேடிப் பிடிக்கிறார்களாம். இதை முன்னாலே செய்திருக்கலாம் அல்லவா? இங்கே இருக்கிறவர்களை என்ன செய்ய வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்தைக் கேட்டு, மத்திய அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த நடவடிக்கைக்கு மாறுபட்டு செய்ததாக ஏதாவது ஒரு காரியத்தையாவது எடுத்துக்காட்ட முடியுமா? இருந்தால் அதைச் சொல்லட்டும். அப்படிச் சொல்லவில்லையே, அப்படிப்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள், வந்திருக்கிறார்கள், சட்டம்-ஒழுங்கு குலைந்து போய்விட்டது என்று மத்திய சர்க்காரிலே மந்திரியாக இருக்கிறவர்கள் சுற்றி நடந்து பிரச்சாரம் செய்வது என்றால் உண்மைக்கு நேர் மாறுபட்ட, ஒரு இட்டுக்கட்டிச் சொல்லக்கூடிய, தவறான, இல்லாத ஒன்று என்று நாம் சொல்வதற்குக் காரணம் இதுதான். கண்ணை மூடிச் சொல்கிற விஷயமல்ல. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி, அது பிரச்சாரமாகி, வளர்கிறது. அதற்காகத்தான் அஸ்ஸாமிலிருந்து யாரோ வந்தார்கள் என்று சொல்கிறார்கள். அதெல்லாம் அர்த்தமற்ற பிரச்சாரங்கள். அவர்கள் இங்கே வந்துதான் பயிற்சி பெறவேண்டுமென்று இல்லை. அவர்களுக்கு அந்தப் பக்கமே இருக்கிறது. பங்களாதேஷ் அவர்கள் எல்லையிலே இருக்கிறது; பர்மா அவர்கள் எல்லையிலே இருக்கிறது. அங்கேயிருந்து அவர்கள் பலவற்றையும் செய்ய முடியும். அப்படிப்பட்ட நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. இதையெல்லாம் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடையதாகும். அவர்களிடம்தான் நாட்டினுடைய பாதுகாப்பிற்கான இராணுவம், சகலவிதமான படைக்கலங்கள் இருக்கின்றன. அது அவர்கள் செய்ய வேண்டியது. அதைவிட்டு இங்கே இருக்கிற கட்சிகள்—காங்கிரஸ் கட்சியும், அண்ணா



தி.மு.க.வும் இங்கே சட்டம்-ஒழுங்கு சீர் குலைந்துவிட்டது, ஆகவே இந்த சர்க்காரைக் கலைக்க வேண்டுமென்று சொல்வது உண்மைக்கு நேர் மாறானது. அவர்கள் மனதிலே அந்த ஆசை இருக்கிறது. அதற்கு அவர்களிடம் ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் என்னவென்று இங்கே பார்த்தாலே தெரியும், காங்கிரஸ் கட்சி இன்றைக்கு நேற்றைக்கல்ல, ஏற்கெனவே நமது வீரையன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 67 தரம் மாநில அரசைக் கலைத்தார்கள். இந்த சர்க்கார் வந்ததற்குப் பிறகு என்ன செய்திருக்கிறார்கள்? பீகார் அரசாங்கத்தைக் கலைக்க முயற்சி செய்தார்கள். அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. தேசிய முன்னணி அரசாங்கமே போராட்டம் நடத்திச் சமாளித்தார்கள். உத்திரப்பிரதேச அரசாங்கத்தைக் கலைக்கத் திட்டம் நடந்தது. ஜனதா தளத்தில் அங்கே சண்டை இருந்தாலும், காங்கிரஸ் கட்சிதான் அதற்கு மூல காரணம். அவர்கள்தான் அதற்கு சப்போர்ட். அதற்கு ஆதரவு கொடுத்தார்கள். திரு. முலாயம் சிங் அவர்கள், அங்கே இருக்கிற முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். கலைப்பு என்பது காங்கிரஸ் கட்சிக்கு தேவை. அதற்கு அடுத்தபடியாக குஜராத்தில் என்ன நடந்தது? அதே வேலைதான் நடந்தது. நேஷனல் பிரண்ட் கவர்ன்மெண்டாக இருந்ததை காங்கிரஸ் கட்சி சப்போர்ட்டோடு மாற்றப்பட்டது. அது நடந்தது, இராஜஸ்தானில் என்ன நடந்தது? அங்கே பி.ஜே.பி. பெரிய கட்சி. அங்கே காங்கிரஸ் சப்போர்ட்டை வைத்து செய்யவேண்டிய அவசியமில்லை. ஜனதா தளத்திலிருந்து போய் இருக்கிறவர்களை வைத்து அவர்கள் அங்கே சமாளித்தார்கள். அங்கேயும் மந்திரிசபைக் கவிழ்ப்பு என்ற நிலைமை உருவாக்கப்பட்டது. ஆந்திராவிலே என்ன நடந்தது? காங்கிரஸ் கட்சிக்குள்ளே இருப்பது தானே கவிழ்க்கப்பட்டது. அது அவர்களுக்குள்ளே இருக்கிற சண்டை என்று சொல்லுவார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு பலகீனமான மத்திய சர்க்காரை உட்கார வைத்துக்கொண்டு, 544 பேர் இருக்கக்கூடிய பார்லிமெண்டில் 52 பேர் இருக்கக்கூடிய கட்சி அரசாங்கத்தை உண்டாக்குவதற்குப் பரிபூரண ஆதரவு, ‘Unconditional support to the Government’ என்று ஜனாதிபதிக்கு வாக்குறுதி சொல்லி ஜனாதிபதியினுடைய காரியாலயத்தில் இருந்து அறிக்கை வெளியிட்டு அமைக்கப்பட்டு இருக்கிறது அந்த அரசு. 193 பேர் இருக்கிற காங்கிரஸ் கட்சிதான் இதற்கு சப்போர்ட். அந்தக் கட்சி கையில் இந்த அரசாங்கம்.

12-15 மணி

இது எப்படி இருக்கிறது என்றால், 50 ஏக்கர் நிலத்துக்குச் சொந்தமான ஒரு நிலச்சுவான்தார் 5 சென்ட் நிலத்துக்குக் குத்தகைக்கு விட்டு அவருடைய எல்லைக்குள் அவரை உட்கார வைத்து, அவரிடம் வேலை வாங்குவதை நாம் நாட்டிலே பார்ப்பது இல்லையா? அந்த நிலைமை தானே அது.

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

ஆகவே, காங்கிரஸ் கட்சி சிலவற்றை விரும்புகிறது. அது ஒரு
சர்வாதிகாரத்தைப் பார்த்துச் சென்றது. நாடு முழுவதும
அதை எதிர்த்து. அதனுடைய விளைவுதான் போன பாராளு
மன்றத் தேர்தலில் அந்தக் கட்சி தோற்கடிக்கப்பட்டு
அரசாங்கத்தை அமைக்க முடியாத இடத்தில் கொண்டு வந்து
உட்கார வைத்தது. அது தான் இந்திய நாட்டு மக்கள் செய்து
இருக்கும்படியான ஒரு மிகப் பெரிய சரித்திரப் பூர்வமான
நிகழ்ச்சி. என்றைக்கும் இந்திய மக்கள் பாராட்ட வேண்டிய
நிகழ்ச்சி அது. ஆகவே, அவர்கள் எந்த இடத்தில், எதோடு
சேரவேண்டுமோ, அதோடு சேர்ந்து அந்த அரசாங்கம் இங்கே
நடந்தது; பிறகு கவ ͺͺக்கிற வேலையாகத் தானே நடந்தது?
பிறகு ஆந்திராவில் அவர்களுக்குள்ளேயே நடந்தது. அடுத்து,
பாண்டிச்சேரியில் இருக்கிற அரசாங்கத்தைக் கலைப்பதற்குத்
திட்டம் போட்டு, அதைச் செய்தார்கள். இப்போது அங்கே
சஸ்பென்டட் அனிமேஷனில் அசெம்பிளியை வைத்து, தேர்ந்
தெடுக்கப்பட்ட ஆட்சி போய்விட்டது. கோவாவில் என்ன
நடந்தது? இதே கலைப்புதான் நடந்தது. மகாராஷ்டிராவில்
அரசு நன்றாக நடந்து கொண்டிருந்தது. அங்கு மந்திரிகளுக்
குள்ளே 4 மந்திரிகள் ஓப்பனாக சீப் மினிஸ்டரை எதிர்த்து
ஸ்டேட்மென்ட் விட்டார்கள். இதற்கும், காங்கிரஸ் கட்சிக்கும்
ஏதோ ஒருவிதத்திலே பின்னாலே இருந்து இதனுடைய வேலை
நடைபெறுகிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்று
சொன்னால், அந்தக் கட்சியைப் பற்றி குறை சொல்வதற்காக
அல்ல. அந்தக் கட்சியினுடைய கண்ணோட்டம் இந்த அரசைக்
கலைத்துத் தீரவேண்டும்; மற்ற அரசுகளையும் கலைத்துத்
தீரவேண்டும்; கேரளாவில் இருக்கிற அரசை முடிந்தால்
கலைத்துத் தீரவேண்டும்; மேற்கு வங்காளத்தில் இருக்கிற
அரசையும் கலைத்துத் தீரவேண்டும். அடுத்து ஒரு தேர்தல்
நிச்சயம் வர வழி இல்லை. 193 பேர் இருக்கக்கூடிய சக்தி ஏன்
அரசாங்கத்தை கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது? அவர்
களோடு அவர்களுக்கு சர்போர்ட் கொடுக்கக்கூடிய ஆட்கள்
இவர்களுக்கு சப்போர்ட் கொடுக்கமாட்டார்களா? ஏன்
அரசாங்கத்தை எடுக்கவில்லை? அதற்குப் பதில் இருக்கிறதா?
இன்று வரைக்கும் அதற்குப் பதில் இல்லை. நாங்கள் வெளியி
லிருந்து ஃபுல் சப்போர்ட் கொடுக்கிறோம் என்கிறார்கள்.
ஏன் அந்தமாதிரி சப்போர்ட் கொடுக்கவேண்டும்? 193
பேரை வைத்து இருப்பவர்கள் ஏன் இந்தமாதிரி சப்போர்ட்
கொடுக்க வேண்டும்? அப்படியென்றால் இவர்களை முன்னால்
வைத்து, தாங்கள் விரும்புவதை எல்லாம் சொல்லி—அவர்கள்
விரும்புவது எல்லாம் அடுத்த தேர்தல் வருவதற்குள்ளே, இப்
படிப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வாக்குப் படைத்த
கட்சிகளையும், சட்டமன்றங்களையும், மந்திரி சபைகளையும்
கலைத்து ஒரு நிலையை உருவாக்கி அப்புறம் அவர்கள் தேர்
தலுக்குப் போகவேண்டும். இதுதான் அவர்களுடைய திட்டம்.
இந்தத் திட்டத்துக்குத் தான் அ.இ.அ.தி.மு.க. இரையாகி
அதோடு சேருகிறது. அது எப்படி நிற்க முடியும்? அதை
அவர்கள் கவனிக்க வேண்டாமா?



1991 சனவரி 25] [திரு. கே. ரமணி]

அடுத்து, 1976 ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30 ஆம் தேதி
இந்த சர்க்கார் மெஜாரிட்டியாக இருந்தபோது கலைத்தார்கள்.
நான் கேட்கிறேன். அப்போது ஒரு புலியோ சிங்கமோ
ஏதாவது இருந்ததா இங்கே? அந்தமாதிரிப் பிரச்சினை
அப்போது இருந்ததா? இல்லை. பிறகு ஏன் கலைத்தார்கள்?
அதற்குப் பதில் சொல்ல முடியுமா? ஒரு பதிலும் இல்லை. கடைசி
யில் ஒரு பதில் இருக்கிறது. அதை நான் சொல்கிறேன்.
அப்படி நடந்தது. அதேமாதிரி எம்.ஜி.ஆர். ஆட்சியைக்
கலைத்தார்கள். 1980 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்திலே
மெஜாரிட்டியாக இருந்த அரசாங்கத்தை, மெத்தப் புகழும்
செல்வாக்கும் மக்கள் மத்தியில் பெற்று இருக்கும்படியான
தனிப் பெரும் தலைவருடைய ஆட்சி அவருடைய பெயரை
வைத்துத் தானே அந்தக் கட்சியில் காரியங்கள் செய்து
கொண்டு இருக்கிறார்கள். அவருடைய அரசாங்கத்தைக்
கலைத்தார்கள். என்ன காரணம்? என்ன குற்றச்சாட்டு?
இன்று வரைக்கும் சொல்லப்பட்டு இருக்கிறதா? இல்லை.
அப்போது அதையும் கலைத்தார்கள். அத்தனையையும் செய்த
கட்சி, காங்கிரஸ் கட்சி. காங்கிரஸ் கட்சியினுடைய தந்
திரங்கள், அதனுடைய ஜனநாயக விரோதப் போக்கு,
அதனுடைய தவறான கொள்கை—அவைகளை வைத்துத்தான்
நாம் போராட வேண்டும். அதற்குப் பதிலாக அந்தக் கட்சி
யோடு, தமிழ்நாட்டிலே இருந்த ஒரு கட்சி திராவிட இயக்
கத்தைச் சேர்ந்த ஒரு கட்சி பிளவுபட்டுப் போனாலும்,
எப்படிப் போய் அப்படிப்பட்ட ஒரு கலைக்கிற, கவிழ்க்கிற,
கீழே வீழ்த்துகிற ஒரு பாரம்பரியத்தோடு நிற்க முடியும்?
அவர்கள் மாநில சுயாட்சி வேறு கேட்கிறார்கள்: அதிகாரம்
அதிகம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால், அவர்கள்
பேசுவதாக இல்லை. ஆகவே நாம் சொல்கிறோம். அப்படிப்
பட்ட ஒரு கண்ணோட்டத்தோடு, அடுத்த தேர்தல் வருவதற்
குள், கரும்புக் காட்டுக்குள் யானை புகுந்த மாதிரி, இதை
ஒரு விதத்திலே சரி செய்துவிட்டு காரியத்தைச் செய்ய
வேண்டுமென்று நினைக்கிறார்கள். இன்றைக்கு நான்
எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

12-20 மணி

எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் நினைக்கக்கூடிய
இந்த ஆசை நிறைவேறப்போவதில்லை. அதுதான் யதார்த்த
மான நிலை. அடுத்து, ஒரு பாராளுமன்றத் தேர்தல் வரும்
போது தெரியும் என்ன நடக்குமென்று—திரு. வி. பி. சிங்
அவர்கள் கொள்கைக்காகத்தானே போராடினார்கள்? அர
சாங்கங்களைக் கலைக்கக்கூடாது, அந்த 356வது பிரிவை
அப்படி உபயோகப்படுத்தக்கூடாது, மாகாண சுயாட்சி என்பது
நாசம் அடைந்து போகும் என்பதற்காக பிரதேசக் கவுன்சிலை
ஏற்படுத்தி அதையும் வேலை செய்ய வைத்து மாகாணங்களோடு
இணைப்பானதொரு மத்திய அரசு இருக்க வேண்டும் என்று
அப்படிப்பட்ட கொள்கைகளை அவர் கையில் வைத்துக் கொண்

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

டிருக்கும்போது அந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், பி.ஜே.பி.யும், காங்கிரசும் சேர்ந்து செய்துள்ள சதி என்று சொல்லுவதற்குக் காரணங்களாக அமைகின்றன. தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தார்கள். 86 பேரை வைத்துக் கொண்டு அவர்களும் மந்திரி சபையை அமைக்க முடியாது. 53 பேரை வைத்துள்ள இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியாகிய நாங்களும் மந்திரி சபையை அமைக்க முடியாது. ஆகவே, இரண்டு பேரும் வெளியே இருக்கிறோம். 144 பேருக்குமேல் கொண்டிருக்கக்கூடிய அந்த அமைப்பு மந்திரி சபையை நடத்தட்டும் என்ற நிலைமை இருந்தது. 52 பேரை வைத்துக் கொண்டு நடத்துவது என்பது சரியல்ல. அந்த நிலைமையிலேதான் இந்த மண்டல் கமிஷன் அறிவிப்பு போன்ற தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். நாட்டு மக்களுக்குச் சில வசதிகள் செய்யவும் சில புதிய சட்டங்களை உருவாக்கினார்கள். தேசிய முன்னணியினுடைய இப்படிப்பட்ட முன்னேற்றகரமான, ஜனநாயக முறையில் சில நடவடிக்கைகள் வரும்போது, அடுத்த தேர்தலில் என்னவாகும் என்ற பயம் ஏற்பட்டு அவர்கள் வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டில் அயோத்தியில் இருக்கும்படியான மசூதியை உடைத்து அந்த இடத்திலே இராமர் கோவிலைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய சரித்திரத்தில் அரசர்களாக இருந்தாலும் சரி, எந்தப் பாரம்பரியத்திலேயிருந்தாலும் சரி, மற்றவர்களது ஒரு கோவிலை இடித்துவிட்டு அந்த இடத்திலே இன்னுமொரு கோவிலைக் கட்டுவது என்று சண்டை நடந்திருப்பதாக நாம் பார்க்கவில்லை. ஒரு வேளை நமக்குத் தெரியாமல் இருக்கலாம். வேண்டுமானால் சொல்லட்டும் அவர்கள். எந்த முறையில் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் ? இதிலே இந்திய காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கை Most subtle activity——அவர்கள் என்ன செய்தார்கள் ? ராஜீவ் காந்திதான் அப்போது அமைச்சரவையில் இருந்தார்கள் ? சிலாநியாஸ் செய்தார்களே? 34 ஆயிரம் கிராமங்களில் இருந்து 34 ஆயிரம் செங்கற்களைக் கொண்டு சென்றார்கள். அப்படிக் கொண்டு போகும்போது பிரச்சாரம் நடந்தது. அதுவும் நாடு முழுவதும் அந்தப் பிரச்சாரத்தைப் பண்ணி அங்கே கொண்டு போனார்கள். கொண்டு போகிற வழியில் எல்லாம் வகுப்புக் கலவரம் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையிலே ஏற்படுத்தினார்கள்.

இதெல்லாம் நடந்த காலத்திலே, செங்கற்களைக் கொண்டு சென்ற காலத்திலே ராஜீவ் காந்தி அரசாங்கம் என்ன செய்தது? அயோத்தியில் போலீசை வரிசையாக நிறுத்தி, அவர்களை அழைத்துக்கொண்டுபோய், தகராறுக்கு உட்பட்ட இடம் சம்பந்தமாக அலகாபாத் கோர்ட்டில் 5 கேஸ்கள் முஸ்லீம் ஸ்தாபனங்களின் சார்பில் இருக்கின்றன என்றாலும் அவர்களுக்குச் சொந்தமான அந்த காம்ப்ளக்சில் தகராறு இருக்கிற நேரத்தில், கோர்ட்டில் வழக்கு இருக்கிற நேரத்தில் அவர்கள் அஸ்திவாரக்



1991 சனவரி 25] [திரு. கே. ரமணி]

கல்லை நடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தார்கள். அந்த வழிதானே, இன்றைக்கு அந்த இடத்திலே கோவிலைக் கட்ட வேண்டும், மசூதியை இடிக்க வேண்டும் என்ற நிலைக்குக் கொண்டு போனது ? இது காங்கிரஸ் கட்சி செய்த ஒரு சாகசம் அல்லவா ? அப்போது காங்கிரஸ் செய்தது பெருந்தவறு அல்லவா ? அதற்காக இன்றைக்கு அகழ்வாராய்ச்சி செய்து அப்போது முதலில் இருந்தது எது என்று கண்டுபிடித்து, அயோத்தி இராமரா, அல்லது அவர்களுடைய முஸ்லீம் கோவில் அஸ்திவாரங்களா என்று சில நிபுணர்களை வைத்துக் கண்டுபிடித்து அதிலே வரக்கூடிய தீர்ப்பை ஏற்கலாம் என்றாலும், அந்த ஆராய்ச்சியின் முடிவு நிச்சயமாக நியாயம் வழங்காது. அதற்குப் பதிலாக 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள், இந்த நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கும்போது, எந்தெந்தக் கோவில் எங்கெங்கே இருந்ததோ, எந்தெந்த ஆராதனைகள் எங்கெங்கே நடத்தப்பட்டனவோ, எந்தெந்த வழிபாடுகள் எங்கெங்கே நடந்ததோ அதுதான் தொடரவேண்டும். சுதந்திர இந்தியாவில் மற்றது வரக்கூடாது. மற்றது வந்தால் வெற்றி பெற முடியாது. அது முடியவில்லை என்றால் கோர்ட் கொடுக்கிற தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலையைத்தான் அன்றைக்கு அவர்கள் செய்தார்கள். இன்றைக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் ? காங்கிரஸ் கட்சி ஒரு செக்குலர் பார்ட்டி, சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டுள்ள கட்சி. அந்தக் கட்சி தங்களுடைய சுய இலாபத்திற்காகக் கொஞ்சம் இடையில் மதவாதிகளோடு சமரசம் செய்து கொள்கிறார்கள். பிரிவினைச் சக்திகளோடு அவர்கள் சமரசம் செய்து கொள்கிறார்கள்.

12–25 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட பிரச்சினையைத்தான் அவர்கள் கையில் எடுத்துக்கொண்டு காரியத்தைச் செய்தார்கள். அதனால் அங்கே அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. அதை எதிர்த்து அன்றைக்கு நின்றது முலாயம்சிங் அரசாங்கம். அதை நடத்துவதற்கு இலட்சக்கணக்கான பேர்களைத் திரட்டிக்கொண்டு போனால், நடக்கப்போவது கலகம். மதத்தின் பேரால், மதத் தலைவர்களை எல்லாம் திரட்டிக்கொண்டு போய் நடத்த இருந்த கலகத்தை எப்படிக் கட்டுப்படுத்தி சமாளித்தார் ? அந்தச் சமயத்திலே துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் சில உயிர்கள் போவது என்பது உண்மை. அதை எப்படித் தடுக்க முடியும் ? ஆனால் மிகப் பெரிய, ஒரு நாடு தழுவிய மதக் கலவரமாக இந்த நாட்டின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கக்கூடிய பரவிய மக்களின் கலவரமாக வராமல் அதை அன்றைக்குத் தடுத்தார்கள். இன்றைக்கு அந்த முலாயம்சிங் அரசாங்கத்திற்கு வேட்டு வைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதுதான் நிலைமை. அதனால்தான் சொல்கிறோம் அரசியலில் மதத்தைக் கலக்கக்கூடாது. அரசியலில் மதத்தைக் கலக்கினால் அப்புறம் அது செக்குலரிசம் அல்ல.

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

அரசியல் அதனுடைய வேலையைச் செய்யட்டும், மதம் அத
னுடைய வேலையைச் செய்யட்டும். அந்த வகையில் காரியங்
கள் செய்யட்டும். மக்களுக்குச் செய்வதை அத்தனை பேரும்
சேர்ந்து செய்வோம். தமிழ்நாட்டில் அப்படித்தானே செய்கி
றோம். சண்டையும், கலவரமும் இருக்கிறதா இங்கே? இல்லை
அவ்வளவுக்கு இணைந்து வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நட
வடிக்கையை அவர்கள் செய்யவில்லை. அதற்கு மாறாக இந்த
முறையைக் கையாண்டார்கள். இங்கே இன்றைக்கு அதைக்
கையாளுவதற்கு அண்ணா தி.மு.க. கட்சி, அந்தக் கட்சியின்
தோளில் ஏறி உட்கார்ந்துகொண்டு அவர்கள் காரியத்தைச் செய்து
கொண்டிருக்கிறார்கள். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்
டும். இவர்களுடன் அரசியல் கட்சி என்ற முறையில் எங்களுக்குத்
தனிப்பட்ட விரோதம் அல்ல. அந்த நிலைமைக்கு இடம்
கொடுக்கக்கூடாது. ஆகவே, இங்கேயும் அதைப் பிரயோகப்
படுத்தத்தான் 28ஆம் தேதி "ரோடு ரோகோ", (மணியடிக்கப்
பெற்றது). போராட்டம் நடத்த இருக்கிறார்கள். இந்தப்
போராட்டம் எல்லாம் எங்களுக்கும் தெரியும். இந்த ரோட்டை
மறிக்கிற போராட்டங்கள் என்று சொன்னால் நாங்களே ரயில்
ரோக்கோவில் ரயிலை மறித்திருக்கிறோம். எப்படி ? அரை
இலட்சம் பேர் ரோட்டில் உட்கார்ந்து, வண்டியைக் கொளுத்து
வது அல்ல, ஆளை மண்டையை உடைப்பது அல்ல, பலாத்காரம்
இல்லை, அந்த இடத்திலேயே அதிகாரிகளை வரவழைத்து, எங்க
ளுடைய பிரச்சினையைக் காது கொடுத்துக் கேளுங்கள், தீர்வு
காணுங்கள் என்று சொல்லத்தான் நடத்தினோம். அந்தப் பிரச்
சினை தீர்க்கப்படும், நாங்கள் அதற்கு உத்தரவாதம் தருகிறோம்,
என்று அதிகாரிகள் சொன்னார்கள். அப்படிப்பட்ட போராட்
டம் ஆகும் அந்த மறியல் போராட்டம்.

ஆனால், இன்றைக்கு இந்தப் போராட்டம் எப்படி வரப்
போகிறது ? அதனுடைய தலைவராக இருக்கிறவர், பொதுக்
காரியதரிசி ஜெயலலிதா அவர்கள் அறிக்கை வெளியிடுகிறார்.
எந்த பலாத்காரமும் நடக்கக்கூடாது என்று. இவ்வளவும்
செய்து வைத்துவிட்டு, பலாத்காரம் நடக்கக்கூடாது என்று சொல்
வது "எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை" என்கிறது தானே ?
உண்மையிலேயே பலாத்காரம். இல்லாமல் இருக்கவேண்டுமென்
றால் இந்தக் காரியத்தை செய்வார்களா ? ஒரு சாதாரண ஊர்
வலத்தில் கூட இந்த பலாத்காரம் நடக்குமே உங்களுக்கு ? அத
னால்தான் எங்கள் கட்சி சம்பந்தப்பட்ட வரையில் எங்களுடைய
இரண்டு தீர்மானங்களை எங்களுடைய பொதுச் செயலாளர்
திரு. நல்லசிவன் அவர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்
கள். இது திட்டவட்டமாக—அங்கே மத்தியில் இருக்கிற அரசாங்
கத்திற்கு இங்கே சட்டம்-ஒழுங்கு கெட்டால் மட்டும் போதாது,
கான்ஸ்டிடியூஷனல் பிரேக் டவுன் இருந்தால் அரசை நடத்த முடி
யாமல், சட்டசபையை நடத்த முடியாமல், திட்டங்களை நிறை
வேற்ற முடியாமல், கீழேயிருக்கிற கிராம அதிகாரி முதல் மேலே
இருக்கிற கவர்னர் வரைக்கும் இருக்கிற அரசாங்க ஸ்டேட்



1991 சனவரி 25] [திரு. கே. ரமணி]

மெஷினரி எதுவும் வேலை செய்யமுடியாமல், பிரேக் டவுன்
இல்லாமல் என்ன கலைப்பு? அது என்ன கலைப்பு? அப்படிச்
செய்ய முடியாது. சட்டம்-ஒழுங்கு என்று சொன்னால், அதற்கு
வேண்டிய நடவடிக்கை எடுப்போம்.

இங்கே அந்த மாதிரி நிலைமை இன்றைக்கு இல்லை. ஆகவே
இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்கிறார்கள். ஆகவே
நான் சொல்கிறேன், இட்டுக்கட்டி உண்டாக்கக்கூடியதே தவிர,
தமிழக மக்கள் முழுவதையும் திரட்டி—அதனால்தான் வி.பி. சிங்
அவர்களும், நமது முதலமைச்சர் அவர்களும் எல்லாரும் சேர்ந்து
நடத்திய பிரம்மாண்டமான கூட்டத்தில் இலட்சம் இலட்சமான
மக்கள் பார்த்தார்கள். இதே உத்திரபிரதேசத்தில் நடந்திருக்கும்
படியான பெரிய கிளர்ச்சி இயக்கத்தில், ஒரு கோடி, ஒன்
றரைக் கோடி மக்களைத் திரட்டியிருக்கிறார்கள். அது பழைய
உத்தரப்பிரதேசம் அல்ல. பழைய பீகார் அல்ல இன்றைக்கு.
அதுதான் அவர்களுக்கு, காங்கிரசுக்கு சங்கடம். 85 பேர் உத்
தரப்பிரதேச எம்.பி., 58 பேர் பீகார் எம்.பி. இரண்டும் சேர்ந்
தால் இந்தியாவை ஆளும். அப்படிப்பட்ட நிலை. இன்றைக்கு
அது முடியாது. தமிழ்நாடு முழுவதும் மக்கள் மத்தியில் இந்தக்
கொந்தளிப்பும், கிளர்ச்சியும் அந்தத் தலைவர்களைப் பார்க்க
இருந்தது. அந்த வி. பி. சிங்கைப் பார்த்து இருக்கமாட்டார்
கள் போல இருக்கிறது. எப்படி மதுரையிலும், மற்ற பல பகுதி
களிலும் பல்வேறு இடங்களிலும் ஜனங்கள் இலட்சம் இலட்சமாக
திரண்டு எப்படி அவர்களைப் பார்க்கிறார்கள், நமது தலைவர்
களும் அவர்களும் சேர்ந்து பார்க்கும்போது, அப்படியிருந்தது.
நியாயத்திற்காக அவர்கள் நின்றார்கள். கொள்கையை விட்டுக்
கொடுக்கவில்லை. நினைத்திருந்தால் பி.ஜே.பி.யைக் கொஞ்சம்
லேசாகச் சொல்லி, சரி உங்களையும் கொஞ்சம் கவனிக்கச்
சொல்கிறேன் என்று சொல்லியிருந்தால், அந்த சப்போர்ட்டை
வாபஸ் வாங்கியிருக்க மாட்டார்கள். அப்படியிருக்க இஷ்டம்
இல்லை. இடதுசாரிக் கட்சிகளும் தேசிய முன்னணியும் சேர்ந்து,
இந்தக் காரியத்தை மீண்டும், முஸ்லீம் மக்களுடைய மத உணர்
வைப் புண்படுத்த, அங்கே இருக்கும்படியான முஸ்லீம்களுடைய
ஸ்தாபனத்தை அவர்களுடைய அந்த அமைப்பை, அவர்களு
டைய கோயிலைப் பாழ்படுத்தும் எந்தக் காரியத்தையும் அனு
மதிக்க முடியாது என்றார்கள். அரசாங்கம் போனால்
போகட்டும் என்றுதானே நடவடிக்கையெடுத்தார்கள். அதுதான்
கொள்கை. அந்தக் கொள்கையைத்தான் அவர்கள் கவனத்தில்
வைத்துக்கொள்ள வேண்டியது. அப்படிப்பட்ட காரியங்களைச்
செய்தால் இந்த நிலைமை ஏற்படாது.

12-30 மணி

இன்னொரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.
அது அந்த ரகசியப் பேச்சு பற்றியதாகும். அந்த ரகசியம்
பற்றிச் சொன்னபோது எனக்கே வேதனையாக இருந்தது.
நம்முடைய அண்ணா தி.மு.க.வினுடைய தலைவராக இருந்த
எஸ். ஆர். இராதா என்ன சொன்னார் ? பிரதமர் அவர்கள்

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 25

நமது முதல்வரிடத்தில் சொல்லியிருக்கக்கூடிய ரகசியம் இலங்கையில் இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளுடைய தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்களுக்குத் தெரிந்துவிட்டதாம்.— இவர்களுக்கு எப்படித் தெரியும்? என்ன தெரிந்துவிட்டது? இன்றைய வரைக்கும் யாராவது சொல்லியிருக்கிறார்களா? பிரதமர் சந்திரசேகர் சொல்லியிருக்கிறாரா? இல்லை, சிதம்பரம், மற்றவர்கள் பிரச்சாரம் செய்கிறார்களே; அவர்கள் சொல்லியிருக்கிறார்களா? போகட்டும், அண்ணா தி.மு.க.-வினுடைய தலைவர்கள் யாராவது சொல்லியிருக்கிறார்களா? என்ன ரகசியம், சொல்லுங்கள். ஆயிரம் பேருக்குச் சொன்ன பிறகு தான் அது ரகசியமா? இதைத்தான் இடதுசாரிக் கட்சிகளும், மற்ற ஜனநாயகக் கட்சிகளும், வாஜ்பாய் உள்பட, திராவிட முன்னேற்றக் கழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்பட அனைவரும் சந்திரசேகரை டெல்லியில் நேரில் சந்தித்துக் கேட்டார்கள். எங்களுடைய கட்சித் தலைவரும் சேர்ந்துதான். என்ன ரகசியம் இங்கேயிருக்கிற முதலமைச்சர் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டார், நீங்கள் என்ன ரகசியம் சொன்னீர்கள் என்று சொல்லுங்கள். வெளியே விட்டு ஊரே தெரிந்தபிறகு எங்களுக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அவருக்கு என்ன சொல்வதற்கு இருக்கிறது? ஒன்றுமில்லை. இவர்களே கேட்டார்கள். அன்றைக்கு இலங்கையிலிருந்து புலிகளோ, அவர்களைச் சேர்ந்தவர்களோ இங்கே தாண்டி வருவதென்றால், தமிழ்நாட்டில் வந்தால் அவர்களை விடமாட்டோம், அவர்களைக் கைது செய்வோம், அவர்களை ஜெயிலில் வைப்போம், நடவடிக்கையெடுப்போம். இங்கே வரக்கூடாது என்ற விஷயத்தை அவருக்கே தெரிவிக்க வேண்டுமென்று சந்திரசேகர் நம்முடைய முதலமைச்சருக்கும், மற்றவர்களுக்கும், இந்த அரசாங்கத்துக்கும் தெரிவித்து இருக்கிறார்கள். இது என்ன ரகசியமா? இப்போது அவர்களையெல்லாம் முகாம்களில் வைக்கவில்லையா? அது ஜெயில் அல்ல. இதை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதைத்தானே நீங்கள் சொன்னீர்கள்? இதைக்கூட அவர்களுக்குச் சொல்லாமல் யாருக்குச் சொல்வது? அவர்களுக்குச் சொல்லச் சொல்லித்தானே சொல்லியிருக்கிறது? அதைத்தான் சொன்னோம். மறுபடியும் என்ன ரகசியம்? என்ன ரகசியம் என்றாலும் அவர்கள் வெளியே சொல்ல வேண்டும். வெளியே சொல்லவில்லை என்றால் நான் முதலில் சொன்னமாதிரிதான் இருக்கும். இது அத்தனையும் இட்டுக்கட்டிச் சொல்லக்கூடிய, இல்லாத விஷயங்களை வேண்டுமென்றே இந்த அரசாங்கத்துக்கு எதிராகச் சொல்லப்படுகிற ஏற்பாடு. இந்த ஏற்பாடு நடக்காது. தமிழ் மக்கள் நிச்சயமாக இதை அனுமதிக்க மாட்டார்கள். இந்திய நாட்டில் இருப்பவர்கள் யாரும் இதை அனுமதிக்க மாட்டார்கள். இன்றைக்கு சட்டம்--ஒழுங்கு நாடு முழுவதும் எப்படி இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டும். பல, மாகாணங்களில் எப்படி இருக்கிறது என்று நமக்கு தெரியும். தமிழ்நாட்டில், கேரளத்தில், மேற்கு



1991 சனவரி 25] [திரு. கே. ரமணி]

வங்கத்தில் இருக்கிற சட்டம்—ஒழுங்கு மாதிரி மற்ற இடங்களில் இன்றைக்கு பராமரிக்கப்பட்டால் அதுவே ஒரு பெரிய நன்மையாக இருக்கும். உலகத்தில் வெளியே சொல்லமுடியாத ரகசியத்தை யாரும் சொன்னதில்லை. அவருக்கு வந்திருக்கிற நிர்ப்பந்தம், இங்கேயிருந்து கொடுக்கிற மகஜர், ராஜீவ் காந்தியிடமிருந்து வரக்கூடிய பிரஷர், அதைத் தாங்கமுடியாமல், அவர் பாவம், நம்முடைய புதிய பிரதம மந்திரி அங்கே இருப்பவர். அதை எதிர்த்து நிற்கமுடியாமல் ஏதாவது சொல்லிச் சமாளிப்பதற்குச் செய்யக்கூடிய நடவடிக்கை என்றுதான் எங்களுக்குப் புரிகிறது. இப்படிப்பட்ட தில்லுமுல்லு, திருகுதாளம், பித்தலாட்டம், தகிடுதத்த வித்தைகளைக் காட்டி இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது சாத்தியமல்ல. தமிழ்நாட்டு மக்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள். இந்திய மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். உழைப்பாளிகள் அனுமதிக்கமாட்டார்கள். படிப்பாளி மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு, அவர்கள் இப்படிப்பட்ட போராட்டத்தை நடத்தாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவைக்கு வரட்டும். இங்கே வந்து பேசட்டும். நாம் வேலையில்லாத் திண்டாட்டம், மற்ற எல்லாவற்றையும் பேசுவோம். அவர்கள் தங்கள் கொள்கையைச் சொல்லட்டும். அப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காகக் காங்கிரஸ் கட்சி இப்படிப்பட்ட நிலைமைக்குப் போனால், இது எப்படி இருக்குமென்றால் — பழமொழி கிராமத்தில் சொல்வார்கள். அதைச் சொல்வது நன்றாக இருக்குமா என்று தெரியவில்லை. வயிற்றுக்கடுப்பு பிடித்தவனைத் தோளில் தூக்கினால் என்ன கதியாகும் என்பதை உணர்ந்து அந்தக் கதிக்கு ஆளாக வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையில் ஆற்றியுள்ள கருத்துக்களின் தொடர்பாக என்னுடைய கருத்துக்களையும் எடுத்து வைக்கின்ற வாய்ப்பினை இப்போது நான் பெற்றிருக்கிறேன்.

*12-35 மணி*

முதலில் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இந்த அவையில் கடந்த 2, 3 நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகள், ஜனநாயகத்திற்கே ஒரு தலைகுனிவை ஏற்படுத்துகின்ற அளவிற்கு அமைந்துள்ளன என்பதை நாட்டிலே உள்ள நல்லவர்களும், நல்லறிவாளர்களும் மிகத் தெளிவாகவே உணர்வார்கள்.

நம்முடைய நண்பர் திரு. பூவராகன் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டதைப் போல, உரையாற்றிய கவர்னர் பெருமான் அவர்கள் இந்த அவையில் சந்தித்த நிலை எவ்வாறு

இருந்தது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களிடத்திலே சென்று முறையீடுகளை, இந்த அவையைப் பற்றி அல்லது அவையை நடத்திச் செல்கிற பொறுப்புமிக்க தங்களுடைய தீர்ப்புகளைப் பற்றி, நடவடிக்கைகளைப்பற்றி, புகார்களைத் தருகின்றவர்கள் இந்த அவையிலே அவர்கள் யாருக்காக வக்காலத்து வாங்குகிறார்களோ, அவர்கள், அதே கவர்னர் அவர்கள் இங்கே வந்தபோது எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை ஏனோ எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

பொதுவாக ஆளுநர் உரை நிகழும்போது, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், விரும்பினால் ஆளும் கட்சியின் மீது சில குறைகளைச் சொல்லி, இதன் காரணமாக இந்த ஆளும் கட்சியின் சார்பாக ஆற்றப்படுகின்ற கவர்னர் உரையை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று ஒரு 4, 5 வாக்கியங்களில், தங்களுடைய கருத்துக்களை எழுதிப் படித்தோ, அல்லது சொல்லிவிட்டோ வெளிநடப்புச் செய்வது இந்த அவையிலே வாடிக்கையாக இருந்து இருக்கிறது. விரும்புகின்ற எதிர்க்கட்சிகள் அப்படிச் செய்வார்கள். கலந்து கொள்ளலாம் என்று எண்ணுகிற எதிர்க்கட்சிகள் கலந்துகொள்வார்கள். இதுதான் இந்த அவையில் இதற்கு முன்பு நடைபெற்ற நடைமுறைகள்.

ஆனால் 18-ஆம் தேதி அன்று ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த வந்தபோது, அவ்வாறு தங்களுடைய கருத்துக்களை நீண்டநேரம் படிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டு நீண்டநேரம் அந்தக் கருத்துக்களை எல்லாம் அவர்கள் படித்து, அவர்களுடைய மனத் திருப்திக்கு ஏற்றவாறு என்னையும், இந்த அரசையும் முறையே, ' தேசத் துரோகி ' என்றும், ' தேசத் துரோக அரசு ' என்றும் குறிப்பிட்டதோடு நிறைவு அடையாமல், உரையைப் படிக்க முனைந்த ஆளுநரைப் பார்த்து, '' படிக்காதே, படிக்காதே '' என்று முழக்கமும் இட்டார்கள். முழக்கமிடுவதை ஆரம்பிப்பதற்கு என்றே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறார். அவர் அந்த முழக்கங்களை, ஒரு தாளிலே ஏற்கனவே திட்டமிட்டு, எழுதி வைக்கப்பட்ட முழக்கங்களை இங்கே படித்து, மற்றவர்கள் எல்லாம் அதைத் திருப்பிச் சொன்னார்கள். சொல்லும்போது, பொதுவாக தமிழில் மரியாதைக்குரிய மாண்புமிகுந்த சொற்கள் எவ்வளவோ இருக்கின்றன. அப்படிப்பட்ட சொற்கள் பயன்படுத்தப்படாமல் அன்றைக்கு மிக மரியாதைக் குறைவான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு அரசைப் பார்த்து, '' அரசே, இவர்களை எல்லாம் விடுதலை செய் '' என்று சொல்லும்போது பயன்படுத்துகிற சொல்லுக்கும், அந்த அரசினுடைய முதலமைச்சரைப் பார்த்துப் பயன்படுத்துகிற சொல்லுக்கும் சற்று வேறுபாடு உண்டு. '' விடுதலை செய்யுங்கள் '' என்று சொல்வதுதான் தமிழில் மரபு. 'அரசே' என்று சொல்லும்போது '' விடுதலை செய் '' என்று சொல்வது மரபு. ஆனால் அன்றைய தினம் ஆளுநரைப் பார்த்து,



அ.தி.மு.க. உறுப்பினர்கள் கொஞ்சம் மரியாதையைச் சேர்த்துக் கொண்டு '' படிக்காதீர்கள் '' என்று சொல்லியிருக்கலாம். '' படிக்காதீர்கள் '' என்றுகூடச் சொல்லாமல், '' படிக்காதே, படிக்காதே '' என்று சொன்னார்கள். இதை ஆங்கிலத்திலே சொன்னால் அப்படிப்பட்ட சொற்கள் பாகுபடுத்திப் பார்க்க முடியாதவைகளாக அமைந்துவிட்ட காரணத்தால், 'do not read ' அல்லது ' don't read ' என்றுதான் சொல்ல முடியும். ஆங்கிலேயர் கூட, **'please dont read'** என்றுதான் சொல்வார்கள். அப்படி ஒரு மரபைப் பின்பற்றக் கூடியவர்கள்.

12-40 மணி

இங்கே அவ்வளவு மரியாதை தராவிட்டாலும் கூட, மரியாதைக் குறைவாக '' படிக்காதே, படிக்காதே '' என்று அவர் முன்னால், அவர் ஆற்றவந்த உரைப் புத்தகத்தை நீட்டி, நீட்டி முழங்கி விட்டுச் சென்றார்கள். ஆளுநர் அவர்கள் அந்தச் செயலை உன்னிப்பாகக் கவனித்துவிட்டுத்தான், தன்னுடைய கடமையை இங்கே ஆற்றிவிட்டுச் சென்றார்கள். அதற்குப் பிறகு இந்த அவையில் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களும், ஜனநாயகத்தினுடைய அடையாளச் சின்னமாக இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியவராக அமர்ந்திருக்கின்ற பேரவைத் தலைவராகிய நீங்களே தாக்கப்பட்ட நிகழ்ச்சியும் இங்கே பொறுப்பிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களுடைய உள்ளத்தையும் உலுக்கி, தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளக்கட்சி, முஸ்லீம் லீக் கட்சி மற்றும் நம்முடைய நண்பர் பாண்டியன் போன்றவர்கள், பார்வர்டு பிளாக் கட்சியைச் சார்ந்தவர்கள், இவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, அன்றைக்கு மிகுந்த உணர்ச்சியோடு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தி 'இது கண்டிக்கத் தக்கது' என்றே அன்றைக்குக் குறிப்பிட்டார். இந்த அவையிலே உள்ள தலைவர்களும் சரி, மற்ற உறுப்பினர்களும் சரி, மிகக் கடுமையான தண்டனைதான் இத்தகைய செயலிலே அன்றைக்கு ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள், வழங்கப்படவேண்டுமென்று எண்ணினார்கள். அப்பொழுதிருந்த அந்தச் சூழலில் அப்படித்தான் எண்ணமுடியும். பிறகு நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில், நமக்கே ஒரு பரிவு ஏற்பட்டு, கொஞ்சம் தளர்த்தலாமா என்றெல்லாம் எண்ணுவது உண்டு. ஆனால் அன்றைய தினம் அத்தனை பேரும் இதைவிடக் கடுமையான தண்டனை வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால்

தாங்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு—இந்தத் தொடருக்கும், அடுத்த வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெறுகின்ற அந்தக் கூட்டத் தொடருக்கும்—வரக் கூடாது என்ற தீர்ப்பே வழங்கினீர்கள். இந்த இரண்டு தொடர் என்று சொல்கிற நேரத்தில், இரண்டு பெரிய தொடர் என்று எண்ணத் தோன்றும் மற்றவர்களுக்கு. ஆனால் தாங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு எஞ்சியிருக்கிற நாட்கள் இரண்டே இரண்டு நாட்கள்தான். இந்த கவர்னர் உரை விவாதத் தொடரில் எஞ்சியிருப்பது இரண்டே இரண்டு நாட்கள்தான், நேற்றைய தினமும், இன்றைய தினமும்தான். அதற்குப் பிறகு இடையிலே, 7, 8 நாட்களுக்கு விடுமுறை வந்து, அதன் பின்னர் தான் நேற்று நீங்கள் அறிவித்ததற்கொப்ப பிப்ரவரி 2 ஆம் தேதியன்று வரவு-செலவுத் திட்டம் இங்கே வைக்கப்பட்ட பிறகு தான் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற இருக்கின்றன. இதுபோன்ற அமளிகளின் மூலமாக நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியை நாம் ஆற்றத் தவறிவிடுகிறோம் என்பதனை அ.தி.மு.க.வினர் உணரவில்லை, காங்கிரஸ் கட்சியினர் உணரவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். நேற்றைய தினம் மாலையிலும் சரி, இன்று காலையிலும் சரி, உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய கருத்துக்கள், அவர்கள் எடுத்து வைத்த வாதங்கள், இந்த அரசின் மீது சொல்லப்பட்ட குறைபாடுகள், அவைகள் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டுமென்று அவர்கள் வகுத்தளித்த ஆலோசனைகள், அவைகளைக் கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன். ஒரு அரசு,

‘ இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் ’

என்ற குறளை உணர்ந்த அரசாக இருக்கவேண்டுமென்று நான் மிகத் தெளிவாக உணர்ந்தவன். இருக்கின்ற குற்றங்களை எடுத்துச் சொல்லி, குறைகளைச் சுட்டிக்காட்டி, இவைகள் திருத்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற எதிர்க்கட்சிகளைப் பெற்றிருந்தால்தான் ஆளும் கட்சி திறமையோடு செயல்பட முடியும். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கு ஒரு ஆணவம் ஏற்பட்டு விடும். நாம் எதைச் செய்தாலும் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற ஒரு துணிவு ஏற்பட்டுவிடும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியும், அதற்கு அடுத்துள்ள கட்சியும் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றிடத் தவறியது மாத்திரம் அல்ல. மற்றவர்களையும் இந்த அவையிலே அத்தகைய பணிகளை ஆற்ற விடாமல் தடுக்கிற வகையில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அமளி நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு என்ன நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது என்றால், அதையும் நான் சொல்ல வேண்டும்.



என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் மறைந்து, அதற்குப் பிறகு அவர்களுடைய கட்சிக்குள்ளே ஏற்பட்ட உட்பூசலின் காரணமாக பிளவு தோன்றி, யார் அன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்பது என்று அவர்களுடைய கட்சிக்குள்ளேயே கேள்வி வெடித்து, அதன் காரணமாக இந்த அவையிலே ஒரு பெரிய அமளி தோன்றி, அந்த அமளியை அடிப்படையாக வைத்து அன்றைய தினம் ஆட்சி கலைக்கப்பட்டது அல்லவா, அந்த நம்பிக்கைதான் அவர்களுக்கு. அதை ஒரு முன் உதாரணமாகக் கொண்டு சட்டசபைக்குள்ளே இப்படிப்பட்ட கலவரங்களைச் செய்தால், எப்படி திருமதி ஜானகி அம்மையாருடைய ஆட்சி, அதைக் காரணமாக வைத்துக் கலைக்கப்பட்டதோ, அதைப் போல இந்த ஆட்சியும் கலைக்கப்படும் என்று நம்பினார்கள். அதை எனது நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் அன்றைக்குப் பேசும்போதுகூடக் குறிப்பிட்டார்கள்.

12-45 மணி

நாங்கள் பொறுப்பு ஏற்ற பிறகு, 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் இந்த அவையில் நடைபெற்ற சம்பவங்களை விளக்கினார்கள். நான் மீண்டும் அவைகளை விளக்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை. நீங்கள் தயவுசெய்து அந்த நாளைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு இரண்டு நாளைக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை ஒட்டி அன்றைக்கு அந்த அமளி இங்கே தோற்றுவிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி என்ன ? ஒரு அரசாங்க அலுவலர், சில பேரிடத்திலே பணத்தை வாங்கி ஏமாற்றிவிட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டு, அந்த அலுவலருடைய வீடு போலீசாரால் சோதனை இடப்பட்டபோது அங்கு சிக்கிய பொருள்களிலே ஒன்று, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திருமதி ஜெயலலிதா அவர்களுடைய பதவி விலகல் கடிதம். அது கிடைத்தது. அந்தக் கடிதத்தைப் போலீசார் கைப்பற்றினார்கள். அந்தக் கடிதம் ஒரிஜினல் மாத்திரம் அல்ல. அதிலிருந்து காப்பிகள் பல எடுக்கப்பட்டிருந்தன. எனவே அவர்கள் அதைக் கைப்பற்றி அந்தப் பிரதிகள் போலீசாருடைய கையிலே இருக்கும்போது அதன் ஒரிஜினல் யார் வாயிலாகவோ எனக்குத் தெரியாது. அதற்குப் பின்னணி என்னவோ அதுவும் எனக்குத் தெரியாது. அது அவைத் தலைவராகிய தங்களுக்குத் தரப்பட்டது. அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு தாங்களோ அல்லது ஆளும் கட்சியாக இருக்கிற நாங்களோ, ‘‘எதிர்க்கட்சித் தலைவர் ராஜினாமா செய்துவிட்டார். ஆகவே அவர் பதவி விலகத்தான் வேண்டும்’’ என்று யாரும் அன்றைக்கு அவசரப்படவில்லை.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. மறுநாள் தங்களைச் சந்திப்பதற்காக நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், கே.கே. எஸ்.எஸ்.ஆர். அவர்களும் தங்களுடைய அறைக்கு வந்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். மேலே நான்

முதலமைச்சருடைய அறையிலே அப்போது இருந்தேன். நண்பர் வீராசாமி அவர்கள் இந்தத் தகவலை என்னிடத்திலே சொன்னார். திருநாவுக்கரசு அவர்களும், கே.கே.எஸ்.எஸ். ஆர். அவர்களும் பேரவைத் தலைவருடைய அறைக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். நான் வீராசாமி அவர்களிடத்திலே சொல்லி, இவர்களிடத்திலே சொல்லச் சொன்னேன். ''இதிலே அவைத் தலைவரோ அல்லது இந்த ஆட்சியினரோ எத்தகைய அவசரமும் காட்டப்போவதில்லை, இந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் ராஜினாமா செய்துவிட்டார் என்று அவரைப் பதவி விலக்கப் போவதில்லை. தீர விசாரித்த பிறகு அதை, ராஜினாமா செய்வதாகச் சொல்லப்படுகிற ஜெயலலிதா அவர்கள் ஒப்புக்கொண்டால் ஒழிய, அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது'' என்று சொல்லப்பட்டது. தாங்களும் இதே கருத்தைத்தான் அவர்களுக்குச் சொல்லி அனுப்பி, தாங்கள் ஜெயலலிதா அவர்களுக்குக் கடிதம் எழுதி, அவர், ''நான் இப்போது ராஜினாமா செய்யவில்லை. அந்தக் கடிதம் தங்களுக்குத் தரப்பட்டிருந்தாலும்கூட அதைத் தாங்கள் ஏற்க வேண்டாம்'' என்று சொன்ன பிறகு, அதை ஏற்கவில்லை. அந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று அன்றைக்கு யாரும் கருதவில்லை. இப்படிப்பட்ட ஒரு கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைப் பதவியிலிருந்து விலக்கி இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாததற்காக ஒரு அமளி. ஏன் பயன்படுத்தவில்லை என்பதைப் போல் இந்த அவையிலே ஒரு அமளி நடத்தப்பட்டது. அதுவும் இது போன்ற பிரச்சினைகளை அவையிலே எழுப்ப வேண்டும் என்றால் அதற்கு ஒரு நியதி இருக்கிறது.

12-50 மணி

அந்த நியதியோ, முறையோ எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை. வரவு-செலவுத் திட்டம் படிக்கின்ற நாளில் குறுக்கிட்டுக் கேள்விகளைக் கேட்பதோ, வேறு பிரச்சினைகளைச் சொல்வதோ இயலாது. கவர்னர் அவர்கள், இந்த அவைக்கு என்ன நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்று நிகழ்ச்சி நிரலை அனுப்பி வைக்கிறார்களோ, அதன்படிதான் இங்கே நிகழ்ச்சி நடைபெற வேண்டும். அப்படி நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கியிருந்த பொழுது, அதற்கு மாறாக, முற்றிலும் விதிகளுக்கு முரணாக அன்றைக்கு ஒரு பெரிய அமளியை ஏற்படுத்தினார்கள். அதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ, வேறு வழி இல்லாமலோ, அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் துணை போக நேரிட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள்—ஏன் நம்முடைய திருநாவுக்கரசு கூட அன்றைக்கு எதிர்க்கட்சியிலே துணைத் தலைவராக அமர்ந்து பல முறை வலியுறுத்தினார்கள். இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் படம்





எடுக்கப்பட்டிருக்கின்றன. டி. வி. எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போட்டுக்காட்ட வேண்டும், போட்டுக்காட்ட வேண்டுமென்று கேட்டார்கள். தாங்களோ, இந்த அவையின் மரபின்படி அதுபோன்ற கலவரச் சூழ்நிலைகளை டி.வி. எடுத்து இருந்தாலும் கூட அதைப் போட்டுக்காட்டுவது சரியல்ல என்று அந்தக் கருத்தை வலியுறுத்திக் கொண்டு இருந்தீர்கள். ஆனால் அவர்கள் ஏதோ ஒரு பெரிய நடந்த கொடுமையை மறைப்பது போல எண்ணிக் கொண்டு அதைக் காட்டித் தான் தீர வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு நான் இதே அவையில் தங்களை மெத்த மரியாதையோடு கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு தாங்கள் அதற்குச் சம்மதித்து டி.வி. நிலையத்தார்கள் எடுத்து இருக்கின்ற படத்தைப் போட்டுக் காட்டலாம் என்று அனுமதி கொடுத்தீர்கள். ஆனால் அதைப் போட்டுப் பார்க்க யாரும் முன்வரவில்லை. காரணம், அதைக் காட்ட முடியாது என்று சொன்ன வரையிலேதான் அவர்களுடைய கற்பனைகள் உயிரோடு வாழ்ந்தன. அதைக் காட்டலாம் என்கின்ற அனுமதியை நான் தங்களிடம் பெற்று, தாங்கள் அனுமதி அளித்த பிறகு அந்தக் கற்பனைகள் அகால மரணம் அடைந்தன. இதுதான் நடந்த உண்மை. நான் அதைப்பற்றி மேலும் விளக்கங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. இப்படி இந்த ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் இன்னும் 5 ஆண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டும், மக்களுடைய தீர்ப்பைப் பெற்று ஆட்சிக்கு வர, என்ற அங்கலாய்ப்பின் காரணமாக, ஆதங்கத்தின் காரணமாக உடனடியாக இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும், ஜானகி அம்மையாருடைய ஆட்சியைக் கலைத்தது போல என்று எண்ணிச் செயல்பட்டார்கள்.

நேற்றைக்கு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தியுங்கள்; அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களுக்கும், அ.இ.அ.தி.மு.க.விற்கும் அறிவுரை வழங்கினார். அந்த அறிவுரையை அவர்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்று அவர் சொன்னார். அவர்கள் சிந்திப்பதில்லை. அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கவில்லை அவர்கள். உடனடியாகக் கலைக்க வேண்டும்; தாங்கள் வந்து இங்கே நியமிக்கப்பட்ட முதலமைச்சர்களாக ஆக வேண்டும் என்று எண்ணும்போது அடுத்த தேர்தலைப் பற்றி அவர்கள் ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பதாக இருந்தால் பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்னும் 1994 ஆம் ஆண்டு வரையில் அல்லவா காத்திருக்க வேண்டும்? எனவேதான், நிச்சயமாக, லத்தீப் அவர்களே, நீங்கள் சொன்ன அந்த அறிவுரையை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதவர்கள். ஆனால் அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கிறார்களா என்றால் இல்லை. அடுத்த முதலமைச்சராகத் தாங்கள்

வர வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ முதலமைச்சராக வருவது என்பது, அந்த இடத்திலே இருந்து மாறி இந்த இடத்திலே உட்கார்ந்து விடுவது என்பது அல்ல. ஜனநாயகத்திலே அதற்கென சில கடமைகள் இருக்கின்றன. முறைகள் இருக்கின்றன. அதற்கென பல வழிவகைகளும் இருக்கின்றன. மக்கள் பார்த்து அளிக்க வேண்டிய தீர்ப்புக்குப் பிறகு தான் ஒரு ஆட்சி, பொறுப்பை ஏற்க முடியும். ஆனால் இவைகளை எல்லாம் துச்சமென மதித்துவிட்டு இந்த அரசைக் கலைப்பது பற்றியே, அதற்காக இல்லாத காரணங்களை எல்லாம் அவர்கள் கற்பித்துக் கொண்டு செயல்படுகிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் என்னுடைய உரையின் இறுதியில் நான் மேலும் சில விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றைக்கே காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு குற்றத்தை என் மீது சுமத்தி அக்னிப் பிரவேசம் செய்ய கருணாநிதி—முதலமைச்சர் தயாரா என்று கேட்டார். அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். 25-ந் தேதி அன்றைக்கு அக்னிப் பிரவேசம் செய்கிறேன் என நான் சொன்னேன். அதைப்போல காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்—இரண்டு தலைவர்களில் யார் அவர்கள் தலைவர் என்று எனக்கு தெரியாது; தமிழ்நாட்டிலே உள்ள தலைவர்கள்; சட்டசபையில் உள்ள தலைவரா அல்லது வெளியிலே உள்ள தலைவரா அவர்களுக்குத் தலைவர் என்று எனக்குத் தெரியாது—அவர் கூடச் சொல்லியிருக்கிறார், அப்படியானால், கருணாநிதி இன்றைக்கு அக்னிப் பிரவேசம் வந்தால், தீ மிதித் திருவிழா நடத்தப் போகிறாரா? சட்டசபையில் தீயைப் போட்டு அதிலே நடக்கப் போகிறாரா அல்லது சபாநாயகருடைய மேடையிலே கற்பூரத்தை வைத்து அணைக்கப் போகிறாரா என்றெல்லாம் அவர் கேட்டிருக்கிறார். இதெல்லாம் பழைய கிராமத்து முறைகள். அக்னிப் பிரவேசம் என்பது—குமரி அனந்தன் இங்கேயிருந்தால் சொல்லியிருப்பேன். அவர் இலக்கியச் செல்வர். ஏனென்றால் இலக்கிய ரீதியாக சில வார்த்தைகள் உண்டு. அக்னிப் பிரவேசம் என்றால் இங்கு ஒரு பெரிய ஓமகுண்டம் வளர்த்து, அதிலே அக்னியை வளர்த்து அதிலே நான் குதிப்பது என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள், இலக்கிய வாடை இல்லாத காரணத்தால். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தச் சொல்லுக்கு உண்மையான பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகின்றார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் நான் பிறகு சொல்கிறேன்.

**12-55 மணி**

முக்கியமாக இந்தக் கூட்டத் தொடரில் நம்மை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை, நம்மை மாத்திரமல்ல; ம்முடைய மாநிலத்தை மாத்திரமல்ல; நம்முடைய நாட்டை



மாத்திரமல்ல; உலகத்திலே பல பகுதிகளைப் பாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை வளைகுடாப் போர். இந்த வளைகுடாப் போரின் காரணமாக ஏற்படக் கூடிய விளைவுகள், அவைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். மற்றும் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றி சில குறிப்புகளை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகிறேன். எத்தகைய நடவடிக்கைகளை—இந்தப் போரின் காரணமாக நம்முடைய நாடும், அதன் தொடர்பாக நம்முடைய மாநில மக்களும் பாதிக்கப்படும்போது, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை—எடுக்கலாம் என்கின்ற குறிப்புகளை உங்கள் முன்னால் வைப்பது நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

வளைகுடாப் போர் வருவதற்கு 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்பே பெட்ரோலியப் பொருட்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென்ற முயற்சியிலே தமிழ்நாடு அரசு ஈடுபட்டது. அந்தப் பொருள்கள் பதுக்கப்படுவதைத் தடுக்கவும், கள்ளச் சந்தையிலே விற்க முயற்சிப்பதைத் தடுக்கவும் 1955ல் நிறைவேற்றப்பட்ட Essential Commodities Act—Central Act 10/1955—அதன்கீழ் 'Motor Spirit and High Speed Diesel Prevention of malpractices in Supply and Distribution Order' என்ற விதிகள் 30—10—1990-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. பேருந்துகளுக்கு டீசல் விநியோகத்தில் 10 சதவீதம் குறைக்க, பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமை முதலிலே ஏற்பட்டது. மத்திய அரசு, பேருந்துகளுக்கு 10 சதவீதம் டீசல் உபயோகத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, பேருந்துகளின் எண்ணிக்கையைப் பரவலாகக் குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும், அதன் காரணமாக மக்களிடையே பிரச்சினைகள் எழுந்த காரணத்தாலும், நம்முடைய பல்வேறு கட்சித் தலைவர்கள், நண்பர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள்—இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன குறைபாடுகளை மனதார அறிவதாலும் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அதற்கு முன்னால் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர், அதிகாரிகளுடனும், பல்வேறு மக்கள் பிரதிநிதிகளுடனும் பேருந்துகளைப் பயன்படுத்துபவர்களுடைய பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி, ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இருந்தாலும், விவசாயத்திற்கான டீசல் பம்புசெட்டுகள், டிராக்டர்கள், மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான விசைப் படகுகள் ஆகியவற்றிற்கு டீசல் குறையாமல் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வளைகுடாப் போர் ஆரம்பமானவுடன்

பிரதமர் அவர்கள் 17-ந்தேதி டெல்லியிலே முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். 18-ந் தேதி இங்கே ஆளுநர் உரை இருந்த காரணத்தால் நான் செல்ல இயலவில்லை. டெல்லியிலே நீர்ப்பாசனத் துறை மாநாட்டிற்குச் சென்றிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்தில் தலைமைச் செயலாளரும், உணவுத் துறைச் செயலாளரும் மாநில அரசின் சார்பில் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலும் நிலைமைகள் விரிவாக டெல்லியிலே ஆராயப்பட்டிருக்கின்றன. அது குறித்த விவரத்தை மத்திய அரசு, மாநில அரசுக்கு உடனடியாகத் தெரிவிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரையில் அதுகுறித்த விவரங்கள் எதுவும் மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை; விரைவிலே வந்து சேரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதைத் தொடர்ந்து 22—1—1991 அன்று நம்முடைய மாநில அரசு உள்துறையின் சார்பில் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் வளைகுடாப் போரை ஒட்டி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இன்றியமையாத பொருள்களான பால், உணவுப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், முட்டைகள், எல்.பி.ஜி., சமையல் எண்ணெய், சர்க்கரை, பருப்பு வகைகள் ஆகியவைகளை ஏற்றிச் செல்லக் கூடிய வாகனங்களுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய பம்புசெட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும்...

13-00 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குத் தேவையான பம்புசெட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், மீன் பிடிக்கும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், இந்த டீசல் அவைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் முறைப்படி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலுக்கு—Indus ial use, பயணிகளுக்குத் தேவையான பேருந்துகளுக்கு பயணிகளுக்கான சிறு மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான டீசல் உபயோகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு உச்சவரம்பு வைக்காமல் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டு



என்று அந்த வாகனங்களுக்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்த லாரிகளுடைய எண்ணிக்கை 87 ஆயிரம். இதில் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய லாரிகள் சுமார் 20 ஆயிரம். இந்த 20 ஆயிரம் லாரிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் டீசல் கிடைக்க வழிவகை செய்யப்படும். விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய டிராக்டர்கள் சுமார் 36 ஆயிரம். பொருட்களை ஏற்றிச்செல்லும் வேன்கள் போன்றவை சுமார் 8 ஆயிரம். பயணம் செய்யப் பயன்படும் பேருந்துகள் சுமார் 20 ஆயிரம் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவைகளுக்கும் ஒரு சீரான வினியோக முறையை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. டூரிஸ்டு கார்கள் 14 ஆயிரம் இருக்கின்றன. பயணம் செய்யப் பயன்படும் வேன்கள் 7 ஆயிரம் இருக்கின்றன. இவைகளுக்கு டீசல் உபயோகத்திற்கு உச்சவரம்பு கொண்டுவரப்படும். நான் முதலில் சொன்ன லாரிகள், டிராக்டர்கள், பேருந்துகள் இவைகளுக்கெல்லாம் டீசல் சீரான வினியோகம். இன்றைக்கு டூரிஸ்டு கார்களுக்கும், பயணம் செய்யப் பயன்படும் வேன்களுக்கும் உச்சவரம்பு, டீசலைப் பயன்படுத்த உச்சவரம்பு. தனியார் பயன்படுத்தும் கார்கள், ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங்களுக்கு—போர் தொடருமானால் என எதிர்பார்க்கப்பட்டு—வரையறுக்கப்பட்ட அளவுக்கு மட்டுமே டீசல், பெட்ரோல் பயன்படுத்த வழிவகைகள் செய்யப்படும். அதே நேரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க சில யோசனைகளும் அந்தக் கூட்டத்தில் செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன :—

1. அரசு விடுமுறை நாட்களில் அரசாங்க வாகனங்கள் உபயோகப்படுவதைத் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் வாரத்தில் 2 நாட்கள், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் முடிந்த வரை வாகனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

3. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் உபயோகிக்கும் வாகனங்களுக்கு மாதத்திற்கு ஒரு அளவு வரையறுக்கப்பட்டு பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கப்படும்.

4. புதிய வாகனங்களைப் பதிவு செய்கின்ற செயலைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைக்கலாமென்ற யோசனையும் அரசுக்கு இருக்கிறது.

5. குறிப்பிட்ட பகுதியிலிருந்து அரசு அலுவலகங்களுக்குச் செல்ல என்று தனித்தனியாகக் கார்களைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு பொதுப் பேருந்துகளில் குறிப்பிட்ட நேரத்தில் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வசதியாக ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

குறிப்பாக, இப்போது அசோக் நகர் என்று எடுத்துக் கொண்டால் அங்குள்ள அலுவலர்கள் எல்லாம் அந்தப். பகுதியிலிருந்து பெரும்பாலும் வருகிறார்கள். அவர்கள் தனித்தனியாகக் காரிலே அலுவலகத்திற்கு வராமல் அனைவரும் ஒரு இடத்திலே வந்து பேருந்துகளின் மூலமாக அலுவலகத்திற்கு வரக்கூடிய அந்த வசதியைச் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

இதைபோலவே பெட்ரோல், டீசல் இவைகளை எப்படிச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதற்கு நாம் நிர்ணயித்துள்ள இந்த முடிவுகளைப் போலவே இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல இந்த வளைகுடாப் போருக்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்க முன் வந்துள்ளது. அதற்கு மத்திய அரசே பெரும் பொறுப்பு ஏற்று நடவடிக்கைகள் எடுக்க முன்வரவேண்டும் என்றாலும்கூட, மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு தன்னால் இயன்ற அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க இப்போது முன்வந்து இருக்கிறது. நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு வணிகர் சங்கங்களோடு கலந்து பேசி அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை என்னிடமும், மற்றும் அதிகாரிகளிடமும் நேற்றைய தினம் கலந்து பேசியதன் காரணமாக மக்கள் அன்றாட வாழ்வுக்குத் தேவையான இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்கு சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. அரிசியைப் பொறுத்தவரையில் பொது வினியோகத்திலே வழங்குவதற்கான அரிசி நம் கையிருப்பில் உள்ளது; வெளி மாநிலங்களிலேயிருந்து வணிகர்கள் அரிசி கொண்டு வரவும் தடை எதுவும் இல்லை. மேலும் பொதுவாக இந்த ஆண்டு சாகுபடி வழக்கமாக இருப்பது போலவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அரிசி விலை உயராமல் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

13-05 மணி

கோதுமையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு தமிழ் நாட்டிலுள்ள மாவு மில்களுக்கு மாதம் 60 ஆயிரம் டன் கோது மையை, நவம்பர், டிசம்பர் மாதம் வரையிலே அளித்து வந்தது. ஆனால், இப்போது அதை 50 ஆயிரம் டன்னாகக் குறைத்தது மாத்திரம் அல்லாமல் நடைமுறையையும் மாற்றி மில்களுக்குத் தரப்பட்ட அந்த கோதுமையைக் குறைத்து தனிப்பட்ட வியா பாரிகளுக்கும் மத்திய அரசின் சார்பில் ஃபுட் கார்ப்பரேஷன் சார்பில் கொடுக்கின்ற காரணத்தால் மைதாவினுடைய விலை இப்போது உயர்ந்து உள்ளது. இதைச் சுட்டிக்காட்டி, தேவை யான கோதுமையை நமக்கு வழங்க மத்திய அரசுக்கு இந்த அரசு முறையீடு செய்திருக்கிறது. எனவே, அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு மாவு மில்களுக்குத் தேவையான கோதுமையை அளிப்பதில் உள்ள இடர்ப்பாடுகள் நீங்கும் என்று நம்முடைய அரசு எதிர்பார்க்கிறது.



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

மண்ணெண்ணெய்—பொது விநியோக முறை மூலம் முறையாக இப்போது மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இப்போது பிரச்சினைகள் எதுவும் இல்லை. மத்திய அரசு வழங்குகின்ற ஒதுக்கீட்டைப் பொறுத்து நாம் அதனை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் தொடர்ந்து கிடைப்பதற்கு மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாமாயில்—சமையல் எண்ணெய் : இப்போது அதனுடைய விலை உயர்வு, அது கிடைக்காத நிலை காரணமாக நாமெல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். அதற்கு வியாபாரிகள் சொல்லுகின்ற காரணம், குஜராத் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் குறைந்த விளைச்சல் மற்றும் மத்திய அரசு வெளிநாடுகளிலேயிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்வதைக் குறைத்து விட்டது இரண்டாவது காரணம். மூன்றாவதாக, போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளது. அங்கே, விளைச்சல் குறைவாக இருப்பதும் தேவையான சமையல் எண்ணெயை இறக்குமதி செய்வதை மத்திய அரசு வெகுவாகக் குறைத்து இருப்பதும், போக்குவரத்துச் செலவு அதிகமானதும் சமையல் எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள கிராக்கிக்கும், கிடைத்தாலும் அது அதிக விலை விற்கின்ற நிலைக்கும் காரணங்களாக அமைந்துள்ளன. நவம்பர், டிசம்பர் மாதங்களில் மத்திய அரசிடமிருந்து பாமாயில், மாநிலத்திற்கு தரப்படவே இல்லையென்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனவரி மாதத்திற்கான பாமாயிலும் இதுவரையில் மாநில அரசுக்கு மத்தியிலேயிருந்து ஒதுக்கப்படவேயில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். விரைவில் பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டு ஓரளவிற்குக் கிடைக்கும் என்ற உறுதியை அண்மையிலே டெல்லியிலே நம்முடைய உணவு அமைச்சரும், உணவுத்துறைச் செயலாளரும் கலந்துகொண்ட அந்தப் பேச்சுவார்த்தையின்பொழுது, மத்திய அரசிலேயுள்ள அமைச்சர்கள் ஒரு உறுதியைத் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, நமக்கு விரைவிலே பாமாயில், அவர்கள் இறக்குமதி செய்வதையொட்டிக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பருப்பு வகைகளினுடைய விலைகளும் உயர்ந்திருக்கின்றன. குறைந்த விளைச்சல், அதிகப் போக்குவரத்துச் செலவு ஆகியவைகள்தான், இந்த விலை உயர்வுக்குக் காரணம், பிப்ரவரி மாதத்தில் சிலவகைப் பருப்புகள் அறுவடை முடிந்து சந்தைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் விலையேற்றத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பிற மாநிலங்களிலிருந்து துவரம்பருப்பு வாங்கி மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களின் மூலம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க முற்பட்டிருக்கிறது.

144899

டி2 53-363—15
V 2 11, 3 ( ' 9 9 )
N91·37·3

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

அதைப்போலவே காய்கறிகளினுடைய விலைகளும். இங்கே நம்முடைய பாண்டியன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல சில்லறைக் கடைகளில் மிகவும் உயர்ந்துள்ளது. பெருநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, காய்கறிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக சென்னை மாநகரத்தில் சுமார் 50 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வளவுக்குப் பிறகும் போரை, அதன் விளைவுகளைப் பயன்படுத்தி இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்பட்டாலோ, கடத்தப்பட்டாலோ, கலப்படம் செய்யப்பட்டாலோ, கொள்ளை இலாபத்திற்கு விற்கலாம் என்கின்ற எண்ணத்தோடு சமூக விரோதச் செயல்களிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய ரமணி அவர்கள்கூட இங்கே சொன்னார்கள், ''மிரட்டிக்கொண்டே இருந்தால் அதுவே ஒரு வாடிக்கையான விஷயமாக ஆகிவிடும், பிறகு யாரும் பயப்பட மாட்டார்கள் '' என்று .

13-10 மணி

மத்தியிலே உள்ள உணவு அமைச்சரவர்கள் நேற்றைய தினம் எனக்குத் தந்துள்ள டெலக்ஸில்,

'' GOVERNMENT HAVE RECEIVED REPORTS THAT SOME UNSCRUPULOUS TRADERS ARE TAKING ADVANTAGE OF THE GULF WAR AND INCREASING PRICES OF ESSENTIAL COMMODITIES WITHOUT ANY JUSTIFICATION. ARTIFICIAL SHORTAGES ARE BEING CREATED BY THE TRADERS IN SPITE OF ADEQUATE STOCKS OF COMMODITIES RESULTING IN ABNORMAL RISE IN PRICES. IN THE CIRCUMSTANCES, IT IS NECESSARY TO INTENSIFY DEHOARDING OPERATIONS. PLEASE ACTIVATE YOUR ENFORCEMENT MACHINERY AND MONITOR PRICE SITUATION ON DAY-TO-DAY BASIS. SELECTIVE ARRESTS, DETENTIONS OF NOTORIOUS BLACK-MARKETEERS, HOARDERS WILL HAVE A SALUTARY EFFECT ON THE PRICE SITUATION, SHALL BE GRATEFUL IF I KEPT INFORMED OF THE ACTION TAKEN IN YOUR STATE IN THIS REGARD ''

என்று, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய விவரத்தையும் மத்திய உணவு அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திக்கும், மாநிலத்திற்கும் தொடர்பு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தக் கலைப்பு வேலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் உணர வேண்டும் என்பதற்காக அதைச் சொல்கிறேன்.

இவைகளை அன்னியில் போலீசாரை வைத்து, காவல் துறையினரை வைத்து, இத்தகைய சமூக விரோதிகளைக் கண்டு பிடிப்பது என்பதைவிட, அப்படிக் கண்டுபிடிக்கின்ற நோத்திலேகூட, சில தவறுகள் ஏற்படுவதை உறுப்பினர்கள் அறிவார்கள். கண்டுபிடிக்கச் செல்கின்றவர்கள், நடவடிக்கை எடுக்கச் செல்கின்றவர்கள், சில நேரங்களில் வேண்டுமென்றே சிலரைக்



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கொடுமைக்கு ஆளாக்குகின்றார்கள் என்ற புகார்களும் வியாபாரிகளிடமிருந்து வரும். அதற்காக வணிகர்களுடைய கூட்டத்திலே அவர்களுடைய யோசனைப்படி ஒரு முடிவை அரசு எடுத்து இருக்கிறது. இன்றியமையாப் பொருள்கள் வாணிபத்திலே ஈடுபட்டுள்ள பல்வேறு மாநிலச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொண்ட குழுவை அரசு ஏற்படுத்த முடிவெடுத்துள்ளது. இந்தக் குழு நான் குறிப்பிட்ட இந்த முடிவு குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கும்; எடுக்கப்படுகிற நடவடிக்கைகளில் எத்தகைய சாதக பாதகங்கள் இருக்கின்றன என்பதையும் இந்தக் குழு அரசுக்குத் தெரிவிக்கும். அந்தக் குழுவிலே யார், யார் உறுப்பினர்கள் என்பது இன்னும் இரண்டொரு நாட்களில் மாநில அரசின் சார்பாக வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பேசிய பல உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளிலே உள்ள வறட்சிக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த உரையிலே வெறும் அரசியல் கருத்துக்களாக மாத்திரம் கூறிவிட்டுப் போய் விடுவதால், நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களும், அரசும் எப்படி விவாதித்து முடிவுகளை மேற்கொண்டிருக்கின்றன என்ற அந்தத் தேவை மக்களுக்குப் போய்ச் சேராமலே போய்விடும். எனவேதான் நான் இவைகளையெல்லாம் குறிப்பிட விரும்புகின்றேன்.

நடப்பு ஆண்டிலேயிருந்து ஒன்பதாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுமேயானால் நம்முடைய மாநிலத்திற்கு ஆண்டுக்கு 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஏற்கனவே இந்த அவையிலே நான் அதைப்பற்றி அறிவித்திருக்கின்றேன். 39 கோடி ரூபாய் இயற்கைச் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதை அவ்வப்பொழுது, அந்தச் சீற்றங்கள் ஏற்படுகின்ற நேரத்தில், நாம் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றோம். அதிலே மத்திய அரசினுடைய பங்கு 75 சதவீதம் அந்த 39 கோடியில். அதாவது 29.25 கோடி. மாநில அரசின் பங்கு 9.75 கோடி. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த 39 கோடி ரூபாய் போதுமானதாக இல்லை என்று நாம் மத்திய அரசினிடத்தில் முறையிட்டுக்கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும், இது ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரைகள், எனவே இதை மாற்றுவதற்கு இல்லை என்று பதில் வந்திருக்கிறது. ஒன்பதாவது நிதிக் குழுவைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தென்னக மாநிலங்கள் வெகுவாக ஒன்பதாவது நிதிக் குழுவினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய சிபாரிசில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் உ.பி.க்கு ஒதுக்கப்பட்டது. ராஜீவ் காந்தி காலத்திலே, அந்த அரசு இருந்தபொழுது ஒன்பதாவது நிதிக்குழு

தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. உத்தரப் பிரதேசத்திற்குக் கிட்டத்தட்ட 1900 கோடி. என்று—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் ஆயிரம் கோடியைத் தாண்டி ஒன்பதாவது நிதிக் குழுவிலே ஒதுக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு 40 கோடி. கர்நாடகத்திலே பொம்மை முதலமைச்சராக இருந்தார். அங்கே எதுவுமே ஒதுக்கப்படவில்லை. இப்படி ஒரு நிலை ஒன்பதாவது நிதிக் குழுவின் விளைவாக ஏற்பட்டதை மறந்திருக்க முடியாது. நமக்கு இந்த இயற்கைச் சீற்றங்களால் ஒதுக்கப்பட்ட ரூ. 39 கோடி போதாது என்று நாம் வாதிட்டும் கூட அவர்கள் ஒன்பதாவது நிதிக் குழுவின் சிபாரிசுகளை சுட்டிக் காட்டி, இதற்குமேல் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், நாம் இந்த 39 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பின்வரும் பணத்தை, பல்வேறு துயர்துடைப்புப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்;

13-15 மணி

1989–90-இல் சில மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை குறைவாகப் பெய்ததால், நடப்பு ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 3 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள் போடுவதற்கும், சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சந்திக்கும் பொருட்டும், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ளவும், மொத்தமாக ரூ. 22.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளுக்கென பின்வரும் தொகை ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பெருமழையால் ஏற்பட்ட சேதங்களைச் சீர்படுத்த ரூ. 80 இலட்சம்; சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. 2 கோடி. 2 கோடியே 80 இலட்சம் அன்னியில் தற்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் பின்வரும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பத்தூரில் சாலைகள் செப்பனிட ரூ. 30 இலட்சம்; இராதாபுரம் வட்டத்தில் ஏரிகள், சாலைகள் செப்பனிடும் பணிகளுக்கு ரூ. 46 இலட்சம்; சென்னை மாநகராட்சி சாலைகளைச் செப்பனிடுவதற்காக கூடுதல் தொகையாக ரூ. 5 கோடி. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறுபாசன ஏரிகளைச் செப்பனிட ரூ. 1.25 கோடி; தமிழ்நாட்டின் இதர பகுதிகளிலுள்ள சாலைகளைச் செப்பனிட ரூ. 3 கோடி; நீலகிரி மாவட்டம் மின்சார வாரியத்திற்குக் கூடுதலாக தொகை ரூ. 45 இலட்சம். எனவே மேலும் ரூ. 10.46 கோடி செலவிடப்படுகிறது. கடந்த ஆண்டு மழைக் குறைபாட்டினால் ஏற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 22.72 கோடி செலவிட்ட தொகையையும், நடப்பு ஆண்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 13.26 கோடியையும் சேர்க்க



மொத்தமாக ரூ. 35.98 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 39 கோடியில் ரூ. 3 கோடி மாத்திரம்தான் மிச்சம் இருக்கிறது இப்போது. இதனைப் பயன்படுத்தியும், மேலும் ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்து மொத்தமாக ரூ. 8 கோடி செலவில், சேலம் தர்மபுரி, வடாற்காடு-அம்பேத்கர் திருவண்ணாமலை—சம்புவராயர் போன்ற மாவட்டங்களில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட பாதிப்பையொட்டி வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதலாக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும். ஏற்கனவே வளர்ச்சித் திட்டத்தில் 10 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளும், அது போதாமல் மேலும் ஐயாயிரம் சொச்சம் ஆழ்துளைக் கிணறுகளும் கவர்னர் உரையில் படிக்கப்பட்டிருக்கின்றன. அஃதன்னியில் கூடுதலாக இந்த வறட்சிப் பணிகளுக்காக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும். மேலும் கிணறுகளை ஆழப்படுத்தவும், ஏற்கனவே போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளைச் செப்பனிடுவதற்கும், அத்தியாவசியம் எனத் தேவைப்பட்டால் லாரி மூலம் குடிநீர் வழங்குவதற்கும், குடிநீர்க் குழாய்களை நீட்டித்தல் போன்ற இதர பல்வேறு நிவாரணப் பணிகளுக்கும் இத்தொகை பயன்படுத்தப்படும். சாதாரணமாக வறட்சி நிவாரணப் பணிகள் மார்ச் மாதத்தில்தான் துவக்கப்படும். ஆனால் வறட்சி முந்திக்கொண்டு, முன்னரே துவங்கிவிட்ட காரணத்தினால், இப்போதே அந்தப் பணிகள் துவங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஃதன்னியில் இந்த அரசின் சமூக நலத் திட்டங்கள்—அதை விரிவாகப் பேச விரும்பவில்லை என்றாலும், ஒன்றிரண்டை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன்.—1989 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், இதுவரை ரூ. 17.30 கோடி செலவில், 34,595 பெண்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் வீதம் திருமண உதவித் தொகை இந்த அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில், இதற்கு நிதிநிலையில் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் உறுப்பினர்கள் இங்கே பேசியபோது, இது போதாமல் சில மாவட்டங்களில் சிரமம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். பற்றாக்குறை இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, இந்த உதவித் திட்டத்தின்கீழ் அதிகமான கோரிக்கைகள் வந்ததன் காரணமாக, இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 8 கோடி என்பதை ரூ. 10.5 கோடியாக உயர்த்தியுள்ளோம். அப்படி உயர்த்தியும்கூட தற்போது மேலும் கோரிக்கைகள் வந்துள்ளதால், மேலும் கூடுதலாக ரூ. 1.5 கோடி ஒதுக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மொத்தமாக நடப்பாண்டில் ரூ. 12 கோடி இத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அதேபோல், முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 200 வீதம் இந்த இரண்டாண்டில் 3,71,805 பேருக்கு, கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 7.44 கோடி அளவுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்தத் திட்டத்திற்காக 4 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் போதாதென்று தெரிகிற காரணத்தால் மேலும் 50 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பத் தலைவரை இழந்து வாடும் வறிய குடும்பங்களுக்கு 3,000 ரூபாய் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்காக 3 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நவம்பர், 1990 வரை 22,467 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்காக மேலும் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருப்பதால் இந்த ஆண்டு கூடுதலாக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு நடப்பாண்டில் 5 கோடி ரூபாயிலே இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13–20 மணி

நேற்று மாலையில் இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இன்சூரன்ஸ் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அதை ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்று கொஞ்சம் கோபமாகக் கூட நேற்றைக்குக் கேட்டார்கள். நண்பர் திரு. எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதே என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டம் நல்ல நோக்கத்தோடு தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் அது ஒழுங்காகச் செயல்பட வில்லை. அதை எம். ஜி.ஆர். ஆரம்பித்தார் என்பதற்காக நான் சொல்லுவதாகக் கருதிக்கொள்ளக்கூடாது.

அதைப் போலவே கழக ஆட்சி இருந்தபோது ஒரு திட்டம், உங்களுக்கு ஞாபகம் இருக்கும், தென்னை மரப் படம் எல்லாம் போட்டு கீழே தண்ணீர் ஊற்றினால் மேலே தேங்காய் விழும். அதைப்போல் நீங்கள் 10 ரூபாய் கட்டினால் உங்களுக்கு இவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்றெல்லாம் திட்டம் போட்டோம். அதிலே யாரும் சரியாகச் சேரவும் இல்லை; சேர்ந்தவர்கள் ஒழுங்காக, மாதாமாதமோ அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவையோ பணம் கட்டவும் இல்லை. அது தோல்வியடைந்துவிட்டது. அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தான் அந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள், கலைவாணர் அரங்கத்தில். அந்தத் திட்டம்



தோல்வியடைந்துவிட்டது. அந்தத் திட்டத்தினுடைய தோல்வியை முன்பிருந்த கழக அரசு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டி இருந்தது. அதைப்போலத்தான் இந்தத் திட்டம் 1984ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் கட்டவேண்டும். அப்படிக் கட்டுகிற தொகை ஒரு வருஷத்திற்கு 120 ரூபாய். ஆனால் அந்த 120 ரூபாயில் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடும். மீதம் உள்ள 75 ரூபாய் தனியாக வைப்பு நிதியில் வைக்கப்படும். அப்படி வைக்கப்பட்ட தொகைதான் உறுப்பினர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். இடையில் அவர்கள் இறந்துவிட்டால் 5,000 ரூபாய் அளவுக்கு அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்கும். இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டது மாத்திரமல்ல ; 31—3—89 வரையில் 14 இலட்சம் பேர் சேர்ந்து இருந்தார்கள். 14 இலட்சம் பேர் சேர்ந்திருந்தார்களே தவிர, அதிலே முறையாக மாதந்தோறும் சந்தா செலுத்தியவர்கள் சுமார் 4 இலட்சம் பேர்தான். 10 இலட்சம் பேர் பணம் செலுத்தவில்லை. 4 இலட்சம் பேர்தான் செலுத்தினார்கள். இந்தத் திட்டத்திலே சேர்ந்தவர்கள் இதிலே ஆர்வம் காட்டாத ஒரு சூழ்நிலையில் இத்திட்டத்தைத் தொடர வேண்டாம் என்று இந்த அரசு கருதி, இதற்கு மாற்றாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அந்தத் திட்டத்தின்படி இந்த 10 ரூபாய் பணம் கட்டாமலே, விபத்திலே ஒருவர் இறந்துவிட்டால் ஒரு தொழிலாளி இறந்துவிட்டால்—இதுவும் தொழிலாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான். எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம். அது பலன் அளிக்காத காரணத்தால் அதை மாற்றி அதே தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்க, விபத்தில் அவர்கள் மாண்டுவிடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி வழங்க 10,000 ரூபாய்த் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. அவர்கள் எந்த 10 ரூபாயும் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. எந்தெந்தத் தொழிலாளர்கள் என்றால் சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள், வண்டி கட்டுவோர், விலங்குகள் இழுக்கும் வண்டி ஓட்டுவோர், இரும்பு உலைக்கள வேலை செய்வோர். பொன், வெள்ளி வேலை செய்வோர், கூடை முடைவோர், கல் வெட்டுவோர், கல் செதுக்குவோர், பூச்சு வேலை செய்வோர், ஓட்டுவேலை செய்வோர், செங்கல் தொழிலாளி, கிணறு கட்டுவோர், கிணறு தோண்டுவோர், விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள், 2.5 ஏக்கருக்குக் குறைவான நிலம் உள்ளவர்கள். பதனீர் இறக்குவோர், வடிகால் தொழிலாளர்கள், பூச்சிமருந்து தெளிப்பவர்கள், பனை, தென்னை மரம் ஏறுபவர்கள், மீனவர்கள் —கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர் அல்லாத மீனவர்கள்— கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்கள், டிரக் ஓட்டுநர்கள், ஆட்டோ, ரிக்ஷா ஓட்டுநர்கள், தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள், முடி திருத்துபவர்கள்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

கைவண்டி இழுப்போர், மிதிவண்டி ஓட்டுநர், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், மட்பாண்டம் மற்றும் மண் பொம்மை செய்யும் குயவர், குலாளர், மற்றும் வேளாளர், வீடுகளில் பணிபுரிவோர், பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர் ஆகிய இவர்களுக்கெல்லாம் இத்திட்டத்தின்படி அவர்கள் விபத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் அளிக்கும் திட்டத்தின்படி இந்த இரண்டாண்டுக் காலத்தில் ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இவைகளை அன்னியில் நான் முதலில் குறிப்பிட்டது போல, குடும்பத் தலைவரை இழந்துவிட்டால், அந்தக் குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற வகையில் நான், உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், இந்த 2 ஆண்டுக் காலத்தில் 22,467 குடும்பங்களுக்கு இந்த 3 ஆயிரம் வீதம் தரப்பட்டிருக்கிறது. எனவே தான் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது போல அந்தத் திட்டத்தை நாம் நிறுத்தினாலும் கூட, இந்தத் திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். இதிலே அவர்களுக்குப் பணம் திருப்பித் தரப்பட்டதா என்று கேட்டார்கள். அவர்கள் இதிலே கட்டிய பணம்—சுமார் 14 லட்சம் பேர் என்று குறிப்பிட்டேன். அந்த 14 லட்சம் பேர், இறுதியாக வந்த விவரத்தின்படி மொத்தக் கணக்குகள் 13,66,663. சுமாராக 13.6 லட்சம் கணக்குகள், அதிலே முடிக்கப்பட்ட கணக்குகள் 9,57,663. பணம் வழங்கப்பட்டது. அதாவது, 9.58 லட்சம் பேர், இந்தக் கணக்குகளுக்குப் பணம் திரும்ப வழங்கப்பட்டு விட்டது. திருப்பி வழங்கப்பட்ட தொகை 8.58 கோடி ரூபாய் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஒரு ஆக்கப்பூர்வமான கேள்வியை எழுப்பி இந்தப் பதிலைப் பெறுவதற்கு எனக்கு உதவி செய்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13-25 மணி

அடுத்து மேலும் நம்முடைய வரவு-செலவுத் திட்ட உரை இங்கே வைக்கப்பட்ட பிறகு அதிலே சொல்லப்படுகின்ற நம்முடைய மக்களுக்குத் தேவையான பல திட்டங்கள், உறுப்பினர்கள் எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே என்னுடைய எண்ணங்களைச் சொல்ல வேண்டிய வாய்ப்பு விரைவிலே பிப்ரவரி 2-ம் தேதிக்குப் பிறகு ஏற்படும் என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினைகளை இந்த அளவோடு நான் நிறுத்திக் கொண்டு, ''அக்னிப் பிரவேசப்'' பிரச்சினைகளுக்கு நான் வருகிறேன்.

திரு. கோ. வீரையன் : பிப்ரவரி என்பதால் முன்னதாகச் சொல்கிறேன். அந்த வறட்சி பற்றிச் சொல்லும்போது புதுக்கோட்டை மாவட்டம் அதிலே விடுபட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைச் சேர்த்து சீர் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1991 சனவரி 25]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விடுபட்டிருந்தால், அது இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே பேசும்போது சொன்னார்கள். அவர் பேசிய அதே வாக்கியங்களை அவைக் குறிப்பிலிருந்து நான் எடுத்து முதலில் படிக்கிறேன்.

''முதலமைச்சரைப் பார்த்து, இந்த தேசத்திலே பாராளுமன்றத்திலே இருக்கின்ற பிரதமர் அவர்கள், 'இந்த நாட்டினுடைய இரகசியங்கள் வெளியே போய் விட்டன' என்று சொன்னால் அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்த அவமானமாக நாங்கள் நினைக்கவில்லை. இந்த நாட்டிலே உள்ள 4½ கோடி தமிழ்மக்களுக்கு விடப்பட்ட சவாலாகத்தான் நினைக்கிறோம். ஒரு நாட்டிலே முதலமைச்சர் என்ற முறையில், பிரதமர் அவர்கள் இரகசியங்களைச் சொல்கிறார்கள். அந்த இரகசியங்களை வெளியே சொல்லிவிட்டதாக பிரதமரே பாராளுமன்றத்திலே குற்றம் சாட்டுகிறார்''.

இதுதான் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஆற்றிய உரை. இதற்குத்தான் ''அக்னிப்பிரவேசம்'' செய்வதற்குத் தயாரா? என்று அவர்கள் கேட்டார்கள்.

பிரதமருடைய பேச்சு பாராளுமன்றத்திலே அமைந்த நாள் 10—1—1991. அன்றைக்கு அவர்கள் பேசும்போது இரண்டு, மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே முதல் கருத்துக்கு வருகிறேன். "If I say something to the Chief Minister of a State, is it proper that this Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this country" இது அவருடைய பேச்சிலே, ஒரு பகுதி. அதாவது இங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு, நான் பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்று நான் சொன்னதைப் போல, பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இது பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட்ட, எழுத்துக்கு எழுத்து தவறாத அந்த பிரதியாகும். "If I say something to the Chief Minister of a State, is it proper that this Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this country."

நான் எந்த இடத்திலும், இலங்கைப் போராளிகளின் மீது மாநில அரசின் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்றோ, வற்புறுத்தப்பட்டேன் என்றோ என்றைக்கும் பேசியதும் இல்லை. எந்த நிருபர்கள் பேட்டியிலும் அப்படி நான் சொன்னதும் இல்லை.

நான் சொன்னதெல்லாம் 15–12–1990-ல் கூட நிருபர்கள் என்னைச் சந்தித்துப் பேசியபோது, அவர்களிடத்திலே சொன்ன வாசகம். முரசொலியில் வந்ததை அப்படியே சொல்கிறேன். சந்திப்பு 15 ஆம் தேதி, முரசொலியில் வந்தது 16 ஆம் தேதி. சமீபத்தில் இலங்கைப் போராளிகளைப் பொறுத்தவரையில், மத்திய மாநில அரசுகள் கலந்து பேசித்தான் அந்த அடிப்படையில் தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படித்தான் சொல்லியிருக்கிறேன். மத்திய, மாநில அரசுகள் கலந்து பேசி, நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றுதான் சொல்லியிருக்கிறேனே அல்லாமல், நான் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டேன், பிரதமரால் என்று நான் என்றைக்கும் சொன்னது இல்லை. இதே செய்தி 16ஆம் தேதி 'இந்து' பேப்பரில் கூட வெளிவந்திருக்கின்றது.

13-30 மணி.

"Mr. M. Karunanidhi pointed out that the Prime Minister had not cited any instance where the State had failed to carry out the directives of the Chandra Shekhar Government. Even the current crackdown on Srilankan Tamil militants in the State had been the outcome of the discussions the State had with the Union Government." என்று 'இந்து'-விலும் வந்திருக்கிறது. பிரதமர் நிர்ப்பந்தப் படுத்தி இந்தக் காரியத்தைச் செய்தேன் என்று நான் எங்கேயும் சொல்லவில்லை. ஆனால் வேறு சில கட்சிக்காரர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்; நேற்று திரு. திருநாவுக்கரசு சொன்னார் அல்லவா? மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்காக மாநில அரசு இப்படி எல்லாம் செய்கிறது என்று. அதுமாதிரி வேறுசில கட்சிக்காரர்கள் பத்திரிகைகளில் அப்படி அறிவித்திருக்கிறார்கள். இலங்கைப் போராளிகளை நீங்கள் தனி முகாம்களிலே வைத்தது தவறு, அவர்களைக் கைது செய்தது தவறு. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது தவறு. இவை எல்லாம் நீங்கள் மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்காகச் செய்கிறீர்கள் ....

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அவர்கள், ஏதாவது ஒரு இரகசியத்தைச் சொல்லி, அதை முதலமைச்சர் அவர்கள் வெளியே சொன்னால்தான் தவறே தவிர, முதலமைச்சர் அவர்கள் ஒரு செயலில் ஈடுபடுகிறபோது அதற்கான விளக்கம் மக்களுக்குத்தான் சொல்லியாக வேண்டும். அப்போது முதலமைச்சர் சொன்னால்கூட அதில் தவறு இல்லை. " டைகர்ஸ் அரஸ்ட் " பண்ணப்பட்டபோது அது மறைக்கக்கூடிய செயல் அல்ல. அது வெளியே மக்களுக்குத் தெரிகிறது. முதலமைச்சர் சொன்னது ஒன்று........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரகசியத்தைப் பற்றி பிறகு கூறுகிறேன். நான் சொல்ல விரும்புவது பிரதமர் என்னை நிர்ப்பந்தித்தார்.





ஆகவேதான் இதைச் செய்கிறேன் என்று நான் சொன்னதாகப் பிரதமர் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறாரே, அது அவருக்குத் தரப்பட்ட தவறான தகவல். அவர் பத்திரிகைகளிலே பார்த்திருக்கலாம். அல்லது பத்திரிகைகளைக் கொண்டு போய்க் காட்டியிருக்கலாம். இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் நண்பர் ராமதாஸ் அவர்கள் கூட அதையே தான் சொன்னார். மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்குக் கருணாநிதி பணிந்து இலங்கைப் போராளிகள்மீது நடவடிக்கை எடுக்கிறார் என்று சொன்னார். திரு. திருநாவுக்கரசு கூட அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டதாக எனக்கு நினைவு. இவைகளை யாரோ எடுத்துக் கொண்டுபோய் பிரதமரிடத்தில் காட்டி நான் சொன்னதாக அவரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அவர் என்னை நிர்ப்பந்தப்படுத்தவில்லை, நான் பிரதமரைச் சந்திக்கப் போனேன். என்னோடு முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த திரு. மாறன் வந்தார். தலைமைச் செயலாளர் வந்திருந்தார். அதிகாரிகளுடன் உட்கார்ந்து பேசினோம். என்ன பேசினோம் என்பதை அடுத்த பகுதியைப் பற்றிப் பேசும்போது சொல்கிறேன்.

இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பிரதமரும், நானும் பேசியபோது எத்தகைய நடவடிக்கைகள்—இலங்கைப் போராளிகள் இங்கே வன்முறைகளில் ஈடுபடாமல் இருக்க, தேவையில்லாத பிரச்சாரங்களைத் தவிர்க்க, அங்கே பார்த்தோம், இங்கே பார்த்தோம் என்று எல்லாம் சொல்லப்படுகிற பிரச்சாரங்களைத் தவிர்க்க, எந்தப் போராளிகளாக இருந்தாலும், எல்.டி.டி.இ. ஆக இருந்தாலும் இ.பி.ஆர்.எல்.எப். ஆக இருந்தாலும்— பொதுவாக, கிராமங்களில் சென்று கொஞ்சம் இலங்கைத் தமிழில் பேசினாலே அவர்கள் எல்.டி.டி.இ. என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் இ.பி.ஆர்.எல்.எப். ஆகக் கூட இருக்கலாம், அவர்கள் டெலோ ஆகக் கூட இருக்கலாம். அவர்கள் பிளாட் இயக்கத்தைச் சார்ந்தவர்களாகக் கூட இருக்கலாம். ஈராஸ் ஆகக் கூட இருக்கலாம். யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பெயர் விடுதலைப் புலிகள்தான்.

நீங்கள் தினத்தந்தி பத்திரிகையைப் பார்த்தால் யாராக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக " விடுதலைப் புலிகள் " என்றுதான் வரும். அப்படித்தான் அவர்கள் போடுவார்கள். வேண்டுமென்றே போடுவது அல்ல. அப்படிச் சொன்னால்தான் மற்றவர்களுக்குப் புரியும் என்று " விடுதலைப் புலிகள் " என்றுதான் போடுவார்கள். எந்தப் போராளி இயக்கமாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் என்றுதான் போடுவார்கள். அதுபோல கிராமங்களில் லுங்கி கட்டிக் கொண்டு இலங்கைத் தமிழைப் பேசி விட்டால் அவர்கள் விடுதலைப் புலிகள் ஆகி விடுவார்கள். இந்தப் பிரச்சாரத்தைத் தவிர்க்கத்தான் அவர்களை எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டுமென்று விரும்பினோம். இதைச் சொல்கிற காரணத்தினால் வன்முறைகளை அவர்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25
13-35 மணி

செய்யவில்லையென்று நான் சொல்ல மாட்டேன். சில வன்முறைகளிலும் அவர்கள் ஈடுபட்டது உண்டு. இன்னும் சொல்லப் போனால் நம்முடைய காவல் துறையைக் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சவாலுக்கு இழுத்தது உண்டு. சில இடங்களில் அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டி, கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்ட போது—இங்கே சொன்னார் திரு. திருநாவுக்கரசு, கைது செய்வதாக இருந்தால் ஸ்பெசிபிக் குற்றத்திற்காக கைது செய்தால் போதாதா என்று. அப்படிக் கைது செய்யப்போனபோது, அவர்கள் சயனைடு குப்பிகளை வைத்துக்கொண்டு, உள்ளே வந்தால் அதைத் தின்று இங்கேயே மாண்டுவிடுவோம் என்று சொன்னார்கள். அதனால் காவல் துறையினர் எப்படியும் அவர்களை நெருங்க முடியாமல் தவித்தார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டதுண்டு. எனவேதான் எந்தப் போராளிகள் என்பதல்ல. எந்தப் போராளிகளாக இருந்தாலும் அவர்கள் வெளியிலே நடமாடுகின்ற காரணத்தால் இப்படிப் பிரச்சாரம் ஏற்படுகிறது. அவர்கள் இலங்கையில் நடத்துகின்ற அந்தப் போராட்டத்தை நாம் ஆதரிப்பது என்பது வேறு. ஒரு நல்ல தீர்வு அங்கே காணப்பட வேண்டும். அங்கேயுள்ள இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் தமிழ் ஈழத்து மக்களுக்கெல்லாம் நல்ல நிம்மதியான வாழ்வு, நிலையான வாழ்வு ஏற்பட வேண்டும்; அதற்கு நம்மால் என்ன உதவி செய்ய முடியுமோ மத்திய அரசு மூலமாக என்ன உதவிகளைச் செய்யச் சொல்ல முடியுமோ அவற்றைச் செய்ய நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். ஆனால், தமிழகத்தை வன்முறைக்களமாக ஆக்கக்கூடாது. இன்னும் ஒன்று, இலங்கையிலே புதிதாக ஒரு அரசைத் தமிழர்களுக்காக ஏற்படுத்துவதற்காக முனையும்போது, இங்கே இருக்கிற அரசை இழந்துவிட்டால், நான் முதலமைச்சராக இருக்கவோ, பேராசிரியர் அமைச்சராக இருக்கவோ. சாதிக்கோ, நாஞ்சிலாரோ, மற்றவர்களோ அமைச்சர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல, அது எங்கே போய்ச் சேரும் என்பதை எண்ணிப் பார்த்தால், 5 கோடி மக்களை அப்படிப்பட்ட தலைவர்களிடத்திலே கொண்டு போய் ஒப்படைக்க எங்களுக்கு மனமில்லை என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. யாரிடத்தில் கொண்டுபோய் ஒப்படைக்கப் போகிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அப்படி ஒப்படைத்தால் என்னவாகும்? பெரியார் செத்துவிடுவார், பெரியாரின் கொள்கைகள் செத்துவிடும். அண்ணா ஆயிரம் அடி குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிடுவார். அம்பேத்கார் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவார். சுயமரியாதைக் கொள்கைகள், தன்மானக் கொள்கைகள், சமூக நீதிக் கொள்கைகள் இவைகள் எல்லாம் ஒரு காலத்திலே தமிழ்நாட்டிலே உலவின என்று அகராதியில், வருங்காலச் சரித்திரத்தில் படித்துப் பார்க்கக்



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கூடிய இடத்திலேதான் வருமேயல்லாமல், அவைகளுக்கெல்லாம்
பிற்காலத்திலே நிச்சயமாக வாழ்வு இல்லாமல் போய்விடும்.
அவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான், எல்.டி.டி.ஈ.
யினர் இந்த அரசையோ, அவர்களை ஆதரிக்கும் எதிர்க் கட்சி
யினரையோ தர்மசங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது என்று நேற்று
கூடச் சொன்னேன். அதை மறந்துவிடக்கூடாது. அந்தப்
போராளிகளுக்குள்ளே என்ன நடக்கிறது? திருச்சியிலே
கொட்டாம்பட்டி என்ற ஒரு இடத்திலே அந்தப் போராளிகளுக்
குள்ளேயே எல்.டி.டி.ஈ. இல்லை அங்கே—அங்கே இருக்கிற
போராளிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ இயக்கத்தைச்
சேர்ந்தவர்கள். அவர்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் மோதிக்
கொண்டும், வெட்டிக்கொண்டும், குத்திக் கொண்டும் செத்துப்
போனார்கள். பிறகு அவர்களைப் பிரித்து வேறு இடத்திற்கு
அனுப்பினோம். இன்றுகூடப் பத்திரிகையிலே ஒரு செய்தியைப்
பார்த்தேன். இராமேஸ்வரத்திலே ஒரு கத்திக் குத்துச்
சம்பவம் நடைபெற்றுள்ளது. டெலோ இயக்கத்திற்குள்ளே.
இப்படி ஒரு சகோதர யுத்தத்தை அவர்களே நடத்திக் கொண்
டிருக்கிறார்கள். அகதிகள் முகாமிலே இருக்கிறவர்களால் கூட
சுமுகமாக இருக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் தமிழ்
நாட்டிலே வன்முறையை ஏற்படுத்தக் காரணமாக இருக்கிறது.
வேலூரிலே கொண்டு போய் நல்ல பராமரிப்போடு—கேரம் போர்டு
வேண்டுமென்று கேட்டால் கேரம்போர்டு; டி.வி. பார்க்க
வேண்டுமென்று கேட்டால் டி.வி.; ரேடியோ கேட்க வேண்டு
மென்று கேட்டால் ரேடியோ; இன்னும் சொல்கிறேன் இந்த
அவையிலே—சீட்டு ஆட வேண்டுமென்று கேட்டால் சீட்டுக்
கட்டு; அவர்களுக்கு நல்ல உணவு—இவ்வளவும் தரப்பட்டது.
எல்.டி.டி.ஈ.யினருக்கு மாத்திரமல்ல. புழலிலே இருக்கிற
ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆக இருந்தாலும் சரி, புதுக்கோட்டையிலே
இருக்கிற டெலோ இயக்கமாக இருந்தாலும் சரி, அத்தனை
இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நல்ல பராமரிப்போடு,
அவர்களைச் சிறைக் காவலர்கள் கண்காணிக்காமல், போலீசார்,
காவல் துறை நண்பர்கள் கவனிக்கவும், சிறை அதிகாரிகள் சென்று
அவர்கள் பராமரிப்புகளைக் கவனிக்காமல், தாசில்தார்
அளவிலே ஒரு அட்மினிஸ்டிரேட்டர் என்கின்ற ஒரு புதிய பதவி
உருவாக்கப்பட்டு அவர்களைக் கவனிக்கின்ற அளவிலேயும் ஏற்பாடு
கள் செய்யப்பட்டிருந்தும்கூட, வேலூரில் இரண்டு பகுதிகளைப்
பிரிக்க இடையிலே அமைக்கப்பட்ட சுவர் இடிக்கப்பட்டு, அந்தச்
சுவற்றிலுள்ள கற்கள் எல்லாம் எடுத்து வீசப்பட்டு, காவல்
துறையினர் காயப்படுத்தப்பட்டு, உள்ளே பரிமாறுவதற்குச்
சென்ற ஒரு போலீஸ் அதிகாரி பிடிக்கப்பட்டு, அவரை மீட்க
உள்ளே சென்றபோது அவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக்
கொளுத்துகின்ற முயற்சி நடைபெற்று, அங்கே பெண்களும்
இருக்க வேண்டுமென்று விரும்பி, குடும்பத்தோடு சென்ற அந்தப்
பெண்களுக்குப் பாதுகாப்பிற்காக இருந்த பெண் போலீசாரை
பர, பரவென்று உள்ளே பிடித்து இழுத்துச் சென்று, அவர்களை
மீட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்
திலே போய் முடிந்து ஒருவர் கொல்லப்படக்கூடிய சூழலும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இதே வன்முறைக் களமாக தமிழகம் ஆகக்கூடாது என்பதுதானே தவிர வேறு ஒன்றுமில்லை.

அவர்களுடைய உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கிறவர்கள்தான் இவைகளை எல்லாம் செய்யச் சொன்னார்கள் என்று சொல்லமாட்டேன். எந்த ஒரு இயக்கத்திலும் இருக்கிற தொண்டர்கள், கடைசி நிலையிலே உள்ளவர்கள், தலைவர்களைச் சந்திப்பதற்குக்கூட வாய்ப்பு அற்றுப்போனவர்கள், அவர்களாகவே சில காரியங்களைச் செய்துவிடுவார்கள். அதற்காக அவர்களுடைய உரிமைப் போராட்டத்தைக் களங்கப்படுத்த விரும்பவில்லை. அதைப் பற்றி இந்திய அரசு மேலும் அக்கறை எடுத்துக்கொண்டு, பேச்சு வார்த்தைகள் மூலமாக ஒரு சுமூகமான நிலைமையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் இங்கே வீற்றிருக்கக்கூடிய அனைவருடைய கோரிக்கை என்பதை நாம் மறந்துவிடவில்லை. இன்னமும்கூட இந்த அரசு அதைத்தான் இந்திய அரசுக்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் மறந்துவிடவில்லை. எனவே, பிரதமர் என்னை வற்புறுத்தி அதனால் செயல்பட்டேன் என்று நான் எங்கும் சொல்லவில்லை. பிரதமரோடு அமர்ந்து பேசி, மத்திய-மாநில அரசுகள் சேர்ந்து, இணைந்து எடுத்த முடிவுதான் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

13-40 மணி

அடுத்து நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுக்கு வர வேண்டுமேயானால், பிரதமர் என்ன பேசி இருக்கிறார் என்றால், அதே நாளில் அதே பேச்சின் தொடர்பாக "I have information that certain information that were just given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna." இது பிரதமருடைய பேச்சு. அப்படியே அந்தப் பிரதியைப் படித்து இருக்கிறேன். இங்கே 'இரகசியம்' என்று எங்கே குறிப்பிடுகிறார்? இன்பர்மேஷனுக்கும், சீக்ரெட்டுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு தொலைவானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர் குறிப்பிட்டது, 'I have information' எனக்குத் தகவல் வந்தது "I have information that certain information ha were just given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna." இதையும் சொல்லிவிட்டு, அவர் சொல்கிறார், Inspite of this, I have repeatedly stated that nothing will be done against the Government. அதையும் பிரதமர் அங்கே சொல்லி இருக்கிறார். அப்படி ஒரு இன்ஃபர்மேஷன் ஜஃப்னாவுக்குச் சென்றது தேச விரோதம் என்று பிரதமர் எண்ணி இருப்பாரேயானால், 'இந்த



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

சர்க்காரைக் கலைக்க மாட்டேன் என்று சொல்லி இருப்பாரா? 'தேசத் துரோகம்' என்று அவரே கருதவில்லை. முதலமைச்சருக்குச் சொல்லப்பட்ட ஒரு தகவல், 'இன்ஃபர்மேஷன்'. 'தகவல்' என்பது தான் சரியான தமிழ் என்று நான் கருதுகிறேன். சரியான பொருள் என்று நான் கருதுகிறேன். 'இன்ஃபர்மேஷன்' என்றால் 'இரகசியம்' என்று இருக்க முடியாது. 'சீக்ரெட்' என்று இருந்தால் தான் 'இரகசியம்' என்ற அந்தப் பொருள் வரமுடியும். எனவே 'இன்ஃபர்மேஷன்' தான். அவருக்குக் கிடைத்ததும் 'இன்ஃபர்மேஷன்'; அவர் எனக்குச் சொன்னதும் 'இன்ஃபர்மேஷன்'. அந்த 'இன்ஃபர்மேஷன்' யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களுடைய தலைமையகத்திற்குச் சென்று விட்டது என்று குறிப்பிடுகிறார். அப்படிப்பட்ட ஒரு 'இன்ஃபர்மேஷன்' நான் யாருக்கும் சொல்லவில்லை. யாருக்கும் தெரிவிக்கவில்லை. ஆனால் நானும் அவரும் பேசிக்கொண்டு, சில காரியங்களை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முடிவு எடுத்தோமோ, அவைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய நேரத்தில், அந்தத் தகவல்கள் வெளிப்பட்டுத்தான் தீரவேண்டும். இவைகளைச் செய்ய வேண்டும் என்று பிரதமரோ அல்லது மத்திய அரசோ எங்களைக் கட்டாயப்படுத்தவில்லை என்று நான் மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படவேண்டும் என்பதிலே நான் மிகுந்த நம்பிக்கை வைத்து இருப்பவன். 'எமர்ஜென்ஸி' நேரத்திலே கூட, கட்சியின் சார்பாக எமெர்ஜென்ஸியைத் தீவிரமாக எதிர்த்து அன்றைக்குத் தீர்மானம் நிறைவேற்றி, மாநாடுகள் நடத்தி, போராட்டங்கள் நடத்தி, கிளர்ச்சிகள் நடத்தி எமர்ஜென்ஸியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் 'சுவாசிக்கின்ற இடம்' இதுதான். என்று ஈ.எம்.எஸ். போன்றவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துகொண்ட அந்தக் காலகட்டத்திலே கூட Administrative side — நிர்வாக நிலையில் மத்திய அரசோடு மாநில அரசு அன்றைக்கே கூட ஒத்துழைத்து இருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் நானும், பிரதமரும் பேசிய பிறகு முதலாவது நடைபெற்றது ஒரு ஆலோசனைக் கூட்டம் என்றால், அடுத்தது அந்த ஆலோசனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டம். அதற்கு அடுத்து அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது. உதாரணமாக ஒரு தீவிரவாதி—'மிலிடன்ட்'—இலங்கைப் போராளியை ஒரு தனி முகாமிற்கு அழைத்துச்சென்று வைக்கவேண்டுமென்றால், அவரை அழைக்கச் செல்லும்போது அவர் வர மறுத்தால் — ரமணி இங்கே சுட்டிக்காட்டியதைப் போல அவர் வர மறுத்தால் — 'வந்து தீரவேண்டும்; இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் நாட்டுக்கு அனுப்பப்படுவீர்கள்' என்று சொல்ல வேண்டும் என்று நான் காவல் துறைக்குச் சொல்லி இருக்கிறேன். காவல் துறை அதைச் சொன்னால் தான் அவர்கள் அந்த முகாமிற்கு வருவார்கள் என்றால், காவல் துறை அதைச் சொல்லித்தான் தீர வேண்டும். அப்படிச் சொன்னது—ஏற்கனவே அவர்கள் பல

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

வயர்லெஸ்களை வைத்து, 1983 ஆம் ஆண்டிலே இருந்து பல வயர்லெஸ்களை வைத்து அவர்களுடைய தலைமைக்குப் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள் தமிழ்நாட்டிலே இருந்து; இப்போது இந்த ஆட்சியிலே கூட கடந்த இரண்டு மாதத்துக்கு முன்பு 2 அல்லது, 3 வயர்லெஸ் கருவிகள் இந்த அரசால் பிடிக்கப்பட்டு இருக்கின்றன—அந்த வயர்லெஸ் மூலம் அவர்கள் கேட்டு இருக்கலாம். 'எப்படி நீ சிக்கினாய் ? சிக்கலாமா?' என்று. 'என்ன செய்வது, சிக்காவிட்டால் எங்களை இலங்கைக்கே அனுப்பி விடுவதாகச் சொன்னார்கள்' என்று சொல்லி இருக்கலாம். இது தான் 'தகவலே' தவிர, இதைத் தவிர இந்தியாவின் வேறு இரகசியம் எதுவும் எனக்குச் சொல்லப்படவும் இல்லை ; நான் வேறு எந்த இரகசியத்தையும் வெளியிடவுமில்லை என்பதைத் தான் என்னுடைய 'அக்னிப் பிரவேசமாக' இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், தேசத் துரோக ஆட்சி என்று எல்லாம் இங்கே பேசப் பட்டது. ஜனநாயக நாட்டில், அவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, அப்படிப்பட்ட இரகசியங்கள் எதற்கும் இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மத்திய அரசினுடைய இரகசியங்களே கூட, ஆட்சி கலைக்கப் படப்போகிறது என்ற இரகசியம் கூட, 1976 ஆம் ஆண்டு அன்று காலையிலேயே எனக்குத் தெரிந்துவிட்டது. மாலையில் நான் விழாவிற்குப் போனபோது, விழா முடிந்து வரும்போது என்னுடைய காரிலேயே ஏறிக்கொண்டுவந்தேன். அப்போது அங்கிருந்தவர்கள் ஏனென்று கேட்டபோது, இன்னும் ஐந்து நிமிடத்தில் என்னுடைய கார் போகும். அது இப்போதே போகட்டும் என்று சொன்னேன். அதற்காக மத்திய அரசின் இரகசியத்தைச் சொல்லிவிட்டேன் என்று சொல்ல முடியாது. இவைகள் இரகசியங்கள் அல்ல. சில தகவல்கள் தான். நான் வேண்டுமென்றே பிரதமர் சொன்ன ஒரு இரகசியத்தை இந்தியாவிற்கு விரோதமாக அனுப்பவேண்டும் என்று எண்ணுகிற தேசத் துரோகியல்ல. நான் தேசத் துரோகி என்று இகழப்பட்டாலும் தேசத்திற்காகப் பாடுபட்ட பெரியாருடைய பரம்பரையில் வந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி). தேசத் துரோகி என்று அண்ணாவே அழைக்கப்பட்டார். ஆனால் அதே அண்ணாதான் இந்தியாவினுடைய விடுதலையை விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று பெரியாரை எதிர்த்துக்கொண்டு அன்றைக்குப் போராடி, பத்திரிகையில் எழுதி, அதைக் கடைப்பிடித்த அந்த அண்ணா அவர்களுடைய தம்பியாக இருப்பவர்கள் நாங்கள். நாங்கள் ஒருக்காலும் தேசத் துரோகத்திற்காக உடன்பட மாட்டோம்.

13-45 மணி

நண்பர் குமரி அனந்தன் அவர்களே சொன்னார்கள். எங்களைச் சொல்லுவது இருக்கட்டும். பேராசிரியரையோ, என்னையோ, மற்றவர்களையோ தேசத் துரோகி என்று சொல்லுவது இருக்கட்டும். அண்ணா முதலமைச்சராகப் பொறுப்



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

பேற்றவுடன் வீரவாஞ்சி—வாஞ்சிநாதனுக்கு ஒரு நினைவாக,
அவருடைய தியாகத்தின் நினைவாக அவருடைய மனைவிக்கு
ஏதாவது செய்யவேண்டும் என்று கருதி மாதா மாதம் 200 ரூபாய்
அந்த அம்மையாருக்கு அனுப்பி வைத்தார். அந்தப் பணம் போய்ச்
சேருவதற்குள் அந்த அம்மையார் இறந்துவிட்டார். அப்போது
குமரி அனந்தன் அவர்களே பல கூட்டங்களிலே பேசினார்கள்.
''தேசத் துரோகி கையால் அந்தப் பணத்தை வாங்கக்கூடாது
என்று அந்தத் அம்மையார் இறந்து விட்டார்'' என்று சொன்னார்
கள். அண்ணாவுக்கே அந்தக் கதி என்றால் எங்களைப் பற்றிச்
சொன்னால் என்ன ? கவலையில்லை. தேசத் துரோகிகளுடைய
இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்குமேயானால்
திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு பிரிவினையை விட்
டிருக்காது. 1962 ஆம் ஆண்டு பிரிவினைக் கொள்கையை விட்
டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். தேசத்திற்காக
சிறைச்சாலையில் நாங்கள் வாடியபோது, அடிப்பட்டபோது—
அண்ணா அவர்கள் வேலூர் சிறைச்சாலையிலும், நானும் பேரா
சிரியர் போன்றவர்களும் திருச்சி சிறைச்சாலையில் இருந்த
நேரத்திலேதான் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அந்த
நேரத்திலே வேலூர் சிறையில் இருந்த அண்ணா அவர்கள்
போராட்டத்தை நிறுத்திவிட்டு, '' நாங்கள் நேருவினுடைய
கரத்தைப் பலப்படுத்த தயார், '' என்று அறிவித்தார்கள். இந்த
இயக்கத்திற்கும் அப்படிப்பட்ட அறிவுரையைச் செய்தவர் அறிஞர்
அண்ணா ஆவார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்குக் குமரி
அனந்தன் அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, கவர்னருக்கு
நேராகப் படிக்கும்போது பல பெயர்களையெல்லாம் சொன்னார்
கள். தேசத் தலைவர்கள் எல்லாம் வாழ்ந்த நாடு என்றெல்லாம்
சொன்னார்கள். கட்டபொம்மனைச் சொன்னார். மருது
பாண்டியரைச் சொன்னார். வ. உ.சி.யைச் சொன்னார்.
அவர்களையெல்லாம் ஞாபகப்படுத்தியதே நான்தான். (மேசை
யைத் தட்டும் ஒலி) அதை மறந்துவிடக்கூடாது. விடுதலைக்குப்
போரிட்ட கட்டபொம்மனுக்கு 20 ஆண்டுக் காலம் ஆட்சி செய்
தவர்கள் இடிந்து போன கோட்டையை நிமிர்ந்து பார்த்தார்களா?
பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டையைக் கட்டியது நான் அல்லவா ?
மருது பாண்டியருக்கு திருப்பத்தூரிலே இன்றைக்கு நினைவகம்
எழுப்புவதற்குத் திட்டமிட்டு அந்தப் பணியை ஆரம்பித்து
வைத்திருப்பவன் நான் அல்லவா ? விடுதலை வீரர்களுக்கு மாத
ஊதியம் ரூ. 250 என்று இருந்ததை ரூ. 350 ஆக உயர்த்தி,
நானும், பேராசிரியர் அவர்களும் வள்ளுவர் கோட்
டத்திலே கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இரண்டு வாரத்
திற்கு முன்பு ரூ. 400 ஆக உயர்த்தியிருப்பது
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். இதன்
மூலமாகப் பயன்பெறும் தியாகிகள் 6,681 பேர். விடுதலைப்
போராட்டம், எல்லைப் போராட்டங்களில் கலந்து கொண்ட
தியாகிகள் இறந்துவிடுவார்களேயானால் அவர்களுடைய

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

குடும்பத்தினருக்கு உடனடியாக ஈமக்கடன் செய்வதற்காக ரூபாய் ஆயிரம் தரவேண்டும். தாசில்தார் பதவிக்குக் குறையாத ஒருவர் சென்று மலர் வளையம் வைக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருப்பது இந்தியாவிலேயே இந்த ஆட்சியில் தான்.

13–50 மணி

காமராஜருடைய தொண்டர் வைரவன் என்று ஒருவர் இருந்தார். அவரை மறந்து போய் இருப்பார் குமரி அனந்தன். காமராஜர் மறைந்த பிறகு இந்த 13 ஆண்டுக் கால ஆட்சியில் அவர் என்ன ஆனார்? திருமலைப் பிள்ளைத் தெருவில் காமராஜ் வீட்டுக்குப் பின்னால் ஒரு சிறிய வீட்டில் அவர் குடியிருந்து வந்தார். தன்னுடைய குழந்தைகள், மனைவியோடு குடியிருந்தார். அந்த வீட்டிலிருந்து வைரவன் துரத்தப்பட்டார். வீடு, வாசல் இல்லாமல் அவர் தவித்தார். திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு நண்பர் நாத்திகம் இராமசாமி அந்த வைரவனை அழைத்து வந்து அவருடைய பரிதாப நிலைமையைச் சொன்னார். அவருக்கு உடனடியாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக ஒரு வீடு கொடுக்கப்பட்டது. அது மாத்திரமல்ல. காமராஜ் நினைவகத்திலே மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வைரவனுக்கு ஒரு வேலையும் கொடுக்கப்பட்டது. காமராஜருடைய அத்தியந்தத் தொண்டர், சீடர், உயிருக்கு உயிராக கூடவே இருந்தவர். அவரையும் மறந்துவிட்டார்கள். விடுதலைப்போராட்ட வீரர் பரலி நெல்லையப்பர், 1970ல் தி.மு.க. ஆட்சியில் அப்போது இருந்த பண மதிப்பில் மாதம் ஒன்றுக்கு மாத ஊதியமாக ரூ. 100 அவருக்குத் தரப்பட்டது. தற்போது அவருடைய மகள் பூங்கோதைக்கு, அவருடைய கோரிக்கையை ஏற்று 16—10—1989 முதல் ரூ. 500 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. நாங்கள் தேசத் துரோகியாம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுடைய பேத்தி சேதுலட்சுமிக்கு இந்த அரசு 9—3—1989 முதல் 31—7—1989 வரையில் மாதம் 250 ரூபாயும், 1—8—1989 முதல் 350 ரூபாயும் ஓய்வூதியமாக வழங்கிக்கொண்டு இருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவரும், அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டிக்கிறது இந்த ஆட்சியில் தான்.

வ.ரா. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? வ. ரா. பற்றி காங்கிரஸ்காரர்களே, ஞாபகம் இருக்கிறதா? அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று அண்ணா அவர்களால் போற்றப்பட்ட வ.ரா. காங்கிரஸ் பேரியக்கத்தின் முதுபெரும் தொண்டர் ஆவார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைச்சாலையிலே வாடியவர். அவரை மறந்து விட்டார்கள்.



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

அவருடைய மனைவியாரை அழைத்து, மாதம் ரூ. 1,000 ஓய்வூதியம் தருகின்ற அரசு இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டிலிருந்து தரப்படுகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி ஸ்ரீபாதசங்கர். அவருக்குப் புற்றுநோய் சிகிச்சைக்காக பொது நிவாரண நிதியிலிருந்து அண்மையில்தான் ரூ. 5,000 வழங்கப்பட்டது.

காமராஜருடைய தமக்கை நாகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 உதவித் தொகை வழங்கப்பட்டது. அவருடைய பேத்திக்கு நானே முன்னின்று தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்து, திருமணச் செலவையும் ஏற்றுக்கொண்ட அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பல காங்கிரஸ்காரர்கள் அந்தத் திருமணத்திற்கு வரவேயில்லை.

அண்மையில் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரர் ''சுப்பிரமணிய சிவா மாளிகை'' என்று பெயர் வைத்தோம். அதுவும், திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று. அவரும் சேர்ந்து அவையிலிருந்து போய்விட்டார். அதைப்போல அங்கே அந்த வளாகத்திற்கு ''வேலுநாச்சியார் வளாகம்'' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு ''குமாரசாமி ராஜா நகர்'' என்று பெயர் சூட்டப்பட்டது. அப்படி ஒரு பெயரே காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது— குமாரசாமி ராஜா என்று ஒரு முதலமைச்சர் இருந்தார் என்று. காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு குமாரசாமி ராஜா நகர் என்று பெயர் சூட்டப்பட்டது. அதேபோல, சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு, ''அன்னை சிவகாமி அம்மையார் வளாகம்'' என்று பெயர் சூட்டியவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சொல்கிறார்கள் தேசத் துரோகி என்று.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு ''தியாகி சுந்தரலிங்கம் வளாகம்'' என்றும், ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு '' புலித்தேவன் மாளிகை '' என்றும் பெயர் சூட்டப்பட்டது.

இங்கே இருக்கிற, தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட பத்தடுக்கு மாளிகைக்கு, கட்டி முடித்த இந்த 13 ஆண்டுக் காலத்தில் எந்தப் பெயரும் வைக்கப்படவில்லை. மீண்டும் இந்த ஆட்சி வந்த பிறகு, கட்டியவன்தான் பெயர் வைக்கவேண்டுமென்ற விதியின்படி, '' நாமக்கல் கவிஞர் மாளிகை '' என்ற பெயர்

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 25

சூட்டப்பட்டது. எங்களைப் பார்த்து தேசத் துரோகிகள் என்று சுலபமாகச் சொல்லி விட்டார்கள். ஒரு கருத்தை உங்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் அச்சியற்றப்பட்ட கருத்து. இது ஒருவருடைய உரை.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞரைப் பற்றி என்ன சொல்கிறார் என்று காலையில் தாள்களைப் புரட்டிப் பார்த்த நேரத்தில், அவர் சொல்லியிருக்கிறார் : கழகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் என்னை முழுக்கத் தெரிந்தவர்கள் தான், ஆனால் என்னை முற்றிலும் முழுக்க முழுக்கத் தெரிந்தவர் கலைஞர்தான்'' என்று அவர் எழுதியிருக்கிறார். பேராசிரியர் போன்றவர்கள் எல்லாம், தங்களுடைய வயதுக்கு இளையோர்களை வாழ்த்துகிறார்கள் என்று சொன்னால், வாழ்த்துவதற்குரிய அற்புதமான ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார் என்பது தான் காரணம். அவருக்கு வந்த துன்பங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்னால், அவரைத் துன்புறுத்த வேண்டுமென்று பலர் நினைத்ததையெல்லாம் நான். பார்த்திருக்கிறேன். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவருடைய ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜரால் போற்றப்படுகின்ற தலைவர்கள் சொன்ன நேரத்தில் கூட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற கலைஞர் ஆட்சியைக் கலைக்கக் கூடாது என்று பெருந்தலைவர் காமராஜரே சொன்னாரே, அதைப் பக்கத்தில் இருந்து கேட்டவன் மட்டுமல்ல, எல்லாப் பக்கங்களிலும் எடுத்துச் சொல்கின்ற பணியை மேற்கொண்டிருக்கின்ற தொண்டன் என்ற காரணத்தால் சொல்கிறேன், அவருடைய ஆட்சி கலைக்கப்படுவதை காமராஜர் விரும்பவே இல்லை. ஏற்கெனவே எத்தனையோ பேர் எங்கெங்கேயோ, எதை எதையோ சொன்னாலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்று விரும்பவும் இல்லை, அவர் உயிரோடு இருந்தவரை இந்த ஆட்சி கலைக்கப்படவும் இல்லை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்''. இதைச் சொன்னவர், குமரி அனந்தன். (மேசையைத் தட்டும் ஒலி) 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் தேதி நடைபெற்ற எனது 60வது பிறந்த நாள் விழாவில் அவர் ஆற்றிய உரை இது. இவர்கள் சொல்கிறார்கள் தேசத் துரோகி என்று. அவர்கள் சொல்கிற காரணத்தால் நான் தேசத் துரோகியாக ஆகிவிட மாட்டேன்.

13.55 மணி

இன்னும் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசில் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு கூட எந்தவிதமான கட்சிக் கண்ணோட்டத்தோடும் எதையும் அணுகவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சிக்



1991 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கடிதத்தை எழுதினார்கள். நீங்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய மகன்களுக்கு மாத்திரம் தான் இப்போது மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி ஆகியவற்றில் இடம் தருகிறீர்கள்: சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எல்லாம் வாழ்ந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது. இப்போது அவர்களுடைய மகன்கள் என்றால் அவர்கள் எல்லாம் 40, 50 வயது கடந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பேரன், பேத்திகளுக்கு வழங்க வேண்டும் : அந்த விதியைத் திருத்த வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக அதை ஏற்றுக் கொண்டேன்.

சென்ற ஆண்டில் திரு. செங்கல்வராயன் அவர்களுடைய பேத்திக்கு,—செங்கல்வராயன் என்பவரையே பல காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது, திரு. கே. விநாயகம் அவர்களுடைய பேரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம். இந்த ஆண்டு திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடுவின் பேரன் ரவிக்கு, திரு. டி.கே. சண்முகம் அவர்களின் பேத்தி அலமேலு மீனாவுக்கு, திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களுடைய பேத்திக்கு, மணலி கந்தசாமி அவர்களுடைய பேரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தந்த ஆட்சி தேசத் துரோகிகளாக இருக்கிற எங்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தேச பக்தி என்றால் விலை என்ன என்று கேட்பவர்கள் எங்களைப் பார்த்து தேசத் துரோகிகள் என்று கூறுகிற ஒரு காலம் இன்றைக்கு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் தேசத் துரோகி என்று சொல்லியாவது இந்த ஆட்சியைக் கலைத்து விட முடியாதா என்பது தான். நேற்றைக்கு, தம்பி மோகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். யார் யாரையெல்லாம் தேசத் துரோகிகளாக ஆக்கி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதற்காக இன்றைக்கு அவர்கள் சட்டம் - ஒழுங்கு, அமைதி சீர் குலைவதற்காக எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றியும் இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசிய நண்பர் வரதராசன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் நேற்று முன்தினம் பேசியிருக்கிறார். இப்படிப் பல பேர் இங்கே பேசியிருக்கிறார்கள். எல்லோரும் பேசியிருக்கிறீர்கள். ஆனால் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தச் சாலை மறியல் போராட்டம் எதற்காக நடைபெறுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவோம். சாலை மறியல் போராட்டத்திற்கு முதல் நாளோ, மறு நாளோ இந்த ஆட்சி கலைந்து விடும் என்று எதிர்பார்த்து இந்தக் காரியம் இப்போது நடைபெறுகிறது. இதிலே தொண்டர்களைத் தூண்டி விடுவதற்காகச் சென்றிருக்கிற முன்னணித் தலைவர்கள் என்னென்ன பேசினார்கள் என்ற தகவலும் அரசுக்குக் கிடைத்து இருக்கிறது. ஏற்கெனவே கருணாநிதியின் தலையை வெட்ட வேண்டுமென்று கூறிய தலை வெட்டித் தம்பிகள் எல்லாம் என்ன பேசியிருப்பார்கள்

என்று நான் சொல்லத் தேவையில்லை. கருணாநிதி ரயி
லடியிலிருந்து வெளியே போகக் கூடாது, அங்கேயே பிணமாகி
விட வேண்டும் என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான்
அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பிறந்தவர்கள் ஒரு
நாள் பிணமாகத்தான் ஆக வேண்டும். அதுவும் இந்த நாட்டி
னுடைய சட்டம் - ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற, தமிழ்
மக்களுக்காகப் பாடுபட்டதற்கு, பணியாற்றியதற்கு ஒரு பரி
சாக அது கிடைக்குமேயானால் நான் அந்தப் பரிசையும் பெறத்
தயாராக இருக்கிறேன். அதற்காக நான் அஞ்சவில்லை.
ஆனால் இன்றைக்குத் தமிழ் நாட்டு மக்களை ஏமாற்றி 28 ஆம்
நாள் சாலை மறியல்,—28 ஆம் நாள் உங்களுக்கெல்லாம் தெரி
யும். ஒவ்வொரு ஊரிலும் 4 கல்யாணமாவது, 10 கல்யாண
மாவது இருக்கிறது. அப்படிப்பட்ட முக்கியமான திருமண
நாள். அந்தத் திருமண நாளில் ஒரு சாலை மறியல் போராட்
டத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த
மறியல் போராட்டத்திற்குப் பிரச்சார நாள் எது தெரியுமா?
எம்.ஜி.ஆர். பிறந்த 17 ஆம் தேதி, அன்றைக்குப் பிரச்சாரம்
ஆட்சியைக் கலைப்பதற்கு. எம்.ஜி.ஆர். பற்றிப் பேச வேண்டிய
அவசியம் இல்லை. ஒரு கேடயம் தானே எம்.ஜி.ஆர். ?
அந்தப் பெயரை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியைக் கலைக்க
வேண்டுமென்று பேசுங்கள் என்று வெளிப்படையாக அறிக்கை
விட்டார்கள்.

அதைப் போலவே 25 ஆம் தேதி இன்றைக்கு. இன்று
மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகின்ற
நாள். இந்த நாளில் கூட நீங்கள் சாலை மறியலைப் பற்றித்
தான் பேச வேண்டும் என்று அவர்களுடைய சொற்பொழி
வாளர்களுக்குத் தாக்கீது, வெளிப்படையான அறிக்கை வெளி
யிடப்பட்டுள்ளது. நாம் இவ்வளவையும் சந்திக்கத்தான் போகி
றோம். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டினாலும், எவ்வளவு
வன்முறையைத் தூண்டினாலும், தமிழக மக்கள் அமைதியாக
இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்
போலவே ஆளும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள், முன்னணி
யினர், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்
டில் அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்று விரும்புகிற
வர்கள் அத்தனை பேரும் அமைதியாக இருக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஒரு கையும், இன்னொரு கையும்
மோதிக் கொண்டால் தான் சத்தம் கேட்கும். இங்கே பார்த்
தோம். கடந்த 4, 5 நாட்களாக நடைபெறுகின்ற சம்பவங்
களில் ஆளும் கட்சியினர் மிக அமைதியாக இருந்த காரணத்
தாலும், தோழமைக் கட்சியினர் மிக அமைதியாக இருந்த
காரணத்தாலும், பெரிய அமளிகள் உருவாகாமல் போனதை
நாம் பார்த்து இருக்கிறோம். இது சான்றாக அமைந்து
இருக்கிறது. அதைப் போலவே சாலை மறியலில் ஈடுபடுகிற
வர்கள் எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டி விட்டாலும்



திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப்போல, 10 பஸ்,
12 பஸ் ஒரு மாவட்டத்திற்கு எரிக்க வேண்டுமென்று
திட்டங்கள் இருந்தாலும் கூட, சட்டம்-ஒழுங்கு, அமைதியைக்
காப்பாற்றுவது எப்படி என்பதை இந்த அரசு சிந்தித்துச்
செயல்படும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு எல்லாம் நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

14-00 மணி

ஆட்சியைக் கலைக்கலாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
ஆட்சியைக் கலைக்கலாம் என்று எண்ணினால், அது மக்களுக்கு
விடப்படுகின்ற அறைகூவல் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். மக்களுடைய சுயமரியாதைக்கு விடப்படுகின்ற
சவால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்
றால், மக்கள் பார்த்து ஒரு ஆட்சியை உருவாக்கி இருக்கிறார்கள்.
அந்த ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்வது அந்த மக்க
ளுக்கு எதிராக விடப்படுகின்ற சவால். அந்தச் சவாலை மக்கள்
ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். இப்படிச் சொல்வ
தால் அந்தக் கிளர்ச்சிகளைப் பொதுமக்கள் பார்த்துக்கொள்ள
வேண்டும் என்ற அந்தப் பொருளில் நான் பேசவில்லை. சாலை
மறியலைக் காரணங்காட்டி வன்முறையைத் தூண்டுவதற்கு ஒரு
துளியும் இடம் தராமல் பொதுமக்களின் நலன்களைப் பாது
காக்கத் தகுந்த ஏற்பாடுகளை எல்லாம் இந்த அரசு செய்யும்
என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அதற்கான ஒத்துழைப்பை
அனைவரும் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,
இன்னும் பல விஷயங்களைப் பேச வேண்டும் என்று இருந்தாலும்
கூட, அவைகளை எல்லாம் வரவு-செலவுத் திட்ட பொது விவா
தத்திலே வைத்துக்கொள்கிறேன் என்று கூறி, நேரம் அதிகமாகி
விட்ட காரணத்தால், இந்த அளவில் உங்கள் அனைவருக்கும்
என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்த
அளவில் அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள்
இன்றைக்குச் சொல்லி இருக்கிறார்கள், விவசாயத்திற்குப் பம்பு
செட்டுகளை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு டீசலானது சீரான
முறையில் விநியோகம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கி
றார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், நீங்கள் ஏற்கெனவே மின்
சாரத்தை உபயோகிப்பவர்களுக்கு இலவசமாக அதை வழங்கி
இருக்கிறீர்கள். எனவே இவர்களுக்கும் ஏதாவது நிவாரணத்தை
அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

[1991 சனவரி 25

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

6. தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறித்து.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று, மீண்டும் 2—2—1991 ஆம் நாள் சனிக்கிழமை 11-00 மணிக்குக் கூடலாம் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 2—2—1991 ஆம் நாள், சனிக்கிழமை காலை 11-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 14-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

103. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 13—7—1990 ஆம் நாளிட்ட 321 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



1991 சனவரி 25]

104. தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 28—8—1990ஆம் நாளிட்ட 898 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 31—3—1989 ஆம் ஆண்டு முடியவுள்ள கால வரைக்கான அறிக்கை எண் 2 (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

106. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

107. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான இருபத்தொன்றாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

108. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

109. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

110. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

111. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்).

[1991 சனவரி 25

112. தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் 1989, 90 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

45. தமிழ்நாடு காவல் ஆணைக் குழுவின் அறிக்கை, 1990. (தமிழ், ஆங்கிலம்).

46. மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை (1990-91). (தமிழ்).

144899